ஜனவரி 2016
OLIARAZI
மகளிர் மாத சஞ்சிகை

# ஒளி அரசி

நல்லதொரு குடும்பம்
இதழ் 02
ஒளி 03
பக்கங்கள் : 68 + VIII

இல்லத்தரசிகளின் தோழி

ரூபா 75

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வெற்றி + பொழுதுபோக்கு

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு




PRO
DIGITAL PRINTING
All Your Printing Needs
high Quality
printing
service
Digital Offset Printing
Graphic Designing
Personalized Gifts
Plastic Identity Cards
Digital Banner
Large format
Digital
Printing
indoor & outdoor
good quality banner
printing for you
A 50/54, Jampettah Street, Colombo - 13.
T 0112 447 399 E prodigitalprinting@ymail.com

# அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்

## தைமாத ஒளிஅரசி துளிர்கள்




பாசம்

'உதிர்வு'




முதலுதவி

நீங்கள் நலமா?




குடிசைக்குள் ஜனாதிபதி மைத்திரி

மாதவிடாய் கோளாறை சரியாக்கும் முள்ளங்கி!




புத்திசாலியியின் தீர்ப்பு

அழகுத் துளிகள்



நலம் தரும்
வேகநடை

நல்லதொரு உலகம் அமைப்போம்

குழந்தைகள் இணைய உலாவி

மேலதிக விசேட உள்ளடக்கங்கள் 67 ஆம் பக்கத்தில்

ஆசிரியர் பார்வையில்

# ஒளிஅரசி


மாதம் ஒரு முறை

ஜனவரி 01 - 31, 2016

நியூ விஷன் மீடியா சின்டிகேற் பிறைவேட் லிமிடட் - ஆசிரியர் குழுவால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**வடிவமைப்பு :**

என்.ஜெகா, எஸ். கஜரூபன்

**ஆசிரிய பீடம் :**

தொலைபேசி :

0114320695,0114321111

துரித அழைப்பு : 0718628369

தொலைநகல் : 0114322614

E-mail : oliarazi33@gmail.com

**விளம்பரப் பிரிவு**

0714273035, 0714114997

**பிரதிகளை பெற்றுக்கொள்ள :**

தலைமை அலுவலகம்

கொழும்பு : 0115737592

இதர மாவட்டங்கள்

வடக்கு : 0776569617

: 0718628379

வவுனியா : 0772772726

கிழக்கு : 0718724057

மலையகம் : 0718724056

**வருட சந்தா விபரம்**

ரூபா 720 (தபால் செலவு நீங்கலாக)

வெளிநாடு

**U.S.A - 30 $**

**U.K - 20 £**

**கடிதம், போட்டித் தொடர்புகளுக்கு :**

ஆசிரியர், 'ஒளிஅரசி'

இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.

**வட மாகாணத் தொடர்புக்கு:**

ஆசிரியர், 'ஒளிஅரசி'

உதயன் பணிமனை

இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.


## இருள் அகன்று மனிதம் மிளிர இன்றே திட்டமிடுவோம்



அகவை மூன்றை தொட்டுவிட அகம் நிறைந்து கரம் கொடுக்கும் வாசக நெஞ்சங்களே, அனைவருக்கும் ஆசிரியர் குழாம் சார்பில் வணக்கங்களுடன் இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

காலையில் பொங்கல் வைத்து உறவினரோடு பகிர்ந்துண்டு கொண்டாடி மகிழும் இனியதொரு நாளாக தைத்திருநாள் விளங்குகின்றது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது எமது ஆன்றோர் வாக்கு. நாம் வெறுமனே இருக்க வழி தானாகப் பிறந்துவிடுவதில்லை. உழைக்கும் ஒவ்வொரு உள்ளத்திற்கும் வாழ்க்கையின் வரங்கள் நிச்சயமாக கிடைக்கும் என்பது நிதர்சனமே. ஆனாலும் அதனைச் சரியாகத் திட்டமிடவேண்டிய கடப்பாடு எமக்கே உள்ளது. திட்டமிடாத எச்செயலும் இலக்கை அடைந்ததாக சான்றுகள் இல்லை.

தை பிறந்தால் வழி பிறக்கும் என எண்ணிவிட்டு காலங்களைக் கடத்தினால் அகவைகள் தான் ஏறுமேயொழிய வசந்தங்கள் கிடைக்காது. எமது சொல்லாலும் செயலாலும் நாம் முயற்சி செய்யவேண்டும். அடுத்த ஆண்டிற்கான செயற்பாடுகளை - வெற்றியின் வடிவங்களைச் சரியாகத் திட்டமிட வேண்டும். முதலில் உள்ளத்தில் தூய்மை வேண்டும். அதாவது, நல்ல சிந்தனைகள் தோன்றவேண்டும்.

சிந்தனைகளே செயல்களாகவும் செயல்கள் பழக்கவழக்கங்களாகவும் பழக்கவழக்கங்கள் கலாசாரமாகவும் கலாசாரம் அடுத்த தலைமுறையைக் காக்கும் மாபெரும் சக்தியாகவுமே உள்ளது. எங்கள் மீதான தவறுகளை அடுத்தவர் மீது சுமத்திவிட்டு நல்லவர்களாக காட்டிக்கொள்ளும் குணமே இன்று பலரிடம் காணப்படுகின்றது. முதலில் எமது உள்ளத்தின் குறைபாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதனைச் சரிசெய்ய முயற்சி செய்யவேண்டும்.

தாஸ்காலஸ்ஜனின் 'ஒரு மனிதன் பிறந்தான்' என்பது மனித மனங்களின் அபூர்வத்தை கூறும் ஒரு சிறந்த கதையாகும். ஒரு ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் மிகக்கொடூரமான குணங்கள் கொண்டவன். அவனைக் கண்டாலே ஊரில் உள்ள பெண்கள் ஓடி ஒளிந்துவிடுவர். ஒரு நாள் அவன் காட்டுவழியால் நடந்து வந்துகொண்டிருந்தான். புதர் ஒன்றிற்கு அருகில் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி பிரசவ வேதனையால் துடித்துக்கொண்டிருந்தாள். அவ்விடத்தில் அந்த முரடனைக் கண்டதும் அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அடக்கடவுளே இந்த சைத்தானா? எழுந்து ஓடக்கூட முடியாதே - என எண்ணினாள். அவளுக்கோ பிரசவ வலி தாங்கமுடியவில்லை. இக்காட்சியைக் கண்ட அந்த முரடனுக்கோ என்னசெய்வது எனப் புரியவில்லை. வாழ்வில் அவன் கண்டு அறியாத காட்சி அது. அப்பெண்ணோ வலியால் துடிக்கத்தொடங்கினாள். அவசரமாக அவளுக்குப் பிரசவம் பார்க்கத்தொடங்கினான். எதுவென்றே தெரியாத ஒன்றை அக்காட்சியின் நிலையை உணர்ந்து செய்யத்தொடங்கினான்.

குழந்தை பிறந்தது. அப்பெண் மயங்கிப் போனாள். அவசரமாக ஓடிச் சென்று அருகிலிருந்த தடாகத்திலிருந்து நீர் கொண்டுவந்தான். அவளது மயக்கம் தெளிவித்தான். நன்றியோடு கைகூப்பினாள் அப்பெண். இக்கதையின் தலைப்பு என்னவென்று பார்த்தீர்களா? ஒரு மனிதன் பிறந்தான் யாரும் இந்த உலகில் கெட்டவர்களாகவே பிறப்பதும் இல்லை, கெட்டவர்களாகவே வாழ்வதும் இல்லை. ஏதோ ஒரு சந்தர்ப்பம் தான்கெட்டவர்களாகவும் நல்லவர்களாகவும் நிர்ணயிக்கின்றது.

மனிதரிடம் மனிதருக்கு நம்பிக்கை தோன்றவேண்டும். மனிதனை மனிதன் மதிக்கக்கற்றுக் கொள்ளவேண்டும். மானிடத்தைப் போற்றவேண்டும். மனிதத்தைக் காக்கவேண்டும். இவற்றைப் புரிந்துகொண்டால் தவறுகள் மறைந்துவிடும். மகிழ்வு செழித்துவிடும். அழுக்குகளற்ற நல்மனதோடு மலரப்போகும் புத்தாண்டை வரவேற்போம். 2016 இனியதொரு ஆண்டாக மலர்ந்து ஒளி வீசட்டும் அனைவருக்கும்!

**- ஆசிரியர் குழு-**

# பாசம்

"அப்பா இன்னுமா புறப்படவில்லை." கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் சுந்தர். "இதோ, புறப்பட்டாச்சு" என்றவர் துரிதமாய் தனது உடைமைகளைத் தயார்படுத்தினார்.

இன்றோடு அப்பாவைப் பார்த்த கணக்கு ஆறுமாதம் முடிந்துவிட்டது சுந்தருக்கு. இரண்டாவது மகன் பூபதி வீட்டுக்குத்தான் இன்று பயணம்.

"ரேணு, அப்பாவை பஸ் நிறுத்தம் வரைக்கும் வழியனுப்பிட்டு வந்துறேன்."

"தொலைந்தது சனியன்" என்று மனதிற்குள் நினைத்தவளாய் "சரிங்க" என்று மகிழ்ச்சியாய் தலையை ஆட்டினாள் ரேணு.

சுப்பையாவுக்கு இருப்பது இரண்டே பசங்கதான். தன்னைக் கண்மணிப்போல காத்த கண்ணம்மாவும் நோய்ப் படுக்கையில் படுத்தவள் ஒரேடியாகப் போய்ச் சேர்ந்துவிட, அவர் ஓடாகத் தேய்ந்துவிட, மாடாக உழைத்த வீடு நிலங்கள் அனைத்தையும் விற்று இரு பிள்ளைகளுக்கும் சரிசமமாய் பகிர்ந்து கொடுத்துவிட்டார். அவர் செய்த பெரிய தப்பு, தனக்கென்று ஐந்து பைசாகூட வைத்துக்கொள்ளாமல் பிள்ளைகளின் போலி அன்பை உண்மை என்று நம்பியதுதான்.

இரு மருமகள்களுக்கும் ஓயாது கடைக்குச் செல்லவும், எடுபிடி வேலை செய்யவும் சோர்ந்துவிட்டார். மதியம் ஒரு நேரம்தான் உணவு. அதுவும் அளவுச் சாப்பாடுதான்.

மனமும், உடலும் ஒருசேர மிகவும் பலவீனமாகிவிட்டது. பெற்ற பிள்ளைகள் தகப்பனைப் பார்க்க ஆளுக்கு ஆறு மாதம் என்று பேரம் பேசினார்கள். இந்த வேதனையை நினைத்து மனம் பாரமாய் அழுத்தியது. கண்களில் கண்ணீர் அரும்பியது.

"உசிலம்பட்டி எல்லாம் இறங்குங்க" என்ற நடத்துநரின் குரல் கேட்டதும் சிந்தனையிலிருந்து விடுபட்டார் சுப்பையா.

"டேய் சுப்பு எப்படிடா இருக்க? ரொம்ப மெலிஞ்சு போய்ட்டியே. ஏதாவது உடம்பு சரி இல்லையா?" ஆதங்கத்துடன் கேட்கும் தனது சிறுவயது தோழன் குமரேசனைப் பார்த்து "அதெல்லாம் ஒண்ணுமில்லை" என்று பதில் அளித்தார்.

"சுப்பையா உன் நிலமைய நெனச்சுப் பார்க்கவே வேதனையா இருக்குது. நாம சிறு வயசுல இருந்து ஒண்ணாப் படிச்சு எல்லா செல்வாக்கோடும் ராஜாவாட்டம் வளர்ந்தோம். இன்னைக்குநீபெத்தபிள்ளைங்ககிட்டயே சீரழியிறத என்னால சகிச்சுக்க முடியல. அதுக்கு ஒரு வழி பிறந்தாச்சு இனிமே நீ எதுக்கும் கவலைப்படாதே. உன் கடைசிக்காலம் நிம்மதியா இருக்கும். இதோ உம் மகன் வீடு வந்தாச்சு. நான் கௌம்புறேன்" விடைபெற்றார் குமரேசன்.


உள்ளே நுழைந்ததுமே வரவேற்பு பலமாக இருந்தது. "வாங்க மாமா வாங்க" வாயெல்லாம் பல்லாக சங்கரி வரவேற்றாள். அவசரமாய் ஒரு நாற்காலி எடுத்துப் போட, குளிர்ந்த நீர்மோர் பறந்து வந்தது.

"பூபதி எங்கே?"

"அவரு இப்பதான் உங்களுக்கு மீன் ரொம்ப பிடிக்குமேனு வாங்கப் போயிருக்காரு. மொதல்ல வெந்நீர் வைக்கிறேன் களைப்புத் தீர குளிச்சுட்டு வாங்க. உங்களுக்குப் பிடிச்ச இடியப்பமும், மெதுவடையும் தயாராக இருக்கு."

சுப்பையாவுக்கு இவை எல்லாமே நம்பமுடியாமல் கனவுபோல் தோன்ற, ஏதோ ஓர் அதிசயம் போல் இருந்தது.

சுப்பையா வங்கிக் கணக்குல 50 ஆயிரம் ரூபா இருக்குண்ணு சுப்பையா மகன் பூபதிகிட்ட பொய் சொன்னதை நினைச்சு கலங்கிய கண்களோடு சென்றுகொண்டிருந்தார் குமரேசன். பெத்து வளர்த்தவங்களை காசுக்காகப் பார்க்கும் பிள்ளைகளுக்கு அதே நிலைமை வராமலா போய்விடும்? இன்றைக்கு எங்களுக்கு! நாளைக்கு உங்களுக்கு! வினையை அறுத்துதானே ஆகணும்.



# சேற்றில் கை



**த**மிழர்களின் பாரம்பரிய விழாக்களில் பொங்கல் பண்டிகை தான் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. இயற்கையோடு இணைந்ததாகவும், சமூக விழாவாகத் திகழ்வதுமே இதன் சிறம்பம்சமாகக் கொள்ளப்படுகிறது.

இது தமிழர்களின் பாரம்பரிய திருநாளாகும். தைப்பொங்கல் தைமாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகிறது. தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வடஅமெரிக்கா, தென்னாபிரிக்கா போன்ற தமிழர்கள் வாழும் நாடுகளில் கொண்டாடப்படும் ஓர் பண்டிகை. நிறைந்த விளைச்சல், செல்வம் ஆகியவற்றைப் பெற்ற மக்கள் இயற்கைக்கும் மற்றும் தம்மோடு உழைத்த கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் நாளாகும். அத்தோடு இந்த உலகத்து மக்கள் அனைவருக்குமே தோன்றாத் துணையாக இருந்து அவர்களுக்கு உதவி செய்து வரும் அதாவது நல்ல மழையைத் தந்து விளைச்சல் தந்தமைக்கும், சூரியபகவானுக்கும் நன்றி செலுத்தும் நாளாக இது அமைகிறது.

இத் தைப்பொங்கல் தினமானது நான்கு நாள்களாகக் கொண்டாடப்படுகின்றது. போகிப் பொங்கல், தைப் பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என்ற நான்குமே அவையாகும். போகிப் பொங்கலானது ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று, அதாவது பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுகின்றது. இது இந்திரனுக்குரிய விழாவாகும். அன்றைய தினம் வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள் , தேவையற்ற பொருள்கள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்பட்டு அடுத்தநாள் பொங்கலுக்கு வீடு தயார்ப்படுத்தப்படும். வீடு மட்டுமல்ல மனதிலுள்ள தீய எண்ணங்களும் அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்பது இந்தப் பண்டிகையிலுள்ள தத்துவமாகும்.

அடுத்த நாள் கொண்டாடப்படும் பண்டிகை தான் தைப்பொங்கல் தினம். தைபிறந்தால் வழி பிறக்கும் என்பதை உணர்த்தும் நாள். இது உழவுக்கு உதவிய சூரியக் கடவுளுக்கு நன்றி செலுத்தும் நாளாகும். அதிகாலையே எழுந்து நீராடி முற்றத்தில் மாக்கோலம் இடுவர்.

சாணத்தில் பிள்ளையாரும் பிடித்து வைப்பர். மாவிலை தோரணம் கட்டுவர். தலைவாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி புதுப்பானை வைப்பர் பொங்கல் பொங்கி வரும் வேளையில் குடும்பத் தலைவன், மனைவி மக்களுடன் கூடி நின்று பொங்கலோ பொங்கல் என உரக்கக் கூறி புது அரிசியை பானையில் இட்டு பொங்கல் பொங்குவான். புதிய மரக்கறிவகைகள், கரும்பு, பலகாரவகைகள் , பழங்கள் முதலானவற்றையும் சேர்த்து தனது முதற் பயனை கதிரவனுக்கு படைத்துப் பின், குடும்பத்தவருக்கும் வழங்கிய பின் தான், தான் நுகர்வான்.

இது தமிழரின் பண்பாடாக தொன்று தொட்டு உள்ள வழக்கமாக உள்ளது. அடுத்த நாள் உள்ள பொங்கல் மாட்டுப்பொங்கல் ஆகும். மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கலின் மறுநாள் தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகும். இது பட்டிப்பொங்கல் அல்லது கன்றுப்பொங்கல் என்றும் அழைக்கப்படுகிறது. இது உழவுக்கு உதவிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும் இருப்பதால் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகவும் இதைக் கொள்வர். மாட்டுப்பொங்கல் அன்று மாடு கட்டும் தொழுவத்தைக் கூட்டிப்பெருக்கிச் சுத்தம் செய்து கொள்வர். மாடுகளையும் குளிப்பாட்டி சுத்தம் செய்து அலங்கரித்துக் கொள்வர். அவற்றின் கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, கழுத்தில் சதங்கைகளும், சிறுமணிகளும் பதித்த வார்ப்பட்டைகளையும் கட்டி அலங்கரிப்பர்.

**விவசாயி சேற்றில் கை வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்கலாம்**

அதே போல் உழவுக்கருவிகளையும், விவசாயத்தில் பயன்படும் அனைத்துக் கருவிகளையும் சுத்தம் செய்து திருநீறு, சந்தனம், குங்குமம் வைத்துக் கொள்வார்கள். பின் காடுகள், தோட்டங்களில் விளைந்த பயிர்கள், கரும்பு ,பழம், சர்க்கரை, பூ, பொங்கல், ஆகியவற்றை வைத்துப் படைப்பார்கள். மனிதரைப் போலவே மாடுகளும் தம் உழைப்பின் பலனை உண்டு மகிழ்ந்து தலையாட்டும். மாட்டுக்கும் கரும்பு வழங்கப்படும். பின்னர் ஊர் இளைஞர்கள் சேர்ந்து மாடுகளைப் பிடித்துக் கொண்டு ஊர் முழுக்க ஜல் ஜல் இதுவே என்று சலங்கை ஒலி முழங்க, அவற்றை நடாத்திச் செல்வார்கள். அக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இவ்வாறு இது மாட்டுப்பொங்கலாக இன்று வரையும் தமிழ் மக்களிடையே நிலைபெற்றுள்ளது. தைப்பொங்கலில் நான்காவது நாளாகக் கொண்டாடப்படும் பண்டிகை தான் காணும் பண்டிகை ஆகும். இது பெரும்பாலும் இந்தியாவில் கொண்டாடப்படும் விழாவாகவே இருக்கின்றது. இந்தப் பொங்கலை கன்னிப் பொங்கல், காணும்பண்டிகை என்றும் அழைப்பர். உற்றார், உறவினர் நண்பர்களைக் காணுதல் மற்றும் பெரியோர் ஆசிபெறுதல் போன்றனவும் இடம்பெறும் பண்டிகையாக இது விளங்குகிறது. அத்துடன் உணவுப்பொருள்களையும் பகிர்ந்து கொள்வர். அதே போல் விளையாட்டுக்கள், பொழுது போக்கு நிகழ்ச்சிகள் போன்றவற்றிலும் ஈடுபட்டு மக்கள் மகிழ்ச்சியில் திளைப்பர்.

**எனவே விவசாயியை கீழ் தரமாகப் பார்க்கும் சில பணக்கார வர்க்கம் தைப் பொங்கல் தினத்தன்று பொங்கள் திருநாளை கொண்டாடும் போது தாமும் ஒரு விவசாயி என்பதை மறந்து விடக்கூடாது.**

**எனவே விவசாயிகளைப் போற்றி இத்தினத்தை கொண்டாடுவோமாக.**

சி. நற்குணலிங்கம்

இன்றைய காலத்தில் பெருகிவிட்ட முதியோர் இல்லங்கள் பல்வேறுபட்ட சோகங்களைத் தம்முள்ளே கொண்டுள்ளன. அவற்றின் பின்புலம் எதுவென ஆராய்ந்தால் அதன் பதில் என்னவாக இருக்கும் என்பது கேள்விக்குறியே. அத்தகையதொரு வலியின் வெளிப்பாடாகவே இம்மடல் பிரசுரமாகின்றது.

# எதற்காக இப்படியொரு தண்டனை

அன்பு மகனுக்கு,

நாமிங்கு நலமேயுள்ளோம், நீ அங்கு நலமா?

நீங்கள்இங்கு இல்லாவிட்டால் நான்நலமாகவே இருப்பேன் எனக்கூறினாயே, இப்போது நலமாகத் தான் இருப்பாய் என எண்ணுகின்றேன். எங்களுக்குத் திருமணமாகி பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் தான் நீ பிறந்தாய். ஏறாத கோயிலில்லை. வேண்டாத தெய்வமில்லை. ஆண்டவன் அருளால் வந்துதித்த தவப்புதல்வனென இறுமாந்து போனோம். உன்னை தாலாட்டிச் சீராட்டி வளர்த்தோம். நீ தடுமாறிச் சென்ற வேளைகளில் அன்பை மட்டுமே காட்டி வழிப்படுத்தினோம்.

பதின்ம வயதுப் பருவத்தில் நீ தந்த கஷ்டங்களோ எண்ணிலடங்காதவை. அவற்றை எல்லாம் பொறுத்து நல்ல சிந்தனைகளை ஊட்டி தவறான எண்ணங்களைச் சீரமைத்து அகத் தடைகளைச் சீர்செய்து புதிய வாழ்வுக்காய் இனிய வழிகாட்டி புதுமனிதனாய் உன்னை உருவாக்கினோம். மணக் கோலத்தில் உன்னைப் பார்த்து பூரித்து மகிழ்ந்தோம். எங்கள் பெருங்கடமையைச் சரியாய்ச் செய்ததாய் களிப்புடன் இருந்தோம். சில நாட்கள் மகிழ்வாய்த்தான் கழிந்தன----


திடீரென ஒரு நாள் ஒற்றை வார்த்தையில் எங்களை மௌனமாக்கிவிட்டு அழைத்து வந்துவிட்டாய் இங்கே. பேதலித்துப் பார்க்கிறோம். அட இது முதியோர் இல்லமா? உன் மீது நாங்கள் கொண்டிருந்த அளவற்ற பாசத்திற்கு நீ தந்த பரிசு இதுதானா மகனே? பேரப்பிள்ளைகள் உதைக்கக் காத்திருந்த எம்மை நீ உதைத்ததெப்படி? எப்படி மகனே உனக்கு மனசு வந்தது?

அளவற்ற எதிர்பார்ப்புகளுடன் ஏங்கி ஏங்கி உன்னை வளர்த்தது இதற்காகத்தானா? நீ செய்ததை உடல் தாங்கினாலும் உள்ளம் தாங்க மறுக்கிறதடா, நான் ஓரளவு தாங்கத் துணிந்தாலும் உன் தாய் எப்படித் தாங்குவாள்? உனக்குக் கருவறை தந்தவளுக்கு உன் வீட்டில் ஒரு இருட்டறை கூட உன்னால் கொடுக்க முடியவில்லையா? என் மனம் வெதும்பி அழுகிறது.

உனக்கு சமைத்த புது உணவைத் தந்து அனுப்பிவிட்டு எங்களுக்கு பழைய சோற்றை உன் மனைவி தந்தபோதும் நாங்கள் மௌனமாகத்தானே இருந்தோம். எங்கள் மருமகள் தானே என அனுசரித்துத் தானே போனோம்.

எதற்காக இப்படியொரு தண்டனை?

என் அன்பு மகனே, உன் பிள்ளைகள் தான் உன்னைத் திருத்தும், திருத்த வேண்டும். கடவுள் எல்லோரையும் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்திக்கொள். உன் பிள்ளைகள் உன்னை இவ்வாறானதொரு நிலைக்கு ஆளாக்காமல் பார்த்துக்கொள். அதுவே எனது பிரார்த்தனையாக உள்ளது. உன்னிடம் நாங்கள் கேட்பதெல்லாம் ஒன்று தான். நாங்கள் இறந்த பின்னர் தயவு செய்து எங்கள் உடல்களைக் கேட்டுவராதே. இவர்களே அடக்கம் பண்ணட்டும். என்றும் உன் நலனுக்காக இறைவனைப் பிரார்த்தித்து எமது மடலை நிறைவு செய்கின்றோம்.




இப்படிக்கு

முதியோர் இல்லத்திலிருந்து

அப்பா. அம்மா.

மனம் திறந்து பேசுங்கள் ✍ துளசி

# நீங்கள் நலமா?



**ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவர்களின் பிரச்சினையை எதிர்கொள்ளக்கூடிய தன்னம்பிக்கையும் வலிமையும் உண்டு. அந்த தன்னம்பிக்கையையும் வலிமையையும் மேலும் அதிகப்படுத்துவதே எமது நோக்கம். எமது ஆலோசனை தேவைப்படும் நபருக்கும் எமக்குமிடையே நடக்கும் ஒரு மனமார்ந்த நட்புடன் கூடிய கலந்துரையாடலே இதுவாகும். உங்களின் வாழ்வை சிறப்பாக்க மேலும் தன்னம்பிக்கையுடன் வாழ உங்கள் பிரச்சினைகளை நீங்களே தீர்த்துக்கொள்ள ஒளிஅரசியுடன் இணைந்திருங்கள்.**

1. எனக்கு வயது 19. எனது குடும்பம் மிகவும் ஒழுக்கமானது. நான் தற்செயலாக பஸ்ஸில் சந்தித்த ஒரு ஆசிரியர் என்னை விரும்புவதாக கூறினார். நானும் அதற்கு சம்மதித்தேன். எனது வீட்டில் இதனை அறிந்து எதிர்ப்பு தெரிவித்தனர். எனினும், நான் அவரை நம்பி A/L பரீட்சையையும் எடுக்காமல் அவருடன் எமது இடமான யாழ்ப்பாணத்தை விட்டு எனது பெற்றோரை பிரிந்து திருகோணமலைக்கு வந்துவிட்டேன். அவருடன் வந்தபிறகுதான் ஆறுமாதம் கழித்து அவர் திருமணமாகி இரு குழந்தைகள் உள்ளனர் என்பது தெரியவந்தது. அதேவேளை அவர் என்னை அடித்து துன்புறுத்தி வருகிறார். இந்த நிலையில் வீட்டிற்கும் செல்லமுடியாது. எனக்கு குழந்தைகளும் இல்லை. என்ன செய்வதென்ற பிரமையில் உள்ளேன். செத்துவிடலாமா என்று விரக்தியாக உள்ளது. அந்தவேளையில் உங்கள் இதழை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. என்ன செய்ய முடியும் என ஆலோசனை கூற முடியுமா?

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்யும் நிலையில்தான் உங்களின் நிலைமை தற்போது இருக்கிறது. இளமைப்பருவத்தில் பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக நடைபெறும் பல திருமணங்கள் ஆபத்திலேயே முடிவடைகின்றன. உங்களின் நலனில் பெற்றோர் கொண்டிருந்த அக்கறையையும் மீறி நீங்கள் தவறை செய்துள்ளீர்கள். ஆனாலும் அடுத்த கட்டமாக இனிமேல் நீங்கள் கோழைத்தனமான முடிவை எடுக்காமல் திடமான முடிவை எடுத்து உங்கள் எதிர்கால வாழ்வை காப்பாற்றிக் கொள்ளவேண்டும். நீங்கள் குறிப்பிட்ட அந்த நபர் வேறு திருமணமாகி இரு குழந்தைகளுக்கு தந்தை என்பதால் உங்களுக்கு குழந்தைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் நீங்கள் அவருடனான வாழ்வை முறித்துக்கொள்வதே சிறந்தது.

என்னதான் உங்கள் பெற்றோர் உங்களை வெறுத்து இருந்தாலும் நீங்கள் ஒரு பிரச்சினையிலிருந்து மீண்டு வரும்போது அவர்கள் அரவணைப்பார்கள். ஆனால் நீங்கள் தொடர்ந்தும் தவறு செய்யும்போது அவர்கள் அதனை ஆதரிக்கமாட்டார்கள் என்பதை கவனத்தில் கொள்க. எனவே, நீங்கள் உங்கள் பெற்றோர்களுடன் இணைந்து உங்கள் கல்வியை தொடர்ந்து எதிர்கால வாழ்விற்கு அத்திவாரமிடுவதே சிறந்தது.

மீண்டும் உங்கள் பெற்றோருடன் இணையும்போது சமூகத்தில் பல விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை உருவாகலாம். உங்களைப்பற்றி மற்றவர்கள் என்ன விமர்சனம் கதைத்தாலும் நீங்கள் சோர்ந்துவிடாதீர்கள். நீங்கள் செய்த தவறை உணர்ந்து திருந்தி வாழ கிடைத்த சந்தர்ப்பமாக எண்ணி மற்றவர்கள் எதிர்காலத்தில் உங்கள் திறமையை மெச்சும்படியாக நடந்துகொள்வது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. மனிதர்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் தவறுசெய்கிறார்கள்.

அந்த தவறை உணர்ந்து திருந்தி நல்லவர்களாக வாழ்ந்தால் மேலும் ஒரு தவறு உருவாகாது. பழைய வாழ்வை மறந்து புது வாழ்வை ஆரம்பியுங்கள். எம்முடன் தொடர்ந்து தொடர்பிலிருங்கள்.

2. நான் ஒரு அலுவலகத்தின் காசாளராக கடமைபுரிகிறேன். எமது அலுவலகத்தில் எனது மேலதிகாரியின் பாலியல் இம்சைகளை தாங்க முடியவில்லை. எதிர்த்துப்பார்த்தேன்; வேலையை பறித்துவிடுவேன் என வெருட்டுகிறார். வெளியே சொன்னால் என் கௌரவம் பறிபோய்விடுமோ என அச்சமாக உள்ளது. அவருடைய இம்சைகளை எவ்வாறு தடுப்பது?

இதுவே இன்றைய எமது சமூகத்தில் பிரச்சினையாக இருக்கின்ற மிக முக்கியமான ஒரு விடயமாகும். எவ்வளவுதான் இவற்றுக்கு எதிரான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினாலும் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் செயற்பாடுகள் சமூகத்தில் குறைந்ததாக தெரியவில்லை.

இவ்வாறானவர்களின் செய்கைகளை வெளிப்படையாக பகிரங்கப்படுத்துவது உங்களுக்கு ஆபத்தை கொடுக்கக் கூடும். எனினும், இவ்வாறானவர்களை நேரடியாக எதிர்க்கவேண்டும்.

அவர்களின் செய்கைகளுக்கு இசைந்து போகக்கூடாது. ஆரம்பத்திலேயே அவர்களுடனான உறவை முறித்துக்கொள்ள வேண்டும். அரச அலுவலகங்களாயின் இரகசியமான முறையில் பெண் மேலதிகாரிகளிடம் கூறி அவர்களின் ஆலோசனைகளைப்பெற்று உங்கள் சுய கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் முறையிட்டு நடவடிக்கை எடுக்கமுடியும்.

தனியார் அலுவலகங்களாயின் உங்களை பாதுகாக்கும் ஒரு அமைப்பின் ஊடாகவே நீங்கள் நடவடிக்கை எடுக்கும் முயற்சியை எடுக்க வேண்டும்.

ஏனெனில், சமூகத்தில் பெண்கள் தமது சுய கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டிய இக்கட்டானதொரு சூழலில் இருப்பதால் தமக்கு பிரச்சினைகள் ஏற்படாதிருக்கக் கூடிய வகையில்தான் எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வுகாண வேண்டியுள்ளது. மிகத் தொல்லை தருகின்ற பிரச்சினையாயின் பெண்கள் அமைப்பினருடன் தொடர்பு கொண்டு அவர்களின் ஆலோசனைகளூடாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

இவ்வாறான கீழ்த்தரமானவர்கள் மிகக் கடுமையாக தண்டிக்கப்படவேண்டும்.

மிக மோசமான வன்முறைகளாயின் சட்ட நடவடிக்கை எடுப்பதே சிறந்தது. உங்களால் முடிந்தால் எமது சஞ்சிகையை அவர் வாசிக்கக் கூடியவாறு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தால் அது சிறந்தது. ஆலோசனை வழங்க எமது சஞ்சிகைகள் உதவுவதுபோல தவறானவர்கள் தமது தவறுகளை திருத்தவும் இவ்வாறான சஞ்சிகைகள் உதவும்.

3. நான் ஒரு சிறுமி. எனது அப்பா இறந்துவிட்டார். தனிமையில் இருப்பதால் எனது அம்மாவுக்கு பல மிரட்டல்கள் தொடர்ந்தது. ஆனாலும் எனது அம்மா மிகசிறந்தவர். தளராமல் போராடினார். இதனால் அச்சுறுத்தல் மேலும் தொடர்ந்தது. இந்நிலையில் எனது தாயார் துணிந்து நின்று எதிர்ப்பதால்தான் பிரச்சினை அதிகரிக்கிறது என எண்ணி அந்த அச்சுறுத்தலிலிருந்து காப்பாற்ற நான் சிறுமியாகவிருந்தும் நெகிழ்வுப்போக்கை கடைப்பிடித்தேன். ஒற்றுமையாக பிரச்சினையை தவிர்க்க எண்ணினேன். எமக்கு எதிர்ப்பானவருக்கு நான் பிறந்தநாள் வாழ்த்துமடல் ஒன்றை அனுப்பினேன். ஆனால், அவர் நான் அனுப்பிய அந்த வாழ்த்து மடலை வைத்து எனது அம்மாவை அவமானப்படுத்திவிட்டார். இதனால் நான் மிகவும் மனமுடைந்துவிட்டேன். நான் செய்தது தவறா?

நீங்கள் செய்தது தவறு அல்ல. சிறுவயதிலேயே இவ்வாறான அனுபவ ரீதியான நல்ல சிந்தனைகள் இயல்பாக வருவது மிகவும் குறைவு. உங்களின் சிந்தனை உயர்ந்தது.

தந்தையை இழந்தும் தாயாரின் வளர்ப்பில் வளரும் உங்களின் சிந்தனை நல்லதாக உருவாகுவதற்கு நிச்சயம் நல்லதொரு குடும்ப சூழல் உங்களுக்கு இருக்கிறது என்பதே அர்த்தமாகும். இதனால் ஏற்பட்ட அவமானங்கள், கவலைகளை தூக்கி எறிந்துவிடுங்கள். உங்களுக்கான நல்லதொரு எதிர்காலத்தை நீங்களாகவே நற்பண்புகளுடன் அமைத்துக்கொள்ளும் சிறந்த பக்குவம் உங்களிடம் உள்ளது. அறிவுள்ள - பண்புள்ள எவரும் உங்கள் செயற்பாட்டை தவறாக கூறமாட்டார்கள். குழந்தை உள்ளத்தில் இது ஆழமான மனப்பதிவை ஏற்படுத்திவிடலாம்.

ஆனாலும் வெறுத்துவிடாதீர்கள். ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்'' என்பதற்கமைய தொடர்ந்து நீங்கள் நல்ல சிந்தனைகளுடன் வாழுங்கள். வாழ்வு வளம்பெறும்.

**குறிப்பு: அன்பு வாசகர்களே உங்கள் பிரச்சினைகளை எமக்கு எழுதி அனுப்பினால் உங்கள் விபரங்கள் வெளியிடப்படாது இரகசியம் பேணப்பட்டு உங்கள் கேள்விகளுக்கான ஆலோசனைகள் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.**

**உண்மைச் சம்பவம்** ✍ ஸஹீட். எச். சப்ரீன், சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் மருதமுனை.




வளர்ச்சியடைந்துகொண்டு வருகின்ற தொழிநுட்ப உலகிற்கு ஏற்ப அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்களும் அதிகரித்துக்கொண்டுதான் செல்கின்றன. மனிதன் தனது செயற்பாடுகளை இலகுவாக்கிக்கொள்வதற்காக தொழிநுட்பங்களைக் கண்டுபிடித்தான். ஆனால், அது இன்று அவனையும் மிஞ்சிவிட்டது. இதன் பின்னணியிலேயே தான் இன்று உலகம் எதிர்நோக்குகின்ற போக்குவரத்து நெரிசலும் காணப்படுகிறது. தனக்கு ஏற்பட்ட வாகன விபத்துக்கான இழப்பீட்டுத் தொகை மறுக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்த ஒருவரை

# "ஆபத்து நேரும் வரை குற்றம் அனைத்தும் சுற்றமாகும்"

## விபத்துக்களை தவிர்க்க நமக்கு நாமே பொலிஸ் ஆகவேண்டும்

சந்தித்தேன்.

தான் காலையில் ஒரு நாள் வேலைக்குச் செல்லும் போது தனது மகளையும், மனைவியையும் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்றிருக்கிறார். மனைவியை சந்தையிலும், மகளை பாடசாலையில் விடுவதற்காக சென்றுகொண்டிருக்கும் வழியில் ஒரு பெரிய லொறி ஒன்றுடன் மோட்டார் வண்டி மோதி பாரிய விபத்தொன்று நிகழ்ந்திருக்கிறது. மனைவி ஸ்தலத்திலேயே இறந்து விட்டார். மகளும் இவரும் பலத்த காயங்களுடன் வைத்திய சாலையிலே அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவருக்கு ஒரு கால் குணப்படுத்த முடியாமல் போய் விட்டது. சில நாட்கள் கழிந்ததும் இவர் ஒரு அரசாங்க ஊழியர் என்பதால் தனது கடமைக்காகச் செல்லும் வழியில் விபத்து நிகழ்ந்துள்ளது. எனவே, குறித்த விபத்துக்கான நஷ்டஈடு கோரி விண்ணப்பிக்க முடியும். இவரும் விண்ணப்பித்திருக்கிறார். இவரது மனைவி இறந்ததற்காக குறிப்பிட்ட தொகைப் பணம் இவருக்கு கிடைக்கப் பெற்றிருக்கிறது. ஆனால் துரதிஷ்டவசம், இவருக்கான நஷ்டஈடு மறுக்கப்பட்டுவிட்டது. தனது மனைவி இறந்தது ஒருபுறம், கால் இழந்தது ஒரு புறம், அநாதரவாக்கப்பட்ட மகள் ஒரு புறம் என்று துன்பப்பட்டவருக்கு இதுவும் பாரியதொரு சோகத்தைக் கொடுத்திருக்கிறது.

தனக்கு நஷ்டஈடு மறுக்கப்பட்ட காரணத்தை வினவியபோது, சற்று மனம் ஏற்றுக் கொண்டதாம். அரச உத்தியோகத்தரின் மனைவி அரச ஊழியருடன் சென்றுகொண்டிருக்கையிலே மரணித்திருக்கிறார் என்பதற்காக அவருக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், இவர் அரச ஊழியராக இருந்தாலும் சில போக்குவரத்து விதிகளை மீறியிருக்கிறார். இவருக்குப் பின்னால் இருவரை அமர்த்தியிருக்கிறார். அத்தோடு பின்னால் இருந்தவர்கள் தலைக்கவசமும் அணியவில்லை. இதற்கு மேலதிகமாக மனைவி மோட்டார் சைக்கிளின் ஒரு புறமாக தனது இரு கால்களையும் போட்டு உட்கார்ந்திருக்கிறார். இவ்வளவும் இவர் மீறிய போக்குவரத்து விதிகள்.

இருந்தபோதும் மனைவி இறந்துவிட்டார், இவருக்கு ஒரு கால் நீக்கப்பட்டுவிட்டது என்பதற்காகவும் விபத்துக்கான முழுத் தவறும் லொறி சாரதிதான் என்பதாலும் பொலிசார் இவருக்கு உதவுவதற்காக சில குற்றங்களை மறைத்து வாகனத்தில் இவரும் இவரது மனைவியும் மட்டும் தான் வந்ததாக அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றனர். இதனால் மனைவிக்கான நஷ்டஈடு கிடைக்கப் பெற்றிருக்கிறது. ஆனால், மனைவி தலைக்கவசம் அணியாததும், ஒரு புறமாக இரு கால்களையும் போட்டு அமர்ந்திருந்ததும் இவரால் பதியப்பட்ட குற்றமாக கருதப்பட்டதாலேயே இவருக்கான நஷ்டஈடு மறுக்கப்பட்டிருக்கிறது.

சிந்தித்துப்பாருங்கள், வீதிகளிலே பொலிஸார் எம்மை நிறுத்தினால் எவ்வளவோ திட்டுகிறோம், மனதால் ஏசுகிறோம். சட்டங்கள் அமுல்படுத்தப்படுவது முற்று முழுதாக நன்மைக்காகவே. ஆனால், நாம் அவற்றை வேண்டுமென்றே மீறுகிறோம். தவறு செய்வதனால் தண்டிக்கப்படுவது ஒரு புறமிருக்க இவ்வாறான இழப்புக்களை சந்திக்க நேர்ந்தால் என்னாவது? பாருங்கள், மோட்டார் வண்டியில் பின்னால் அமர்பவர் இரு கால்களையும் ஒரே பக்கத்தில் வைத்து அமர்ந்தார் என்பதற்காக ஒரு நஷ்டஈட்டு விண்ணப்பமே மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று எமது சமூகத்திலே குறிப்பாக வடக்கு, கிழக்குப் பிரதேசத்திலே ஒரு சாதாரண விடயமாக விளங்குகிறது. வடக்கு, கிழக்கிலே இரு புறமும் கால்களைப் போட்டு மோட்டார் வண்டியில் அமரும் பெண்கள் மிக மிக அரிது. அவ்வாறு அமருவது சிலருக்கு அசௌகரியமாக இருந்தாலும் அதுதானே சட்டம்.

எனவே, அன்பான இல்லத்தரசிகளே, விபத்துக்கள் என்பவை இயல்பானவை. அதனால் இடம்பெறுகின்ற உயிரிழப்புக்களை ஈடுசெய்ய முடியாதென்றாலும் இவ்வாறான சூழ்நிலைகளில் எமது சிறிய சிறிய தவறுகளால் நாம் மிகவும் மனவுளைச்சலுக்கு ஆளாகிறோம். எனவே, சிறிய விடயங்களாக இருந்தாலும் சரி அது சட்டமாக இருந்தால் அதனை உரிய வழியில் பின்பற்றுவதற்கு முயற்சிப்போம். அத்துடன் பத்திரிகைகளும், கூட்டமைப்புக்களும், நிதி அமைச்சும் இது தொடர்பான விழிப்புணர்வு, சிறிய சட்ட விடயங்கள் என்பவற்றை உரிய இலக்கு வழி முலம் மக்களுக்கு தெளிவுபடுத்த முன்வரவேண்டும்.

# "ஒளிஅரசி" சொல்லறிவுப்போட்டி

## 'ஒளிஅரசி' குறுக்கெழுத்துப் போட்டி இல. 25

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | 3 | |
| | 4 | | | 5 | | 6 | | |
| 7 | 8 | 9 | | 10 | | | | |
| 12 | | | 13 | | 14 | | | |
| | | 15 | | | | 16 | | |
| 17 | | | | | 18 | | | |
| | | 19 | | | | 20 | | |
| | 21 | | | | 22 | | 23 | |
| 24 | | | | | | | 25 | |

**போட்டி முடிவு திகதி 20.01.2016**

இடமிருந்து வலம்

1.சட்டத்திற்குப் புறம்பானது
2. உடலில் ஓடுவது
3. விக்ரம் நடித்த ஒரு படம்
4.இலங்கையின் தலைநகர்
6. மரத்தின் ஒரு பகுதி
7. வேற்றுமை
13. கண்ணைக் காப்பது
15. மணமாகாத பெண்ணை இப்படி அழைப்பர் இப்பெயரில் ராசியும் உண்டு.
16. விளைவு என்பதை இப்படியும் அழைப்பர் (திரும்பியுள்ளது)
18. வியாபாரம்
19. அரச வம்சத்துப் பெண்களைச் சுமப்பது
20. சிறிய போத்தலை இப்படிக் கூறுவர்
21. சோறு என்பதை இப்படிக் கூறுவர்
22. பாரதப் போருக்கு காரணமான பெண்
24. இராமாயணத்தில் செஞ்சோற்றுக்கடன் தீர்த்தவன்
25. கல்லில் வடிப்பது

மேலிருந்து கீழ்

1. கொடுக்கல் வாங்கல்
2. இலக்கு என்பதை இப்படியும் அழைப்பர்
3. நீரின் மூன்று நிலைகளில் ஒன்று
5.பழமையின் எதிர்
7. கனம்
8. பூமி
9. சாதகம் என்பதன் எதிர்
10. மனைவியின் சகோதரி (குழம்பியுள்ளது)
11. அலங்காரம்
12. மனைவி என்பது குழம்பியுள்ளது
13. துன்பம்
14. அண்டவெளியில் சுற்றிவருவது
15. இவர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்
17. கோலியாத்தை வென்ற சிறுவன்
23. உணர்வுகளில் ஒன்று

37 ஆம் பக்கத்தில் உள்ள கூப்பனைப் பயன்படுத்துக.

### இல. 23 இல் ரூ. 250/= பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்

**1 ஆம் இடம்**
திருமதி மலர்
நெல்லியடி,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் இடம்**
செ.சசிகலா
மத்திய வீதி காரைதீவு.

**3 ஆம் இடம்**
பா. நிசானா
பூந்தோட்டம், வவுனியா.

### பாராட்டு பெறுவோர்

ஜெயந்தி காந்தி றோய்
அல்வாய்.

து. சகிலா
மட்டக்களப்பு.

### சொல்லறிவுப் போட்டி இல.24

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ந | ட் | 2 பு | ன் | ன | 3 கை | மா | று | 4 வி |
| ட் | 5 க | 6 வி | ண் | ண | 7 க | ம் | மி | டா |
| ட | ண் | 8 தி | ரு | ட | ன் | 9 ப | ரி | மு |
| ம் | ண | 10 வி | யா | 11 பா | ர | ம் | 15 ஆ | ய |
| 12 சோ | 13 கி | ல | 14 மோ | த | க | ம் | ச் | ற் |
| ம் | மூ | க் | து | க | 16 ப | னி | ச | சி |
| ப | க் | கு | 17 செ | ம் | மை | 18 பா | ரி | |
| ல் | 20 கு | ன் | று | 21 வே | த | ம் | ய | 22 பி |
| 23 நா | ண | ய | ம் | 24 த | ந் | த | ம் | ணி |

அனுசரணை :
Be Es En Traders
அச்சக பொருட்களின்
மொத்த விற்பனையாளர்
☎ +94 11 2348416

கோபிகை



# நெடுந் தொடர் 15

# உறவுகள் சுகமானது

ஸ்வேதா உட்பட அனைவருமே அதிர்ச்சியில் உறைந்துபோயினர், ''மது வந்து'' ஸ்வேதா சொல்லும் போதே எழுந்துகொண்ட மதுவிழி, ''பிளீஸ்'' என்றாள் கரங்களைக் கூப்பியபடி. அவள் நின்ற கோலம் மனதை என்னவோ செய்ய, ''வேண்டாம் ஸ்வேதா, கட்டாயப்பட டுத்தாதீங்க'' என்றார் அஸ்வந்தின் தகப்பனார். விம்மி அழுதபடியே உள்ளே சென்ற மதுவிழியை எல்லோரும் ஆச்சரியமாய் பார்த்தபடி இருந்தனர்.

அஸ்வந்தின் பெற்றோர் சென்று வெகுநேரமாகியும் மதுவிழி ரூமைவிட்டு வெளியே வரவில்லை. ஸ்வேதா குழப்பத்துடன் அமர்ந்திருந்தார். இது என்ன புதுப் பிரச்சினை என எண்ணினார். மதுவிழியின் மறுப்பின் காரணம் ஸ்வேதாவிற்குப் புரிந்தது. ஆனாலும் அவள் இருக்கும் நிலையில் இது அவளுக்கு ஏற்றதல்லவே. இந்தப் பெண் ஏன் இப்படி நடந்துகொள்கிறாள்? அவளைக் கட்டாயப்படுத்தவும் முடியவில்லையே. இப்படி பலவாறு யோசித்தபடி அமர்ந்திருந்த வேளை, அவரது செல்போன் ஒலி எழுப்பியது.

எதிர்முனையில் அலுவலக மேனேஜர் பேசினார். ''மேடம் புது கொன்றக் ஒன்று வந்திருக்கு, நீங்க நேர்ல வந்துதான் அதுபற்றிப் பேசணும். தரகுப்பணம் குறைவுதான். ஆனா நிறையப் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க சான்ஸ் இருக்கு. இனி நீங்கள் வந்துதான் ஒரு முடிவு பண்ணணும்'' என்றார்.

''சரி சரி'' நான் வர்றன். நைற் பிளைட்ல வந்து காலைலயே அலுவலகம் வந்திடுவன். மற்றதெல்லாம் நேர்ல பேசலாம்'' எனக் கூறி போனை வைத்தார்.

உள்ளே சென்று விஜயாவிடம் விடயத்தைக் கூறிவிட்டு மதுவிழியிடம் சென்றபோது தலையணையில் முகம் புதைத்திருந்த அவளைப் பார்த்ததும் ஒரு நொடி கலங்கிப்போனார். அருகில் சென்று அமர்ந்தபடி அவளது முதுகை வருடியதும் எழுந்துகொண்ட மதுவிழி ''அத்தை'' எனக் கேவியபடி மடியிலே கவிழ்ந்தாள்.

மெல்ல அவளை நிமிர்த்தி, ''மது அழுகையோ கண்ணீரோ எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாகாது. நல்லா யோசிச்சு ஒரு முடிவை எடுத்திட்டா அதுக்குப்பிறகு அதுபற்றி யோசிக்கக் கூடாது. அவ்வளவுதான் என்னால சொல்லமுடியும்.

மேனேஜர் போன் பண்ணினார்'' என எல்லா விவரமும் கூறிவிட்டு, ''விஜயா உன்னை நல்லா பார்த்துக்கொள்ளுவா, அவ அடிக்கடி மெடிக்கல் காம்ப் நடத்திறபோது நீயும் போ. அவ செய்யிற சேவையில உன் பங்கும் இருக்கட்டும். மனதுக்கு ஒரு சேஞ்சா, நிலாக்சா இருக்கும். வீட்டுக்குள்ளயே அடைஞ்சு கிடக்காம கடை கண்ணின்னு போய் வா. நடக்கிறது உடம்புக்கும், மனசுக்கும் இதமா இருக்கும். இத ஒரு அவமானச் சின்னமா நினைக்காத. உங்க ரெண்டு பேரோட பரிபூரணமான அன்பினால் உருவான குழந்தை இது. காலம் மாறும்போது கோபமும் போயிடலாம். என்னம்மா நான் சொல்றது புரியுதா? வா சாப்பிடலாம்'' என அழைத்துச் சென்றார். ஹரிவர்த்தனிடமும் விசயத்தை சொல்லிவிட்டு சாப்பிட அமர்ந்தார்.

மாலை ஐந்து மணியளவில் ஸ்வேதா புறப்பட ஆயத்தமாகவும் ஹரிவர்த்தன் வந்து சேரவும் சரியாக இருந்தது.

''ஹரி நான் வெளிக்கிட்டாச்சு. மது விஜயாவோட இருப்பா. அடிக்கடி வந்து பார்த்துக்கொள்ளுங்க'' என்றார்.

''நானும் உங்களோடதான் வரேன். வர்றன் மது, விஜயா'' என்றபடி எழுந்தார்.

''அங்கயா?'' ஸ்வேதா ஆச்சரியமாய் கேட்க, ''அங்கன்னா உங்கட வீட்டுக்கு இல்ல. நான் ஹோட்டல்ல தங்கிறதாதான் ஏற்பாடு'' என்றவர், ''அலுவலகம் வந்து பாக்கலாமில்லையா?'' என்றார்.

''ஐயோ அதுக்கில்ல ஹரி. ஹோட்டல்ல தங்கி ஏன் சிரமப்படணும். அலுவல் முடிஞ்சதும் நானே வந்திடப் போறன்'' அதவிட ரிக்கற் என இழுத்தார்.

''நீங்க போன் பண்ணினதும் நான் ஏற்பாடு பண்ணிட்டன்'' என்றவர், ''ஸ்வேதா இத்தனை நாளா நீங்க எங்கயோ. நான் எங்கயோ. அதனால தெரியலை.

இப்ப உங்கட நிலைமை தெரிஞ்சபிறகு எப்படி உங்களைத் தனியா விட முடியும் கடைசி வரைக்கும் உங்களுக்கு காவலனா மட்டும்தான் இருக்கணும்னாலும் நான் றெடி. வாங்க போகலாம்'' என்றார்.

தன் மீது ஹரிவர்த்தன் கொண்டுள்ள அன்பை எண்ணி நெகிழ்ந்துபோன ஸ்வேதா கண்ணீருடன் அவரது கரங்களைப் பற்றியபடி, 'ஹரி' உங்களை ரொம்பவே துன்பப்படுத்திட்டன். உண்மையாகவே இத்தனை காலம் உங்களை மிஸ் பண்ணினது என்னோட துரதிர்ஷ்டம்'' என்றார்.

காதலை காதலித்த இந்த ஜோடியைப் பார்த்தபடி நின்றனர் விஜயாவும், மதுவிழியும்.

காலை மெல்ல மயங்கிக்கொண்டிருந்தது. சூரியன் தன் கடமையைச் செவ்வனே செய்துவிட்டதாய் பெருமைப்பட்டபடி மறைவுக்குத் தயாரானான். குளிர்ந்த காற்று உடலைத் தழுவியது. மணலில் கால்கள் புதைய இலக்கற்று நடந்தான் அஸ்வந். இதயம் ஆயிரம் தொன் எடையில் கனத்தது. விரைந்து வந்த கடல் அலைகள் அவனைப் பார்த்து கெக்கலித்துச் சிரிப்பதுபோல இருந்தது. மிட்டாய்க் கடையை ஆசையாய் பார்க்கும் சிறுவனைப் போல காலையில் மதுவிழி வீட்டிற்குச்சென்று வீட்டாரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்ததை எண்ணியபோது மனம் இருமடங்கு துயரத்துடன் கனத்தது.

எதற்குமே ஏங்கி வளராத செல்லப் பிள்ளையாய் ஒரு ராஜகுமாரனைப்போல வாழ்ந்த தனக்கு ஒரு பெண்ணால் ஏற்பட்ட அவமானத்தையும் வேதனையையும் எண்ணியபோது ஒரு கணம் உடல் சிலிர்த்தது. ஆனாலும் ஏனோ மதுவிழியை கோபிக்க அவனால் முடியவில்லை. ஒரு குழந்தையின் நேசத்தோடு அவள் சுற்றிவந்ததை எண்ணியபோது தன்மீதே கோபம் வந்தது. கடற்கரை ஓரத்தில், வெறுமையான மனதுடன் வானை வெறித்தபடி அமர்ந்திருந்தவனின் தோள்களைத் தொட்டான் தீபக்.

''டேய் அஸ்வந். என்னடா தனியா வந்திருக்கே, ஏண்டா என்னைக் கூப்பிடலை?'' என்று கேட்டான்.

''மனசு கஷ்ரமா இருந்தது. அதனாலதான் துவி இப்படி சொல்வான்னு நான் எதிர்பார்க்கவே இல்லடா.''

உன் நிலைமை எனக்குப் புரியுது அஸ்வந். நீ துக்கப்படுறதை என்னால தாங்க முடியலடா. ஆனா என்ன பண்ணட்டும்? மதுவிழியை காட்டாயப்படுத்தவேண்டாம்னு அப்பா சொல்லிட்டார். தவிர, அவ நிலையில யார் இருந்தாலும் இததான் பண்ணுவாங்க. தனக்கு ஏற்பட்ட அவமானத்தை அவளால மறக்கமுடியலை. அன்பு தானா வரணும். அடுத்தவங்க சொல்லி வாறாதில்லை. அவ குழந்தை மாதிரி. நீதான் கொஞ்சம் அஜஸ் பண்ணணும்'' என்றபடி அஸ்வந்தின் அருகில் அமர்ந்தான்.

''அதுக்காக என்னை என்ன பண்ணச் சொல்றே'' பொய்யான கோபத்துடன் கேட்டான் அஸ்வந்.

''அஸ்வந் எனக்குத் தெரியும், என் தங்கச்சி மேல உனக்கு கோபமே வராது. பாசம் மட்டும்தான். கொஞ்சநாள் பொறுக்கலாம். வா இப்போ வீட்டுக்குப் போகலாம்'' என அழைத்துச் சென்றான்.

காலைக் குளிர் உடலை சில்லிடவைக்க போர்வையை நன்றாய் இழுத்துவிட்டு அதிகாலை உறக்கத்திற்காய் கண்களை மூடினான் தீபக் மூடிய விழிகளுக்குள் சலனமில்லாமல் சிரித்தாள் சுசரிதா. அதென்னவோ தெரியவில்லை. நாள் முழுதும் கதைத்தாலும் மீண்டும் பார்க்கவேண்டும், பேச வேண்டும் போலவே இருப்பது காதலுக்கே உரிய தனி மஜிக் என எண்ணியபடி புரண்டு படுத்தபோது அவனது மொபைல், ''ஹலோ ஹலோ'' என ரீங்காரமிட்டது.

எடுத்து காதுக்குக் கொடுத்துவிட்டு, ''என்னடா மது? என்ன காலைலயே ஏதாவது பிரச்சினையா?'' என்றான் படபடப்புடன். ''ஐயையோ. இல்லைண்ணா ஒரு விசயம் கதைக்கணும். அதான்'' என்றுவிட்டு மௌனமாய் இருந்தாள்.

''நீ இந்த விசயத்தைப் பற்றி ராத்திரி பூரா ரென்சனாகியிருக்கே அப்படித்தானே'' என்றான் சிறு கண்டிப்புடன்.

மறுமுனையில் மௌனமே நீடிக்க, ''மது இப்படி தூங்காம யோசனை பண்றது உனக்கு நல்லதல்ல. வீணா மனசைக் குழப்பாம அண்ணா நான் இருக்கேன் என்னட்ட சொல்லு. எதுவா இருந்தாலும் நான் பார்த்துக்கொள்ளுவன் புரியுதா?'' என்றான்.

''அண்ணா, அஸ்வந்தோட அப்பா அம்மாவை மீற்பண்ணணும். ஏற்பாடு பண்ணமுடியுமா?'' என்றாள்.

மகிழ்ச்சியில் ஒருகணம் உள்ளம் துள்ளிய போதும் இண்டைக்கே ஏற்பாடு பண்ணவா என்றான். சற்றே யோசனையுடன் அதற்குள் மதுவிழியின் மனசு மாறிவிட்டதா? வினா ஒன்று உலாப்போனது அவனுக்குள். ''ம் நானும் விஜயா ஆன்ரியும் அவங்களோட வீட்டுக்கே வாறோம். ஆனா, அவர் இல்லாத ரைமா சொன்னா'' எனத் தயக்கமாக இழுத்தாள்.

''ஓ.கே, ஓ.கே'' வைச்சிடவா என்றான்.

''ம். பாய்'' போனை வைத்தாள் மதுவிழி.

விசித்திரமான பெண். பேசுவதிலும் சரி, நடப்பதிலும் சரி. குழந்தைத்தனம் மாறவே இல்லை. அர்த்தமில்லாமல் அவதிப்படுகிறாள் என எண்ணினான்.

அஸ்வந்தின் அப்பாவிடம் விவரம் சொல்லிவிட்டு சுசரிதாவிடமும் சொன்னான். அஸ்வந்திடம் சொல்லத் துடித்த மனதை அடக்கிக்கொண்டான்.

அஸ்வந்தின் அறைக்குள் நுழைந்த சுசரிதா, அன்றைய தினம் அவன் அணியவேண்டிய ஆடைகளை ஸ்திரிபோட்டு எடுத்து வைத்தாள். இந்தச் சில நாளில் அஸ்வந்திடம் குடிகொண்டுவிட்ட மௌனம் வீட்டில் எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்தியது. எப்போதும் கலகலவென இருக்கும் அஸ்வந்தும் கும்மாளம் நிறைந்த இந்த வீடும் இப்போது அமைதியை நாடியிருந்தது. அவளது உயிருக்குயிரான அண்ணனின் இந்த மாற்றத்தினால் சுசரிதாவுக்கு மதுவிழிமேல் கோபம் கூட ஏற்பட்டது. சிந்தனையில் நின்றவளை குளித்து முடித்து உள்ளே வந்த அஸ்வந்தின் நடை ஒலி நடப்பிற்கு கொண்டுவந்தது. நிமிர்ந்து பார்த்துவிட்டு, ''என்னம்மா சுசரி'' என்றான். ''அண்ணா நான் ஒரு ஹெப்பி நியூஸ் சொல்லட்டா'' என்றாள். ''ஹெப்பி நியூஸா. துவி என்னை ஏற்கிறதை தவிர வேற எதுவும் ஹெப்பி

நியூஸ் இல்ல'' என்றான்.

''என்ன என்ன'' எனப் பரபரத்தவனிடம் மதுவிழி, ''இங்க வீட்டுக்கு வாராங்களாம் '' என்றதும், ''அப்படியா எப்ப யார் சொன்னது?'' என்றான் அடுக்கடுக்காய். ''ஆனா நீங்க இல்லாத நேரமா'' என இழுத்த சுசரிதாவிடம், ''அப்ப அந்த ரைம்ல நான் வீட்ல இருக்கக்கூடாது. அப்படியா?'' என்றான் கோபமும், துக்கமுமாய்.

''ஐயோ அண்ணா அது அவங்க வேண்டுகோள். ஆனா நாங்க விட்டிடுவோமா'' எனக்கேட்டுவிட்டு அண்ணனை கை பற்றி இழுத்துச் சென்றவள், தனது அறையின் ஜன்னலருகில் நிறுத்திவிட்டு, ''இங்க நின்னு பார்த்தா ஹோல்ல, தோட்டத்தில எங்க யார் இருந்தாலும் தெளிவா பாக்கலாம், இரசிக்கலாம்'' என்றாள்.

''ஏய் நானும் தீபக்கும் தோட்டத்தில இருக்கும் போது அவனை இப்படிதான் இரசிச்சிங்களா'' என்றான். வெட்கத்தில் முகம் சிவந்தவள், ''போங்கண்ணா'' என்றுவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

சினிமா பாட்டொன்றை முணுமுணுத்தபடி உல்லாசமாய் சென்ற அஸ்வந்தைப் பார்த்ததும் தாய், தகப்பன் இருவரும் நிதானமாய் பெருமூச்சு விட்டனர்.

வழுக்கென திறந்த கண்ணாடிக் கதவைத் தள்ளியபடி உள்ளே வந்தான் தீபக் அஸ்வந் அமர்ந்திருக்க வட்டவடிவில் சுற்றிவந்து சுழல் நாற்காலி தீபக்கை கண்டதும் ஒரு புள்ளியில் தரித்து நின்றது. தீபக்கை நன்கு உற்றுப் பார்த்த அஸ்வந், ''வாடா பூல். துரோகி, உன் தங்கச்சியை தண்டிச்சதை மனசில வைச்சிட்டு நீயும் என்னைப் பழிவாங்கிறாயா?'' என்றான்.

சுசரிதாவின் மூலம் அஸ்வந்திற்கு விசயம் தெரிந்துவிட்டது என்பது தீபக்கிற்குப் புரிந்தது. ''யார் துரோகி? உன் தங்கச்சிக்கு சொன்னா உனக்கு மெசேஜ் வரும்னு எனக்குத் தெரியாதா? மதுவிழிக்கு வாக்கு குடுத்ததனால நானே சொல்ல சங்கடமா இருந்தது. அதனாலதான் சுசரிதாட்ட சொன்னன். உண்மையைச் சொன்னா, காலைல மது அப்படி சொன்னபோது எனக்கு கோபம்தான் வந்தது. அத வெளில காட்டி அவள சங்கடப்படுத்த வேணாமேன்னு தான் மௌனமா இருந்திட்டன்.''

எழுந்துவந்து நண்பனின் தோள்களைப் பற்றிக் கொண்ட அஸ்வந், ''வேணாம்டா துவி மேல கோபப்படாதை. பாவம்டா. நீ கோபப்படுறது தெரிஞ்சா நொறுங்கிப் போயிடுவா, இந்தப் பிரச்சினைல பிழை என்னோடது. உப்பு திண்டா தண்ணி குடிச்சே ஆகணும். அது மாதிரி நான் செய்த பிழைக்கு நான் தண்டனை அனுபவிச்சே ஆகணும். தப்பவே முடியாது.''

நீண்ட பிரசங்கம் ஒன்றை செய்து முடித்துவிட்ட நண்பனைப் பார்த்தபோது தீபக்கிற்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. யார்மீது குற்றம் சொல்வதென அவனுக்குப் புரியவில்லை. கடவுள் மீதே கோபம் வந்தது.

''அஸ்வந் என்னவோ தெரியலை. மதுவிழிமேல எனக்கு ரொம்ப பிரியம்டா. அவ அண்ணா அண்ணான்னு சொல்லும் போது திரும்பத் திரும்ப இந்த உலகத்தை புதுசா பாக்கிறமாதிரி ஒரு பீலிங். அண்ணன் - தங்கச்சியா இருக்கிறதுக்கு ஒரே ரத்தமாதான் இருக்கணும் இல்ல. கூடப்பிறக்கணும் என்று எந்த கட்டாயமும் இல்லடா. நானும் மதுவும் கூட அப்படிதான். கூடப்பிறக்காத ஒரே ரத்தமா இல்லாத அன்பால இணைஞ்ச அண்ணன் - தங்கச்சி.

தீபக்கை கட்டி அணைத்துக்கொண்ட அஸ்வந்திற்கு மகிழ்ச்சியில் கண்ணில் நீர் துளிர்த்தது. ''டேய் உன் தங்கச்சி மேல பாசம் காட்டுறதினால, என் தங்கச்சி மேல பாசத்தை குறைச்சிடாத'' என்றான் பொய்யான கோபத்துடன்.

**(தொடரும்...)**

Oli Arazi In

## பேசும் படம்

### கவிதைப் போட்டி -05



படத்தைக் கூர்ந்து பாருங்கள் உங்கள் மனதில் எழும் எண்ணங்களை சுவைபட ஆறு வரிகளுக்கு மேற்படாத சிறந்த கருத்தைக் கூறும் கவிதையாக ஒரு தபாலட்டையில் எழுதி 37ஆம் பக்கத்தில் உள்ள கூப்பனை பயன்படுத்தி 20.01.2016 க்கு முன்பு அனுப்புங்கள்.

பூஜைக்கு வந்த மலரை
'ஆண்டவன்'
புழுதியிலே தள்ளி
பாதபூஜை செய்கிறானோ ?

சுதாநிதி
புதுவரிகள்

1 ஆம் பரிசு - 250/=
2 ஆம் பரிசு - 150/=
3 ஆம் பரிசு - 100/=

**கடந்த மாத வெற்றியாளர்கள் :-**

01 ஆம் இடம் : சுதாநிதி , 25/3 மாரியம்மன் வீதி, கல்லடி.
02 ஆம் இடம் : திருமதி மணிமேகலை வரதராஜா, அம்பலத்தடி, வந்தாறுமூலை.
03 ஆம் இடம் : மெ. புவஸ்னா, சி/61 புதிய வீட்டுத் திட்டம், நாவற்குழி.

## சினிமா காட்டும் நல்வழி

✍ சினிச் செல்வி

### சினிமா விமர்சனம்

**மா**ணவர்கள் சம்பந்தப்பட்ட பல கதைகள் வந்திருந்தாலும், இந்தப்படத்தை வித்தியாசமான கோணத்தில் சொல்லியிருக்கிறார் இயக்குநர். வர்த்தக நோக்கத்திற்காக மாணவர்களை டூயட் பாட விடுவது, ஆசிரியர்களை கேலி கிண்டல்செய்வது போன்றவற்றை தவிர்த்து விட்டு, சிறந்த முறையில் இந்தப்படத்தினை படமாக்கியிருக்கிறார் அவர்

**மதிப்பெண்ணுக்காக திணிக்கப்படும் அழுத்தங்கள், மாணவர்களின் மனச்சிதைவுகள், பெற்றோர், ஆசிரியர் கடமைகள், தற்போதைய கல்விமுறை அவலங்கள் போன்றவற்றை ஆழமாக பதிவுசெய்திருக்கிறது பள்ளிக்கூடம் போகாமலே திரைப்படம்.**

டாக்சி ஓட்டுனரான ஏ.வெங்கடேசுக்கு தனது மகன் நன்றாகப் படித்து பரீட்சையில் நல்ல புள்ளி எடுக்க வேண்டும் என்று ஆசை. இதற்காக மகனை பார்க்கும்போதெல்லாம் படி, படி என்று கண்டித்துக்கொண்டேயிருக்கிறார். அம்மா தேவதர்ஷிணியின் அனுசரணையால் வீட்டில் அப்பாவுடன் ஒட்டுதல் இல்லாமல் வளர்கிறார் மகன் தேஜஸ். தேஜஸின் பிளஸ் டூ வகுப்பில் அதே ஊரில் பெரும் புள்ளியான ரியல் எஸ்டேட் அதிபரான ராஜ்கபூரின் மகள் ஐஸ்வர்யாவும் படிக்க வருகிறாள். இருவருக்கும் இடையில் ஆரம்பத்தில் மோதல் உருவாகி பின்பு ஒரு கணத்தில் அது முடிவுக்கு வந்து நட்பாகிறது. அதே வகுப்பில் இருக்கும் மிகப் பெரிய பணக்காரரின் மகனான திலீபன் தான் எதிலும் முதல்வனாக இருக்கவேண்டும் என்ற எண்ணமுள்ளவன். இதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யவேண்டும் என்று நினைப்பவன்.

பள்ளி மாதத் தேர்வுகளில் குறைந்த மதிப்பெண் பெற்றதால் தேஜஸை பெற்றோர்களும், ஆசிரியர்களும் திட்டுகின்றனர். இதனால் விரக்தியடைந்த தேஜஸ் தற்கொலைக்கு முயல்கிறார். அப்போது அவரைக் காப்பாற்றும் ஐஸ்வர்யா தேஜஸுக்கு ஊக்கம் கொடுத்து அவனை படிக்க வைக்கிறாள். ஐஸ்வர்யாவின் தூண்டுதலாலும், அவளது அன்பான பேச்சாலும் கவரப்பட்டு படிப்பில் ஆர்வம் கொண்டு படிக்கிறான் தேஜஸ். மாதத் தேர்வுகளில் வகுப்பில் முதல் மாணவனாக வருகிறான் தேஜஸ். ஐஸ்வரியாவின் ஊக்கத்தினால் தேஜஸ் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுகிறது. இது திலீபன் புகழேந்திக்கு பொறாமையை ஏற்படுத்துகிறது. எனவே, அவர்களை பழிவாங்க துடிக்கிறார். இந்தநேரத்தில் பொதுத் தேர்வுக்கு சில நாட்கள் இருக்கும்போது ஒரு மாலை வேளையில் ஐஸ்வர்யாவும், தேஜஸும் காணாமல் போகிறார்கள். ஐஸ்வர்யாவின் அப்பாவும், தேஜஸின் பெற்றோர்களும் அவர்களைத் தேடுகிறார்கள். போலீஸம் வலைவீசி தேடுகிறது.

ஏன் காணாமல் போனார்கள்..? எங்கே போனார்கள்..? யார் அவர்களைக் கடத்தியது..? என்பதுதான் மீதி கதை..!

ஐஸ்வர்யா மற்றும் திலீபன் இருவருமே நடிப்புக்கு பஞ்சம் வைக்கவில்லை. மெச்சூரிட்டியான வேடத்தை ஏற்றிருக்கும் ஐஸ்வர்யா சிறப்பான இயக்கத்தினால் தனது நடிப்பைக் காட்டியிருக்கிறார். அதேபோல் திலீபனும் இறுதிக் காட்சியில் தனது அப்பாவிடம் வீரமாக ஆவேசமாகப் பேசிவிட்டு தலையைக் குனிந்துகொண்டு அமர்ந்திருக்கும் காட்சியில் ஒரு தனியான தவிப்பைக் காட்டியிருக்கிறார். தேஜஸும் தனது நடிப்பில் அபார திறமையை காட்டியிருக்கிறார். அறிமுக இளம் பிஞ்சுகளை இந்த வகையில் அமர்க்களமாக நடிக்கவைத்த இயக்குநருக்கு ஒரு பாராட்டு.

கிளைமாக்ஸில் கணேஷ் வெங்கட்ராம் பேசும் பேச்சுக்கள் இன்றைக்கு நாடு முழுவதிலும் இருக்கும் மாணவர்களின் மனதில் இருக்கும் கேள்விகள்தான். மதிப்பெண்களை மையமாகவே வைத்தே மாணவர்களின் திறமையை எடை போடுவது முட்டாள்தனம். ஒவ்வொருவனுக்கும் வேறு, வேறு திறமைகள் இருக்கும். அதை வைத்தும் அவன் வாழ்க்கையில் ஜெயிக்கலாம். வெறுமனே மதிப்பெண்களை அதிகம் வாங்கி தொழில் கல்வி படிப்பதாலேயே வாழ்க்கையில் அவன் ஜெயித்ததுபோலாகிவிடாது என்கிறார் கணேஷ். ஒவ்வொரு பள்ளியும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் சிரமங்களை நினைத்தே பார்க்காமல் தங்களது பள்ளியின் தேர்ச்சி விகிதத்தை எப்பாடுபட்டாவது அதிகப்படுத்துவதே தங்களது நோக்கம் என்று செயற்படுவது சமூகச் சீர்கேட்டைத்தான் விளைவிக்கிறது என்கிறார் கணேஷ். பள்ளியின் பொதுத் தேர்வு வருகிறது. அப்போது தேஜஸ், ஐஸ்வர்யா இருவரும் காணாமல் போகிறார்கள். இவர்களை கண்டுப்பிடிக்க போலீஸ் அதிகாரி கணேஷ் வெங்கட்ராம் களத்தில் இறங்குகிறார். தேஜஸ், ஐஸ்வர்யா இருவரும் காதலித்து ஓடிப்போனார்களா? அல்லது கடத்தப்பட்டார்களா?- என்பதே படத்தின் மீதிக்கதை.



# நந்தவனப் பூக்கள்

# அவனின்றி அணுவும் அசையாது

குடும்ப வண்டியை கணவன் - மனைவி இருவருமே பிடிப்புடன் நகர்த்தும் போதுதான் அச் சவாரி ஆனந்தமாய் இருக்கும். ஒருவர் முன்னுக்கும் ஒருவர் பின்னுக்கும் இழுத்தால் வண்டி அக்குவேறு ஆணிவேறாய் உடையத்தான் செய்யும்.

கணவன் சரிசெய்யட்டும் என மனைவியும் மனைவி சரி செய்யட்டும் என கணவனும் எதிர் பார்ப்பது தவறு. ஒருவர் மற்றவரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும்போதும் திறமைகளை மதிக்கும் போதும் தட்டிக்கொடுக்கும்போதும் உண்மை யாய் அன்பு செலுத்தும்போதும் சாதனைகள் பல பரிணமிக்கின்றன.

''ஏரி நிறைந்தால் கரை கசியும்'' என்பது போல உண்மையான அன்பினால் சாதிக்க முடியாதது இந்த உலகில் எதுவுமில்லை. இதற்கான ஒரு நல்ல உதாரணம் தான் சித்தார்த் இலக்கியா வாழ்வு. தனக்குப் பிடித்த துறைகளில் அதிகம் அதிகமாய் சாதிக்கவேண்டும் என்பதே இலக்கியாவின் கன வாக இருந்தது. திருமணம் பற்றிய எண்ணமே அவளுக்கு இருக்கவில்லை. பல்கலைக்கழக பட்டப்படிப்பிற்குப் பின்னர் தன் சாதனையின் உயரம் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்த இலக்கி யாவிற்கு சித்தார்த் பற்றி பெற்றோர் கூறியபோது எரிச்சலாய் வந்தது. தன் சாதனைகள் பற்றி பெற் றோரிடம் கூறியவள் இப்போது திருமணம் வேண் டாம் என முடிவாகக்கூறிவிட்டாள்.

ஆனாலும் வந்த வரனை விட்டுவிட பெற்றோ ருக்கு விருப்பமில்லை.

அவளுடனொத்த தோழியரைச் சுட்டிக் காட்டி மாறி மாறிப் புத்திசொல்லிய போது அவளால் எதுவுமே செய்யமுடிய வில்லை.

வேண்டாவெறுப்பாக திருமணத்திற்குச் சம் மதித்தாள். சடங்குகளில் கூட கலகலப்பின்றி கலந் துகொண்டாள். வியப்பாய் பார்த்த சித்தார்த்திடம் இலக்கியாவின் பெற்றோர் உண்மை நிலையைக் கூறிவிட புன்னகையுடன் அவர்களை ஆறுதல்ப டுத்தினான் சித்தார்த். அவசரமாய் உருண்ட நாட் சக்கரம் இலக்கியாவின் திருமணநாளைத் தாங்கி வந்தது. எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமலே கடந்துபோனது அவளுக்கு அந்நாள்.

அன்றுதான் அவள் வாழ்வை முழுமையாக இரசித்து உணர்ந்த நாள். இரவின் தனிமையில் அவளை அருகில் அமர்த்திக்கொண்ட சித்தார்த், அன்பான பேச்சினாலேயே அவள் உள்ளத்தின் ஏக்கங்களை எல்லாம் ஒவ்வொன்றாய் கொட்ட வைத்தான். உன் இலட்சியங்கள் அத்தனைக்கும் நான் எப்போதும் துணையானவன் என்பதை புரியவைத்தான். அவளுடைய இலட்சியங்கள் தான் தன்னுடைய இலட்சியங்களும் என்பதை புன்னகையோடு கூறினான். அவனது வார்த்தைக ளில் இருந்த தெளிவும் உறுதியும் இலக்கியாவைப் பிரமிக்கவைத்தன.

அன்றுதான் சித்தார்த் மீது அன்பு உண்டா னது இலக்கியாவிற்கு, அவள் அதிகம் வாசி க்கவேண்டும் என்பதற்காய் வாசிகசாலையில் அங்கத்தவரானான் சித்தார்த். இலக்கியம் சார்ந்த நூல்களை வாங்கிக்குவித்தான் அவ ளுக்காக. வங்கி முகாமையாளரான சித் தார்த். அவளோடு உரையாட வேண்டும் என்பதற்காகவே அதிகமதிகமாக வாசி க்கத்தொடங்கினான். சுவாரஸ்யமான உரையாடல்கள் மூலம் பல சந்தேகங்

பகுதி - 25

புரிந்துணர்வு
+
விட்டுக்கொடுப்பு
=
இல்லற இன்பம்



## ரொமான்ஸ் இரகசியங்கள்


களைத் தெளிவுபடுத்திக்கொண்டனர் இருவரும். பல்புலமை இலக்கியாவிற்கு மட்டுமல்ல சித்தார்த் திற்கும் வளர்ந்தது.

இலக்கியா கண்விழித்து எழுதிக்கொண்டிருந் தால் தேநீர் கப்புடன் அருகில் காத்திருப்பான் சித்தார்த். அவளது இலக்கிய உலகிற்கு முதல் வாச கன் சித்தார்த் தான்.

இலக்கியா நீ சாதிக்கப்பிறந்தவள் - என எப் போதும் கூறுவான். அந்த வார்த்தைகளே அதிக உந்து சக்தியைக் கொடுத்தது இலக்கியாவிற்கு. ஒரு அறிவிப்பாளராகப் பணியாற்றிய இலக்கியா வங்கி தொடர்பான பல விடயங்களை அவனிடமி ருந்து கற்றுக்கொண்டாள். இந்தப் புரிந்துணர்வே இலக்கியாவின் பெற்றோர் மீது சித்தார்த்தும் சித்தார்த்தின் பெற்றோர் மீது இலக்கியாவும் அதிக அன்பு காட்ட காரணமானது.

அன்பு வாசகர்களே, மகிழ்வான வாழ்க்கையின் அடிப்படை புரிந்துணர்வுதான். கணவன் மனைவி மட்டுமல்ல குடும்பத்தில் உள்ள அனைவருமே ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நடக்கும் போது எல்லையற்ற ஆனந்தமே குடும்பத்தை ஆட்சி செய்யும்.

# அழகுத் துளிகள்



**உதடு:-**

1. உதடு வசீகரமாக இருக்க, முட்டையின் வெண்கரு, பாதாம் பவுடர், பால் இம் மூன்றையும் கலந்து உதட்டில் தடவி காய்ந்ததும் சுடுநீ ரில் கழுவிவிட வேண்டும்.

2. உதட்டில் தேங்காய் எண் ணெய் தடவி வந்தால் நன்றாக இருக்கும்.

**முகம்:-**

உருளைக்கிழங்கை இடித்துச் சாறு எடுத்து, சமமாகத் தேன் கலந்து முகத்தில் தட வினால் முகம் அழகுபெறும்.

**முகச்சுருக்கம் நீங்க:-**

முகத்தில் உள்ள சுருக்கம் மறைய முட்டையின் வெண்கருவைத் தட வுங்கள். சிறிதுநேரம் கழித்து முகம் கழுவ முகத்திலுள்ள சுருக்கம் மறையும்.

**கருமை நீங்க:-**

கருமையடைந்த முகம் பொலிவு பெற பாதாம் பருப்பை பாலில் அரைத்து இரவில் முகத் தில் தொடர்ந்து பூசிவர பொலிவு பெறும்.

**முகப்பரு நீங்க:-**

முகப்பருக்கள் நீங்க பூண்டு அல்லது கருந் துளசியை அரைத்துப் போட நாளடைவில் பருக்கள் மறையும்.

**வாய் நாற்றம்:-**

புதினா கீரையைக் காயவைத்து பொடிசெய்து பல் துலக்குவதால் வாய் நாற்றமின்றிப் பல் பளிச்சென இருக்கும்.


# குடிசைக்குள் ஜனாதிபதி மைத்திரி





எளிமையும் மென்போக்கும் உடைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அகதி முகாமிற்கு சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடினார். நிறைவேற்றப்படுமா ஜனாதிபதியின் வாக்குறுதிகளும் செயற்பாடுகளும் என்பதே தமிழ் மக்களின் ஏக்கங்கள்.

# சென்ஜோன்ஸ் கல்லூரியும் ஆசிரியர் ஜீவானந்தமும்



யாழ்ப்பாணத்தில் உள்ள சமூகவிரோதிகளின் சிம்மசொப்பனமாக விளங்கும் யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் கண்ணீர் விட்டு கலங்கி அழுத காட்சிகள் எல்லோர் கண்களையும் கலங்க வைத்தது. தனக்கு கல்வி கற்பித்த ஜென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியர் ஜீவானந்தம் அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் கண்கலங்கி அழு துள்ளார்.

ஒரு ஆசிரியன் எவ்வாறு இருக்க வேண்டும் என் பதை இளஞ்செழியனின் அழுகையும் அவர் ஆசிரி யரைப்பற்றிய கூறிய கருத்துக்களும் தெளிவாகக் காட்டி யுள்ளது. ஜீவானந்தம் கற்பித்த மாணவனான மேல்நீதிமன்ற நீதிபதியாக உள்ள இளஞ்செழியனின் பண்பையும் துணி வையும் குற்றவாளிகளுக்கு கொடுக்கும் அதிர்ச்சி வைத்தி யத்தையும் வைத்தே ஜீவானந்தம் ஆசிரியரின் ஆற்றலும் வழிநடத்தும் திறமையும் மக்களுக்குப் புரிந்திருக்கும். அதே வேளை சென்ஜோன்ஸ் கல்லூரி இவ்வாறான ஆசிரியர்க ளையும் மாணவர்களையும் வழிநடத்தி தனக்கு பெருமை தேடிக்கொண்டுள்ளது. சென்ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்கள் தமது ஆசானான ஜீவானந்தம் அவர்களின் மரணச்சடங்கை தாமே முன்னின்று செய்து வைத்துள்ளனர். புலம் பெயர் நாடு ஒன்றுக்கு அந்த ஆசான் சென்ற போது செங்கம்பளவரவேற்பளித்து மதிப்பளித்துள்ளனர்.

தற்போது பணத்தாசையும் தவறான நடத்தைகளையும் கொண்டு அலையும் ஒருசில ஆசிரியர்கள்திருந்தி இனிவரும் காலம் நல்ல நடத்தையுள்ள பண்புள்ள மாணவர்களை உரு வாக்க வேண்டும் என்பதே எமது ஆவலாகும்.

அதே நேரம் இனி வரும் காலம் இவ்வாறான ஒரு ஆசிரியனுக்காக மிகவும் உயர் தர பதவியில் இருக்கும் ஒரு மாணவன் அழுவானா என்பதும் சந்தேகமே! ஏனெனில் மாணவர்களின் பண்புகளும் கலாசாரமும் அழிவடைந்து கொண்டு செல்வதையே காணக்கூடியதாக உள்ளது.

சென்ஜோன் கல்லூரி ஆசிரியர் ஜீவானந்தம் மற்றும் அவ ரது மாணவனான இளஞ்செழியன் ஆகியோரின் முன்மாதிரி ஆசிரியர் சமூகத்துக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

சென்ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து தமது பணத்தில் பல போரால் பாதிக்கப் பட்ட மாணவர்களுக்கான இலவசக்கல்வியையும் இலவச விடுதி வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்தவகையில் மாணவர்களை நற்பிரஜைகளாக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிச் சமூகம் ஏனைய பாடசாலைகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

# கண்ணீர்க் காணிக்கை



அன்னையின் அன்பு மிகப் பெரியது. அன்னையின் பிரிவு என்பது வலியது. ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வியலில் அன்னையின் அன்பைச் சுகிக்கும் பாக்கியம் பெற்றவனே. அந்த அன்பு வெற்றிடமாகும் போது ஏற்படும் வலி வார்த்தைகளால் வடிக்கமுடியாதது. ஒளியரசியின் இலக்கியக் காட்சியை எழுதும் எழுத்தாளரும் கோப்பாய் ஆசிரியகலாசாலை பிரதி அதிபருமான ச.லலீசன் கடந்த 13.12.2015 தனது தாயைப் பிரிந்துள்ளார். ஏக புதல்வனாகிய அவரது வேதனைகளில் நாமும் தோள் கொடுப்பதுடன் அவரின் தாயாராகிய **நவமணி சந்திரமௌலீசனின்** ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

சிறந்தபடைப்பு ✍ அ. அலோஸ்ரிக்காவின்

எதிர்காலத்தில் நல்லதொரு உலகம் அமைக்க முயன்றுவரும் ஒளிஅரசியின் கட்டுரைப்போட்டியில் பாடசாலை மட்டத்தில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலையில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி அ.அலோஸ்ரிக்காவின் கட்டுரை.



# நல்லதொரு உலகம் அமைப்போம்

படைப்புக்களிலே சிறந்த படைப்பு மனிதர்கள். மனிதர்களாகிய நாமே நல்லதொரு உலகினை படைக்க வேண்டும். கண்டுபிடிப்புக்கள், சாதனைகள் படைப்புக்கள், வெற்றிகள் மூலம் மட்டுமல்லமாறாக ஒற்றுமை, சமாதானம், விட்டுக்கொடுப்பு, பகிர்வு, அன்பு போன்ற நல் விழுமியப் பண்புகள் மூலமும் நல்லதொரு உலகினை படைக்க முடியும். ஒவ்வொரு மனிதனும் எவ்வாறு வாழ்கின்றான் என்பதைப் பொறுத்தே நல்லதொரு உலகம் உருவாகிறது. படைப்புக்களினை விருத்தி செய்வதினூடாக நல்லதொரு உலகினை படைக்க முடியும்.

எமது சமுதாயத்தில் ஏற்படும் சண்டை சச்சரவுகள், பிளவுகள் குடிபோதைக்கு அடிமையாகுதல், களவு, கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற சீரழிவுகள் பெருகிக்கொண்டே செல்கின்றன. இவ்வாறான சீர்கேடுகளின் காரணமாக சமுதாயத்திலும் குடும்பங்களிலும் பிளவுகளும் பிரச்சினைகளும் உண்டாகின்றது. இவ்வாறான தீமைகள் காரணமாக நல்லதொரு உலகினை படைக்க முடியாது.

இன்று நாட்டில் ஏற்படுகின்ற முக்கியமான பிரச்சினையாக குடிபோதைக்கு அடிமையாதலை குறிப்பிடலாம். சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை போதைப் பொருட்களை அதிகமாக பயன்படுத்துகின்றார்கள். இதனால் குடும்பங்களில் பிரச்சினைகள், சண்டைகள், பிளவுகள், ஏற்படுகின்றன. இதனால் குடும்பங்களில் வறுமை நிலையும் ஏற்படுகிறது. வேலைக்கு செல்லும் வயதில் இளைஞர்களும் குடும்பத்தலைவர்களும் வேலைக்கு சென்று தமது வருமானத்தை மதுபோதைக்கே செலவழிக்கின்றார்கள்.

குடி குடியைக் கெடுக்கும் புகைபிடித்தல் புற்றுநோயை உண்டாக்கும் என்று பலவிடயங்களை அறிந்தும் இன்று குடிபோதைக்கு அடிமையானவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இவ்வாறான சமுதாயத்திலும் சீர்கேடுகளும் உருவாகிறது. குடிபோதையினால் பாலியல் துஷ்பிரயோகங்கள் இன்று அதிகமாக ஏற்படுகிறது.

சிறுபிள்ளைகள் முதல் இளம்பெண்கள்வரை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறான பிரச்சினைகள் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.


இவ்வுலகில் விஞ்ஞானத்தின் விந்தைகள் பெருகிக்கொண்டே செல்கின்றன. விஞ்ஞான சாதனைகள் மனிதனின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் நோக்குடனே படைக்கப்பட்டன. ஆனால், நம் இளைய சமுதாயம் அவற்றை தீய முறையில் கையாளுகின்றார்கள். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்னும் பொன்மொழியினை இன்று மறந்துவிட்டார்கள். மற்றும் ஒவ்வொரு வீடுகளிலும் தொலைக்காட்சி காணப்படுகிறது. தொலைக்காட்சிகளில் தொடர்நாடகங்கள், தீய படங்கள், என்பவற்றை மாணவர்கள் பார்ப்பதனால் தீய செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதுடன் கல்வியிலும் அக்கறை அற்றவர்களாக உள்ளனர். இதனால் அவர்களின் எதிர்கால வாழ்க்கையே சீரழிகின்ற நிலை ஏற்படுகின்றது. இவ்வாறாக ஏதோவொரு வகையில் இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் சீரழிந்துகொண்டே செல்கின்றான். இதற்கெல்லாம் எப்போது விடிவு வரும்? நாம் எப்போது ஒரு விடியலைக் காண்போம். நல்லதொரு உலகினை எவ்வாறு படைக்க முடியும் என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்துகொண்டால் நல்லதொரு உலகை அமைக்க முடியும்.

நல்ல நண்பர்களோடு சேர்ந்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கி நற்பயனை பெறுவோம். மதம், சாதி, மொழி, இனம், போன்ற பிரச்சினைகளை உலகில் ஒழிப்போம். யுத்தங்களை தவிர்த்து ஒன்றுபட்ட உலகினை உருவாக்குவோம். குடிபோதைகள் பாலியல் துஷ்பிரயோகங்கள் தவறான தொலைபேசி தொடர்புகள், சண்டை சச்சரவுகள், தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் போன்றவற்றிலிருந்து விடுபட்டு புதியதொரு சமுதாயத்தினை உருவாக்கி நல்லதொரு உலகினை படைப்போம்.

இவ்வாறான சீர்கேடுகளிலிருந்து நாம் விடுபடுவதனால் குடும்பம்,சமுதாயம்,நாடுகள் அனைத்திலும் மாற்றங்கள் ஏற்படும். விடிவு பிறக்கும். வாழ்வில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் மேலோங்கும். பல்லினமக்களும் ஒன்றுபட்டு ஒரே சமூகமாக வாழலாம். தீய செயல்களை நாம் தவிர்த்துக்கொண்டால் நல்ல சிந்தனைகள், ஆற்றல்கள், படைப்புக்கள், சாதனைகளை உருவாக்கலாம். ஆகவே, நாம் அனைவரும் தீயனவற்றைக் களைந்து புதிய மனிதர்களாய் மாறி நல்லதொரு உலகினை படைப்போம்.

✍ அறிவமுது

# தொழுநோயை விரட்டுவோம்



ஒவ்வொரு வருடமும் பல்வேறு தினங்களை நாம் சர்வதேச அளவில் கொண்டாடுகின்றோம். வருடத்தில் ஒரு நாளிலாவது அந்தத் தினத்தினை பற்றி ஆழமாகச் சிந்திக்கவேண்டும் என்பதை வலியுறுத்தவே இத்தினங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், இன்றைய உலகம் இத்தினங்களுக்கே உரிய உயர்ந்த, ஆழமான பல எண்ணங்களிலிருந்து நம்மைத் திசை திருப்பும்வண்ணம் அன்னையர், தந்தையர், காதலர், நண்பர்கள் என்ற பல தினங்களை வர்த்தக உலகம் அபகரித்துக் கொண்டுவிட்டது. வர்த்தக உலகம் இத்தினங்களைப் பரிசுப் பொருட்களால் மட்டும் குவித்து, நம் எண்ணங்களையும், கண்ணோட்டத்தையும் குருடாக்கிவிட்டது. எனினும், சில தினங்கள் வர்த்தக நோக்கமற்றும் கொண்டாடப்பட்டுவருகின்றன.

### உலக தொழுநோயாளர் தினம்

வர்த்தக நோக்கமற்ற ஒரு தினமாக நோயாளருக்கான தினம், கொண்டாடப்பட்டுவருகிறது. நோயாளருக்கென ஒரு தினமா? என்று நம்மில் பலர் கேள்வி எழுப்பலாம். நோய் என்றதும் எதிர்மறையான எண்ணங்கள் மட்டுமே நம் மனதில் உருவாகிறது. ஆனால், அந்த நோயாளர்களைப்பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும் என்ற உயரிய நோக்கிலேயே நோயாளர் தினம் கொண்டாடப்பட்டுவருகிறது. ஒவ்வொருவருடமும் ஜனவரி 30ஆம் திகதி உலக தொழு நோயாளர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இலங்கையில் 100 ஆண்டுகளுக்கு முன்னர் தொழு நோயாளர்களும் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். ஒருவர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர்கள் உடனடியாக கம்பஹா மாவட்டத்திலுள்ள ஹெந்தளை அல்லது மட்டக்களப்பில் உள்ள மாந்தீவு தொழுநோய் வைத்திய சாலைகளில் சேர்க்கப்படுவார்கள். இந்த தொழுநோயாளர்கள் ஆயுட்கைதிகளைப் போன்று வாழ்நாள் முழுவதும் அங்கிருந்து இறுதியில் மரணித்தார்கள். அவர்களின் உறவினர்கள்கூட வருடத்திற்கு ஓரிரு தடவைகள் மாத்திரமே வந்து அவர்களைத் தூரத்தில் நின்றவாறு பார்த்துச் செல்வதற்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால், இன்று தொழுநோயைக் குணமாக்கும் நவீன வசதிகள் வந்துவிட்டன. தேமல், தோல் நிறம் மாறுவது உள்ளிட்ட சிறிய அறிகுறிகள் தென்படும் இடத்தில் உணர்ச்சி இருக்கிறதா என பரிசோதனை செய்தபின்தான் தொழுநோயாளிகளை கண்டுபிடிக்க முடியும். இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகளுக்கு சென்று தொழுநோய் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இன்று தொழுநோயாளிகள் தங்கள் வீடுகளிலிருந்தே நோயைக் குணப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள்.

சமுதாயத்திலிருந்து ஒழிந்துகொண்டிருக்கும் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு இன்றும் சில சமூகங்களின் மத்தியில் இல்லாமல் காணப்படுகிறது. இந்நிலை ஒழிக்கப்படுவதற்கும், இந்நோய் பற்றிய நினைவினை மக்கள் மனதில் கொண்டுவருவதற்குமாகவே இவ்வாறான தினங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் இந்நோயை உலகிலிருந்து முற்றாக விரட்ட நாம் ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூணுவோம்.

## சிரியுங்கள்

**நோயாளி** - மேஜர் ஆப்ரேஷன் என்றால் என்ன? மைனர் ஆப்ரேஷன் என்றால் என்ன?


**டொக்டர்** - நான் பண்ணினால் மேஜர் ஆப்ரேஷன். என் பத்துவயது மகன் பண்ணினால் மைனர் ஆப்ரேஷன்.


**நோயாளி** - சின்னக்காயம் தானே. அதற்கு இவ்வளவு பீஸா டொக்டர்?

**டொக்டர்** - இப்படிக்கேட்பீங்க என்று தெரிந்துதான் பண்டேஜ்ஜை பெரிதாக போட்டிருக்கிறேன்.

**டொக்டர** - இந்த மருந்தை தினமும் காலையில் வெறும் வயித்தில சாப்பிடுங்கோ

**நோயாளி** - அப்ப உடம்பில துணி எதுவும் கூட போடக்கூடாதா டாக்டர்





# புத்திசாலியின் தீர்ப்பு

ஓர் ஊரில் ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். அவருக்கு நிறையச் செல்வமும் நிலபுலன்களும் தோட்டங்களும் இருந்தன. மேலும் ஆடு, மாடுகளும் குதிரைகளும் கணக்கற்று இருந்தன. அந்தப் பணக்காரருக்கு மூன்று மைந்தர்கள் இருந்தனர். மூவரும் குணங்களில் மாறுபட்டு இருந்ததால் அவர்களிடையே ஒற்றுமையில்லை. மூவரும் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டே இருந்தனர். அவர்களின் தந்தை எவ்வளவோ எடுத்துக்கூறியும் அவர்கள் கேட்கவில்லை. இது அந்தப் பணக்காரருக்கு மிகுந்த மன வருத்தத்தைக் கொடுத்தது. தனது மைந்தர்கள் மூவரும் ஒற்றுமையாக இல்லாமல் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்கிறார்களே என்று வருந்தினார்.

ஒருநாள் அந்தப் பணக்காரர் திடீரென்று நோய் வாய்ப்பட்டார். எவ்வளவோ வைத்தியம் பார்த்தும் அவர் நோய் குணமாகவில்லை. இனி தான்பிழைக்கமாட்டோம் என்பதை உணர்ந்த அவர் தம் சொத்துக்களை பங்கிட்டுக்கொள்வதில் தனது மைந்தர்களிடையே சண்டை ஏற்படக்கூடும் எனக் கருதினார். அதனால் தனது மைந்தர்களுக்குத் தெரியாமல் தன் நண்பன் ஒருவரை வரவழைத்து ஓர் உயில் எழுதி வைத்தார். அதன்பிறகு அவர் நீண்டநாள் உயிர்வாழவில்லை. அவர் இறந்ததும் அந்த நண்பர் அவர் இறப்பதற்கு முன் எழுதிவைத்துவிட்டுச் சென்ற உயிலை மைந்தர்களுக்கு படித்துக்காட்டினார்.

என்னுடைய சொத்து முழுவதும் நானாக உழைத்து சேர்த்தது. எனவே, என் விருப்பப்படி என்னிடம் அன்பாக இருந்த எனது மூத்த மகனுக்கு என் சொத்தில் சரி பாதியையும் பலசமயங்களில் நான் சொல்லியபடி நடக்காததால் எனது இரண்டாவது மகனுக்கு என் சொத்தில் மூன்றில் ஒரு பங்கையும் என் பேச்சைக் கேட்காமல் செலவாளியாகத் திரியும் என் கடைசி மகனுக்கு என் சொத்தில் ஒன்பதில் ஒரு பகுதியையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் இறப்பதற்கு முன்னரேயே எழுதி வைத்துவிட்டுப்போய்விட்டதால் மைந்தர்கள் மூவரும் அதன்படியே நடக்கவேண்டியதாகிவிட்டது. ஊர்ப்பெரியவர்கள் முன்னிலையில் உயிலில் கூறியவாறு சொத்துக்கள் முழுவதையும் பங்கிட்டுக் கொண்டனர். இறுதியாக குதிரைகளை பங்கிட்டுக் கொள்ளும்போது தான் அம்மூவருக்கும் சண்டை எழுந்தது. மொத்தம் பதினேழு குதிரைகள் இருந்தன. உயிலில் குறிப்பிட்டபடி இவைகளை எவ்வாறு பங்கிடமுடியும். இங்கு கூடியிருந்தவர்களுக்கும் எப்படித் தீர்த்துவைப்பது என்று தெரியவில்லை. அப்போதுதான் பீர்பலைப்பற்றி நினைவுவந்தது. பீர்பல் இந்த வழக்கை நல்ல முறையில் தீர்த்து வைப்பார் என்று மைந்தர்கள் முடிவுசெய்தனர். மைந்தர்கள் பீர்பலிடம் சென்றனர். வழக்கு முழுவதையும் கேட்ட பீர்பால் நாளையதினம் உங்கள் வீட்டிற்கு வந்து வழக்கை தீர்த்துவைக்கிறேன் என்று கூறி மூவரையும் அனுப்பிவைத்தார்.

மறுநாள் காலை பீர்பல் ஒரு குதிரைமேல் ஏறி அவர்கள் வீட்டிற்கு சென்றார். மைந்தர்கள் அவரை வரவேற்றனர். பீர்பல் நேரே குதிரை லாயத்திற்கு சென்று தன்னுடைய குதிரைகளையும் அந்தக் குதிரைகளுடன் நிறுத்தினார்.

பிறகு மைந்தர்களை நோக்கி என்னுடைய குதிரைகளையும் உங்கள் குதிரைகளுடன் சேர்த்துள்ளேன். இப்பொழுது மொத்தம் பதினெட்டு குதிரைகள் உள்ளன. இதில் பாதியான ஒன்பது குதிரைகளை மூத்த மகனான நீ எடுத்துக்கொள் என்றார்.

மூத்த மகன் ஒன்பது குதிரைகளை அவிழ்த்துக் கொண்டு சென்றான்.

இரண்டாவது மகனை நோக்கி,

உயிலின்படி உனக்கு மொத்தத்தில் மூன்றிலொரு பாகம் தானே? அப்படியானால் உன் பங்கிற்கு ஆறு குதிரைகளை எடுத்துக்கொள் என்றார் பீர்பால். மீதி மூன்று குதிரைகளே இருந்தன.

மூன்றாவது மகனைப்பார்த்து உனக்கு மொத்தத்தில் ஒன்பதில் ஒரு பாகம் தானே கிடைக்க வேண்டும். அப்படியானால் உன் பங்குக்கு இரண்டு குதிரைகள் வரவேண்டும். அவற்றை நீ எடுத்துக் கொள் மீதியுள்ள என் குதிரையை நான் எடுத்துச்செல்கிறேன் என்று மூவருக்கும் மனவருத்தம் ஏற்படாமல் தீர்த்துவைத்தார் பீர்பல்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்"

சிறுகதை ✍ செ. மகேஷ், யாழ். ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.



தற்காலத்தில் நடைபெறும் சம்பவங்களை எடுத்துரைத்து அதிபர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என அனைவருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் சிறுகதை உதிர்வு. தனது 50 வருட கல்விச்சேவை அனுபவங்களை சிறுகதையாக்கி தாரணி ஓர் ஆச்சரியக்குறி என்ற புத்தகத்தினூடாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறார் ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் நெடுந்தீவு மகேஷ்.

மிகத்தரமானது என பலராலும் போற்றப்பட்ட இவருடைய சில சிறுகதைகள் தொடர்ந்து பிரசுரமாகவுள்ளன.

# 'உதிர்வு'

மோட்டுப் பெட்டை இப்படிச்செய்து போட்டாளே என்றாள் சீதை. அவளுக்கு அந்தச் செய்தியை கேட்ட நேரம் தொடக்கம் ஒரே கவலையாகவும் மனக்குழப்பமாகவும் இருந்தது.

அந்தச் சிறுமியின் மரணமும் அதனைத் தொடர்ந்து வந்த செய்திகளும் மேலும் மேலும் வேதனையைக் கூட்டின.

எண்டாலும் பார் சரசு அவள் தற்கொலை செய்யிற அளவுக்கு என்ன நடந்திருக்கும்? உள்ளத்தை தொடர்ந்து உறுத்துகின்ற அவளின் மரணத்தால் எழுந்த கேள்விகள் அவர்களை வருத்தின.

எதற்கும் பதில் சொல்லாமல் சரசு அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்தாள். ஏன் செய்தாள் என்று தெரியவில்லை பதிலுமாக பேசினாள். இன்னும் பிரேதம் கொடுக்கவில்லை. ஆஸ்பத்திரியிலதான் இருக்குதாம். சீதை தொடர்ந்தும் கேள்வியும் பதிலுமாக பேசினாள்.

சரசு எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே கற்பனைத்தேரில் ஏறி நகர்ந்தாள். நல்ல அழகான பிள்ளை. அவளுக்கு பக்கத்து வீடுதானே துருதுருவென விழிக்கும் கண்களுடன் மானாட்டம் அவள் துள்ளிக்குதித்து ஓடித்திரிவதும் கலகலப்பாக பேசிச்சிரித்து களிப்பதும் அவளின் மனத்தை விட்டகலாத நிகழ்வுகள்தான். சரசுவுக்கோ அந்த மரணத்தில் குவிந்த சந்தேகங்களுக்கும் மேலாக எப்படியெனினும் இந்த மரணம் அவளுக்கு நிகழ்ந்திருக்கக்கூடாது என்ற எண்ணமே தோன்றியது. அந்தச்சிறுமியின் மரணத்தால் புண்பட்ட மனம் உற்சாகம் இழந்தது. சிறிது நேர அமைதியின் பின்னர் எழும் எண்ண அலைகளின் இழுபறிகளால் ஐயோ பாவம் இப்படிச் செய்து போட்டாளே. என்று ஆதங்கப்படுவதும் அரட்டுவதுமாக நேரம் தொலைந்து கொண்டிருந்தது.

வீட்டினுள்ளே கூக்குரலிட்டு அழும் ஓசை அடங்கவில்லை. ராசாத்தி என்று சொன்னால் அந்த சுற்று வட்டாரத்தில் எல்லோருக்கும் தெரியும். பள்ளிக்கூடத்தில் அவளை அனுராதா என்றே அழைப்பார்கள். நேற்று பள்ளிக்கூடம் போய் வந்தவள் போய் வந்த நேரத்திலிருந்து ஏனோ மனமுடைந்தவளாக காணப்பட்டாள். அவள் நித்திரை கொள்ளவில்லை. எது எப்படி அவளைப்பாதித்தது என்பதை அறிய முடியவில்லை. விடிவதற்குள் இப்படியொரு காரியத்தை செய்வாள் என எவருமே எதிர்பார்க்கவில்லை.

ஏதும் காதல் கீதலோ? என்று மெல்லிய ஓசையில் கேட்ட சின்னத்தம்பியாருக்கு சட்டென்று பதிலளித்த சிதம்பரனார் அவளுக்கென்ன இப்பதானே பதினான்கு வயது என்றார். அந்தப்பதிலின் மூலம் அவள் அப்படிச் செய்யமாட்டாள் என்பதாய் அமைந்த விடையால் சின்னத்தம்பியார் திருப்தியடைந்தார். எனினும், வேறு என்னவாக இருக்கும் என்ற ஆய்வுகளும் கிசுகிசுக்களும் ஊர்ந்தும் நடந்தும் ஓடியும் திரிந்தன.

நேற்றுப்பள்ளிக்குப் போய்வந்தவள் தானே வீட்டில்தான் ஏதும் அவளுக்கு பிடிக்காத எதையோ செய்து போட்டினமோ தெரியலை. அப்பா ஏசிப்போட்டாரோ? அம்மா அடிச்சுப்போட்டாளோ? இப்படியே ஆய்வுக்குரிய வினாக்களே ஒவ்வொருவரிடம் இருந்து வெளி வந்தன. அங்கே வந்து கூடும் ஒவ்வொருவர் முகத்திலும் துயரத்தின் கோடுகள் ராசாத்தி என்ற பெயரோடு ஒரு சின்னப்பிள்ளையாய் எல்லோர் மனத்திலும் இடம்பிடித்திருந்தவள் கவலைகள்

ஏதும் இன்றிச் சுற்றித்திரிந்தவள். தானும் தன் படிப்பும் என்றிருந்தவளுக்கு என்ன நேர்ந்தது.

அவள் இன்னமும் ஒரு சின்னப்பிள்ளைதான். பருவமடைந்து ஓராண்டு காலந்தான் ஓடிக்கடந்திருந்தது. அதுவும் அவளுக்கு பெரிதான மாற்றம் எதனையும் விளைவிக்கவில்லை. ஆனால் உடலில் ஒரு மினுமினுப்பும் முகத்தில் ஒரு மலர்ச்சியும் தோன்றி எல்லோர் கவனமும் அவளை ஈர்த்திருந்தது. எமது காலாசார நடைமுறைக்குள் அவை உட்பட்டு அமைதியை பேணி நடந்தன. பாரம்பரிய நோக்கங்கள் சிதைவுறாமல் வளர்ப்பதில் பெற்றோர் காட்டும் அக்கறையால் அவள் அதற்குள் அடங்கியிருந்தாள்.

பள்ளிக்கூடத்தில்தான் ஏதோ நடந்திருக்கு? சந்தேகங்கள் கிளைபரப்ப புதுப்புதுக் கதைகள் பெரு விருட்சமாக உயர்ந்தது. முத்தம்மா ரீச்சருக்குத்தான் சில உண்மைகள் தெரிந்திருந்தன.

பள்ளிக்கூடம் என்றால் படிப்பு மாத்திரமல்லவே ஒழுக்கமும் கவனிக்கப்படவேண்டும்தானே. எது என்னவாக இருந்தாலும் வளரும் பருவுத்தில் பிள்ளைகளின் நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கவனிக்கத்தானே வேண்டும். ஆனால் ராசாத்தி அப்படிப்பட்ட பிள்ளையல்ல எல்லாம் அந்த அதிபர் செய்த வேலையால் வந்ததுதான்.

பருவ வயதில் ஏற்படும் உடல் உள்ளக் கிளர்ச்சிகளை உரிய முறையில் விளங்கிக்கொண்டு செயற்படப் பிள்ளைகளுக்கும் தெரியாதுதானே. அதை விளங்கிக்கொண்டுள்ள படிச்ச சமூகத்திலையும் அதுபற்றி புரிந்துகொள்ளுதல் இல்லாமல் தான் போய்விட்டது.

நேற்றுத்தான் அந்தப் பிள்ளைகளின் விவகாரம் அதிபருக்குத் தெரியவந்தது. அதனை அப்படியே மௌனமாக விசாரித்து அறிந்திருக்கலாம். எல்லாம் அந்த அதிபரால வந்ததுதான். பிள்ளைகளை விசாரிக்கிறதுக்கு முன்னர் அந்தப்பிள்ளைகளின் கௌரவத்துக்கு மதிப்பளிக்கவேண்டியது அவசியமல்லவா முத்தம்மா ரீச்சரின் உள்ளம் மௌனமாக அழுதது. கண்கள் கலங்கின.

பதினோராம் வகுப்பில் படிக்கின்ற பையன் ரமேஸ் பதினைந்து வயதிருக்கும் அவனின் பெயரும் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிற அனுராதாவின் பெயரும் அந்தப்பள்ளிக்கூட கட்டடத்து மறைவில் இருக்கிற மதிற்சுவரில் எழுதப்பட்டு அதோட 'ஐ லவ் யூ' என்றும் எழுதியிருந்ததாம். இப்படி ரீச்சர்மார் சொன்னவை. அதைப்போய் அதிபரிட்ட சொன்னதால் வந்த வினைதான் இது. முத்தம்மா ரீச்சர் சம்பவத்தை மீட்டுப்பார்த்துக் கொண்டார்.

வகுப்பிலிருந்த ரமேஸை அதிபர் அழைத்திருக்கிறார். அவனைத்தவிர வேறு எவரும் எழுதியிருக்கமாட்டார்கள் என்ற திடமான நம்பிக்கையும் ஏச்சும் ஏளனமும் கலந்த பேச்சினால் அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனையும் குற்றவாளியாக அவனைக் குறுகி நிற்கச்செய்தது.

வார்த்தைகள் மறுப்பை தெரிவித்தாலும் மனதிற்குள் அவனுக்கு ஏதோ ஒன்று ஒரு மகிழ்ச்சியை கொடுத்தது. அவனுக்கு அவளின் மீதிருந்த கிளர்ச்சிதான் அது. அவன் முன்னிலையிலேயே அவள் விசாரிக்கப்பட்டாள். அவள் மனமோ வேதனைப்பட்டது வெட்கப்பட்டது. அவள் ஏதும் அறியாச் சிறுமி.

இந்த வயதில் உனக்கு ஒரு காதலா? என்று கேட்டு அவளை அதிபர் பார்த்த பார்வை அவளைத்திருத்துவதற்கா? அவளின் பிஞ்சு உள்ளம் புண்பட்டது. கண்கள் கலங்கின. அவமானமாகிப் போன அந்த நிகழ்வால் அந்தச்சிறுமி குறுகிப்போனாள். இவை சார்ந்த விசாரணைகள் கொலை, கொள்ளை நிகழ்ந்துவிட்டது போன்றதாக முன்னெடுக்கப்படுவது வழக்கமாகிவிட்டது.


உண்மை தெரியுமுன்னரே இவை போன்ற செய்திகள் உலகத்தால் நம்பப்படுகின்றன. ரமேஸ் அந்தச் சிறுமியின் மீதில் கொண்டிருந்த அன்பை காதலாக அவனது நண்பர்கள் கற்பனை பண்ணி அவனைக் கேலி செய்யும் போதெல்லாம் எழும் மகிழ்வில் அவனது உணர்வுகள் இன்பம் கொள்ளும். அது வாலிபப்பருவம். உணர்ச்சிகளுக்கு ஊர்வலம் போகும் பருவம். அனுராதா, அவள் ராசாத்தி பருவமடைந்தாலும் பெண் என்பதால் விளைந்த கட்டுப்பாட்டுக்குள் கட்டுப்பட்டவள். பாடம்,படிப்பு, கலைகள், விளையாட்டு என்று களித்திருப்பதால் அவளுக்கிருந்த ஈடுபாடு அவளை வேறெங்கும் ஈர்க்காது ஒரு தடத்தில் ஓட வைத்தது.

இப்பொழுது இவர்கள் இருவரின் பெயர்களும் சுவரில் எழுதப்பட்டது மாத்திரமின்றி அந்தச்செய்தி பள்ளிக்கூடம் முழுவதும் சிறகு கட்டிப்பறந்து திரிந்தது. புள்ளி அளவான பொய் பூதாகரமாக விரிந்து எல்லோரையும் பயமுறுத்தியது. அவள் வெட்கம் அடைந்தாள். அவளின் தற்கொலைக்கும் அதுவே காரணமானது. அந்தப்பிஞ்சு உள்ளத்தின் துயரமான முடிவுக்கும் இந்தச் சிறிய விடயமே காரணமானது. அதிபரே எதிர்பார்க்காத வண்ணம் அதிபரால் வீசப்பட்ட கேவலமான வார்த்தைகள் அனுராதாவின் கலாசாரப்பண்புகளுக்குச் சமூகத்தில் ஏற்பட்ட இழிவு பருவமங்கைக்கு அவமானத்தை ஏற்படுத்தியது. அதிபர் திகைத்துப்போனார். ஆனால் அந்தக் காதல் விவகாரத்தை சுவரில் எழுதிய ராகவன் ரமேஸின் நண்பன் தன் தவறை வெளியே சொல்ல இயலாமல் வேதனைப்பட்டான்.

இதுவும் ஒரு பருவத்தின் வெளிப்பாடே. இவற்றைப் புரிந்துகொண்டு செயற்பட தவறியதால் ஒரு பிஞ்சு உதிர்ந்து போனது.

வாழ்வு மகத்துவமானது. வாழ்வின் மகத்துவத்தை உணர்ந்தும் உணர்த்தியும் வாழ்தலுக்கு ஊக்கம் தர உதவுதலே மனிதம் ஆகும்.

# முதலுதவி




முதுலுதவி என்பது ஆபத்தான நிலையில் (உடல்நிலை சரியில்லாமல் அல்லது காயம்பட்டு) இருப்பவருக்கு விரைவாக மற்றும் சரியான முறையில் மருத்துவ உதவி அளிப்பது ஆகும். ஆபத்தான நிலையில் இருக்கும் ஒருவருக்கு, அவருடைய உயிரை காப்பாற்ற அந்தவேளையில் அவருக்கு என்ன கொடுக்க வேண்டும், என்ன கொடுக்கக்கூடாது என்பதை அறிந்து சமயோசிதமாக செயற்பட வேண்டும். விபத்தில் சிக்கியவருக்கு முதலுதவி அளிக்கத் தேவை இரண்டு கைகள் மட்டுமே. இதை யார் வேண்டுமானாலும் முறைப்படி பின்பற்ற முடியும்,

**விபத்தின்போது காயம் ஏற்பட்டால் செய்யவேண்டிய முதலுதவி**

1. முதலில், எங்கு காயம்பட்டு இரத்தம் வடிகிறதோ, அந்தப் பகுதியை அழுத்தவேண்டும். ரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த இதுவே சிறந்த வழி. அடுத்து காயத்தின் மேல் பகுதியில் ஒரு சுத்தமான துணியைக் கொண்டு இறுக்கிக் கட்டவேண்டும்.
2. அடுத்ததாகக் கைகள், கால்களை மட்டும் பிடித்தபடி காயமடைந்த நபரைத் தூக்கும்போது அவருடைய முதுகெலும்பு மோசமாகப் பாதிக்கப்படலாம். அதனால் பின்கழுத்துப் பகுதியை தாங்கிப் பிடித்துக்கொண்டு, காயமடைந்த நபரைத் தூக்கிப் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றவேண்டும்.
3. மூன்றாவது, காயமடைந்த நபர் மயங்கிக் கிடந்தால் நாடித்துடிப்பு உள்ளதா எனப் பார்க்கவேண்டும். இல்லையென்றால், உடனடியாக இரண்டு கைகளைக் கொண்டு மார்பகப் பகுதியை அழுத்த வேண்டும். இரத்தம் மூளைக்குப் பாய்ந்தால்தான் இதயம் இயங்கும்.
4. நான்காவது, மிக முக்கியமானது. காயமடைந்த நபரின் உடலில் இரும்புக் கம்பி, கண்ணாடி போன்ற பொருள்கள் செருகியிருந்தால், அவற்றைத் தொடக்கூடாது. செருகியிருக்கும் பொருளைப் பிடுங்கி எடுத்தால், இரத்தப்போக்கை எளிதாகக் கட்டுப்படுத்த முடியாது. அதனால், முறையான மருத்துவ சிகிச்சை மூலமே மருத்துவரின் மூலம் அதை அப்புறப்படுத்த வேண்டும்.

இந்த வழிகாட்டுதலைச் சரியாகப் பின்பற்றிப் பாதிக்கப்பட்டவரை மருத்துவமனைக்கு விரைவாக அழைத்துச் சென்றாலே, உயிரைக் காப்பாற்றிவிட முடியும்

**விசப்பாம்புக்கடி**

★ கடித்த இடம், மனிதன் கடித்தது போல் அனைத்து பற்களும் வரிசையாக பதிந்து காணப்பட்டால் இந்த அறிகுறி விஷப்பாம்பு கடி அல்ல.

★ கடித்த இடம், இரண்டு பற்கள் மட்டும் சற்று இடைவெளியில் பதித்து காணப்பட்டு கடித்த இடம் சற்று தடித்து(வீங்கி) கடுமையான வலி இருந்தால் இந்த அறிகுறி விஷப்பாம்பு கடித்ததாகத்தான் இருக்கக்கூடும்.

**விசப்பாம்புக்கடிக்கான முதலுதவி**

1. கடித்த இடத்தில் இறுக்கி கட்டுப் போடவேண்டாம். இறுக்கி கட்டுப் போடுவதன் மூலம், சில சமயங்களில் விசம் ஓரிடத்திலேயே தங்குவதால் கடித்தப்பகுதி அழுகிபோகும். லேசான இறுக்கத்துடன் கட்டுப்போடுவது நல்லது.
2. காயப்பட்ட இடத்தை ஓடும் நீரில் சோப் போட்டு மூன்று முறை கழுவவும்.
3. பாம்பு கடிபட்டவர் பதற்றமடையக்கூடாது. அவர் பதற்றமடையும்போதும் இரத்த ஓட்டம் அதிகரிக்கும்.
4. பாம்பு கடித்துவிட்டால் வேகமாக நடக்கக்கூடாது. ஏனெனில் நாம் வேகமாக நடக்கும்போது இரத்த ஓட்டம் அதிகரிக்கும். அதனால் நம் இரத்தத்தில் கலந்துள்ள விசம் விரைவில் நம் உடல் முழுவதும் பரவி உயிரிழப்பை விரைவுபடுத்துகிறது.
4. இயன்றவரை பாம்புக்கடிக்குள்ளானவரை தைரியமூட்டவும். எந்த அளவிற்கு அவரின் இதயத்துடிப்பைக் கட்டுப்படுத்துகின்றோமோ, அவ்வளவிற்கு அவரைக் காப்பாறுகின்றோம்.
5. பாம்பு கொத்திய இடத்தை, இதயத்தை விடத் தாழ்த்தி வைக்கவும். பாம்புக்கடிக்குள்ளானவரை படுக்க வைத்து மருத்துவமனைக்கு அழைத்து செல்லவும்.
6. பாம்பு கடித்துவிட்டால் பாம்புக் கடிக்குள்ளானவரை தனியார் மருத்துவமனைக்கு அழைத்து செல்லாதீர்கள். கால தாமதம் செய்யாமல், உடன் அரச மருத்துவமனைக்கு அழைத்துசெல்லவும்.
7. முடியும் என்றால் பாம்பு பற்றிய விபரங்களைப் பெறவும். சில சமயங்களில் அடித்துக் கொல்லக்கூடிய நிலை ஏற்படலாம். எனினும் இவ்வாறு அடிக்க நேர்ந்தால், பாம்பின் தலையில் அடித்துக் கொல்ல வேண்டாம். ஏனென்றால், தலையை வைத்துத்தான் பாம்பை இனம் காணலாம். கடிபட்ட நேரம் போன்ற தகவல்கள் முக்கியமானவை. பாம்பு கடித்தால் கிட்னியையும் கண்களையும் உடன் பாதிக்க கூடும். உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்பதை கவனத்தில் கொண்டு முதலுதவி செய்யப்பட வேண்டும்.




பணம் என்ற காகிதத்தை பெற..
சிலர் அன்பை இழக்கின்றனர்.
சிலர் பண்பை இழக்கின்றனர்.
சிலர் நட்பை இழக்கின்றனர்.
சிலர் உறவை இழக்கின்றனர்.
சிலர் கற்பை இழக்கின்றனர்.
சிலர் கண்ணியத்தை இழக்கின்றனர்.
சிலர் மார்க்கத்தை இழக்கின்றனர்.
சிலர் மனித நேயத்தை இழக்கின்றனர்.
சிலர் வாலிபத்தை இழக்கின்றனர்.
சிலர் வாழ்க்கையையே இழக்கின்றனர்.




## Cute Prayer

**Child:** God,
Please I don't want 3rd world war.




**God:**
Why?
You love your
country so much?

**Child:**
No God,
I am weak in history
I can't study another war.



# Today's Society





**மனைவி:-**
என்னங்க
சொர்க்கத்தில்
கணவனும் மனைவியும்
சேர்ந்து வாழ முடியாதாமே?
**கணவன் : -**
அதனால்தான்டி
அது சொர்க்கம்.




நீ அடுத்தவனை அழிக்க நினைத்தால்....
உன்னை அழிக்க ஒருவன் வந்து கொண்டிருப்பான்...!!!

## பெண்களும் சமாதானமும்

* 5நிமிடத்தில் ஒரு பெண் சமாதானம் ஆகிறாள் எனில், அது தாய்.
* 15 நிமிடத்தில் ஒரு பெண் சமாதானம் ஆகிறாள் எனில், அது சகோதரி.
* 30 நிமிடத்தில் ஒரு பெண் சமாதானம் ஆகிறாள் எனில், அது தோழி.
* 3 மணி நேரத்திற்கு மேலாகியும் சமாதானப் படுத்த முடிய வில்லையெனில். அது காதலி
* உனக்கு சமாதானம் செய்யும் சந்தர்ப்பம் கூட கிடைக்க வில்லையெனில் அது மனைவி.

**சிறப்புக் கவிஞர்** ✍ கம்பிகளின் மொழி -பிரேம்

பாலமுனையை வசிப்பிடமாகக்கொண்ட பாலமுனை பாறூக் என அழைக்கப்படும் இவர் சுமார் நாற்பது வருடங்களாக கவிதை எழுதிவரும் கவிஞர். இலங்கை அரசு வழங்கும் அதியுயர் விருதான கலா பூசணம் விருது கிழக்கு மாகாண அரசு வழங்கும் வித்தகர் விருது மற்றும் சாமஸ்ரீ, சிறாஜுல் புனூன் கவிப்புனல், கவித்தாரகை, கவிஞர் திலகம் போன்ற விருதுகளையும் பட்டங்களையும் பெற்றவர்.




# வாசிப்பை நேசிப்பாய் !

வாசிப்பை நேசிப்பாய்
வளமாக்கும் அது உன்னை!
வார்த்தைகளில் சொல்ல
வாராத இன்பத்தைத்
தருமுனக்கு வாசிப்பு
அவரவரே அனுபவித்து
உணர்கின்ற மகிழ்ச்சி அது!
அனுபவித்துப் பார்!
அதுவோர் புதிய சுகம்!
வாசித்துப் பார்
வாழ்வில் ஒரு திருப்பம்
ஒரு மாற்றம்
நீ பெறுவாய்!
உள்ளம் அமைதி பெறும்
ஆறுதலை நீ அடைவாய்
மூளை சுறுசுறுப்பாய்
இயங்கத் தொடங்கி விடும்
வாசித்துப் பார்!
நீயோர் புதிய உலகத்தில்
சஞ்சரிப்பாய்!
அது -
நீ படித்த நூல்தந்த உலகம்
ஆசிரியன் வடித்துத் தந்த உலகம்!
வாசித்துப் பார்
உன் சிந்தையில் மகிழ்ச்சி தோன்றும்
புதிய நடத்தைகள்
புதிய பாத்திரங்கள
புதிய எண்ணங்கள் உன்னில் நிரம்பும்
வாசிப்பை நேசிப்பாய்
கற்பனை அதிகரிக்கும்
உன் திட்டங்கள் செழுமை பெறும்
நீ மீண்டும் மீண்டும் பிறப்பாய்
நடைமுறை உலகிற்குப்
பொருத்தமுடை யவனாய்
புதியவனாய்
நீ மாறி மாறிப் பிறப்பாய்!
வாசித்துப்பார்!
நீ ஒரு நூலில் மூழ்கி
வெளியே வருகிற போது
அந்த நூலின் நாயகனாய்
மாறி வருகிறாய்
வெற்றி தோல்வியை
சகிக்கும் மனிதனாய்
தேறி வருகிறாய்!
வாசித்துப் பார்
உனக்குத் தனிமை தெரியாது
சலிப்புத் தட்டாது
அலுப்பு வராது
தரமான தகுதியான நூல்களை
வாசித்துப் பார்!
கதை நூல்களை
சிறு வயதில் வாசி
பின்னர் வளர வளர
தொழில் நுட்பம் முகாமைத்துவம்
விஞ்ஞானம் ஆத்மீகம் என்று
ஒவ்வொன்றாய் வாசி
உன் வாழ்வுக் கட்டமைப்பில்
ஓர் ஒழுங்கைக் கண்டு
நீ அதிசயிப்பாய்!
வாசித்துப் பார்
உன் உணர்வுகள் தூய்மை பெறும்
எண்ணங்கள் எழுச்சி பெறும்
வாசி
வாசித்தவற்றை வாழ்வில்
பிரதிபலித்துப் பார்
எந்தச் சவாலையும் சமாளிக்கும்
ஆற்றல் வரும்
நீ வெற்றி பெறுவாய்
வாசிப்பை நேசிப்பாய்
வளமாக்கும் அது உன்னை!

- பாலமுனை பாறூக் -

2002இல் இலங்கையில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய விழாவில் சிரேஷ்ட கவிஞருக்கான விருது இவருக்கு கிடைத்தது. மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற இலக்கிய மாநாடுகளில் பங்கேற்றதுடன், காயல்பட்டின மாநாட்டிலும் கவிதை பாடியவர் **இவரது எழுத்துப் புலமைக்கு வழிகாட்டியவர் யாரென வினவியபோது,**

தான் கல்வி கற்ற மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் தமிழ் ஆசானாக இருந்த சித்தி விநாயகம் அவர்கள் தமிழ் இலக்கியத்தை கற்பித்த நேர்த்தியும் பாடல்களை உச்சரித்த விதமும் ஆழமாகப் பொருள் கூறிய பாங்கும்தான் என்னை எழுதத்தூண்டிய விடயங்கள் எனவும், ஆரம்பத்தில் தினபதி, வெற்றிமணி ஆகிய சஞ்சிகைகளில் நகைச்சுவைத்துணுக்குகள் தான் எழுதத்தொடங்கினேன் எனவும், அவர்களின் தட்டிக்கொடுப்பும் ஊக்கமுமே கவிதை போன்ற ஏனைய துறைகளில் கால்பதிக்க உதவியது எனவும் கூறுகின்றார்.

சிறந்த சமூக சேவையாளரான இவர் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை மாவட்டத் தலைவராகவும், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.யின் அம்பாறை மாவட்ட பணிப்பாளராகவும் பாலமுனை கிராமோதய சபையின் தலைவராகவும், பாலமுனை ஜும்மா பெரியபள்ளிவாசல் தலைவராகவும் சேவையாற்றியவர். பாலமுனை பூஞ்சோலை எழுத்தாளர் மன்றம் தென் கிழக்கு கலாசார பேரவை என்பவற்றின் செயலாளராகவும் கடமை புரிபவர். இலங்கை இஸ்லாமிய நூல் வெளியீட்டு பணியக பணிப்பாளர் சபை உறுப்பினர். கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டலத்தின் ஸ்தாபக உறுப்பினர். மேலும் இவர் அகில இலங்கை சமாதான நீதிபதியாகவும் அட்டாளைச் சேனை மத்தியஸ்த சபை உறுப்பினராகவும் மக்கள் பணிபுரிபவர். இலங்கை வங்கியில் முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்.

**இவரது வெளியீடுகளுக்கான விருதுகள் சில**

பதம் (1987), சந்தனப் பொய்கை (2009) கவிதை நூல்களின் மூலம் பிரகாசித்தவர். கொந்தளிப்பு எனும் இவருடைய குறுங்காவியம் 2010இல் வெளிவந்தது. இது 2010இல் வெளிவந்த சிறந்த காவிய நூல் என இலங்கை அரச சாஹித்ய சான்றிதழைப் பெற்றுக் கொண்டது இவரால் வெளியிடப்பட்ட தோட்டுப்பாய் மூத்தம்மா (2011) குறுங்காவியம், இவ்வாண்டில் மூன்று தேசிய சாஹித்ய விருது, பரிசுகளைப் பெற்றுக்கொண்டது. அவை இலங்கை அரச சாஹித்ய விருது (2012), கொடகே தேசிய சாஹித்ய விருது 2012ன் உருத்திரமூர்த்தி மகா கவி விருது இலங்கை இலக்கிய பேரவை (யாழ்ப்பாணம்) சிறப்புச்சான்று என்பனவாகும்.

இவரின் குறுங்காவியங்களை பாலமுனை பாறூக் குறுங்காவியங்கள் ஓர் ஆய்வு எனும் தலைப்பில் திரு. க.சேகர் எம்.ஏ.பி.எட் அவர்களதும் முனைவர் மு.இ.அகமது மரைக்காயர் அவர்களினதும் நெறியாள்கையில் ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக்கழக அனுமதிக்குட்பட்ட புதுக் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பட்டம் பெற்றுள்ளார்.

**இவரது சமூகப்பணி மேலும் சிறக்க ஒளி அரசி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.**

**சிறப்புக் கவிஞர் பக்கத்திலும் கவிஞர்கள் அறிமுகப் பக்கத்திலும் தங்களை தங்களின் கவிதைப் புலமையை வெளிப்படுத்த விரும்புவோர். 0713778675 அல்லது 0718628369 என்ற இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு கவிஞர்கள் வட்டத்துக்குள் இணைந்து கொள்ளலாம்.**

## வார தான பலன்

| கிழமை | நிவேதனம் | பலன் |
|---|---|---|
| 1. ஞாயிறு | பாயாசம் | ஆரோக்கியம் |
| 2. திங்கள் | பால் | சந்ததி வளரும் |
| 3. செவ்வாய் | வாழைப்பழம் | செல்வம் |
| 4. புதன் | வெண்ணெய் | மனச்சாந்தி |
| 5. வியாழன் | சர்க்கரை | ஞானம் |
| 6. வெள்ளி | வெள்ளைச்சக்கரை | பக்தி |
| 7. சனி | பசு நெய் | நீண்ட ஆயுள் |

திருமதி ஜெ.சுகந்தசன்

## குத்துவிளக்கும் அதன் பலன்களும்

1. ஒரு முகம் ஏற்றினால் - மத்திம பலன் தரும்.
2. இரண்டு முகம் ஏற்றினால் - குடும்ப ஒற்றுமையைத் தரும்.
3. மூன்று முகம் ஏற்றினால்- புத்திரசுகம் தரும்.
4. நான்கு முகம் ஏற்றினால்- பசு, பூமி ஆகியவற்றைத் தரும்.
5. ஐந்து முகம் ஏற்றினால்- செல்வத்தைத் தரும்.

## நவக்கிரக நிவேதனம்

1. சூரியன் - சூடு ஆறாத சர்க்கரைப் பொங்கல்.
2. சந்திரன் - பால் பாயாசம்.
3. செவ்வாய் - பொங்கல்.
4. புதன் - புளியோதரை.
5. குரு - தயிர்ச் சாதம்.
6. சுக்கிரன் - நெய்ப் பொங்கல்.
7. சனீஸ்வரன் - எள் சாதம்.
8. இராகு - உழுந்துச் சாதம்.
9. கேது - கொள்ளுப் பொடி கலந்த அன்னம்.

அ.அஸ்வினி (சித்த மருத்துவ மாணவி)



# மாதவிடாய் கோளாறை சரியாக்கும் முள்ளங்கி!

குறைந்த விலையில் நிறைந்த சத்துக ளைத் தரும் காய்கறிகளில் முள்ளங்கிக்குத்தான் முதலிடம். அன்றாட உணவில் தவறாது இடம்பி டிக்கும் காய் இது.

முள்ளங்கியின் மகத்துவத்தை அறிந்து, பீட்சா, பர்கர், சன்ட்விச் போன்ற வெளிநாட்டு உணவு களிலும், முள்ளங்கியைத் துருவிப் பயன்படுத் துகின்றனர். முள்ளங்கியின் மருத்துவப் பலன்க ளைப் பற்றி யாழ். சித்த மருத்துவர் ஒருவரிடம் கேட்டோம்.

''முள்ளங்கியில் சிவப்பு முள்ளங்கி, வெள்ளை முள்ளங்கி, மஞ்சள் முள்ளங்கி, சுவர் முள்ளங்கி என நான்கு வகைகள் உள்ளன. இதில் நாம் அதிகம் பயன்படுத்துவது வெள்ளை, சிவப்பு முள்ளங்கிகளையே. சிறுநீரகக் கல்லடைப்பைப் போக்குவதில் முள்ளங்கிக்குப் பெரும் பங்கு உண்டு. தாகத்தைத் தணிக்கும். பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சினையைத் தீர்க்கவல்லது. முள்ளங்கியை சமைக்கும்போது, நாம் பெரும் பாலும் அதனுடைய கீரையைப் பயன்படுத்து வது இல்லை. முள்ளங்கி வாங்கும்போதே அதன் கீரையோடு வாங்குவது நல்லது. மதிய உணவில், முள்ளங்கிக்கீரையில் பருப்பு சேர்த்து சமைத் துச் சாப்பிட்டுவந்தால், மூட்டுவலி, தசைவலி, நீர்க் கடுப்பு, எரிச்சலைக் கட்டுப்படுத்தும். அதே போல், மார்பக நோய்களைக் கட்டுப்படுத்தும் தன்மையும் இந்தக் கீரைக்கு உண்டு. சிலர், முள்ளங்கியை பச்சையாகச் சாப்பிடுவார்கள். இதனால், தொண்டையில் எரிச்சல், கரகரப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. வேகவைத்துச் சாப்பிடு வது இந்தப் பிரச்சினை வராமல் தடுக்கலாம்.

**ஆண்களுக்கு:**

நீர்த்தடத்தில் ஏற்படக்கூடிய நீர் எரிச்சல், நீர் குடித்தல், சிறுநீர் கழிக்கும்போது இரத்தம் வெளியேறுதல், உயிரணுக்கள் வெளியேறுவது போன்ற பாதிப்புகள் உள்ளவர்களுக்கு முள்ளங் கிதான் மருந்து. ஆண்களின் தவறான பழக்கத் தினால் ஏற்படும் மர்ம நோய்கள், சிறுநீருடன் உயிரணுக்கள் அதிகமாக வெளியேறுதல், அடிக் கடி சிறுநீர் கழித்தல், தகாத உறவினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மீட்டெடுக்க, முள்ளங்கி யைத் தொடர்ந்து சாப்பிட்டு வருவதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

**பெண்களுக்கு:**


பெண்களுக்குக் கர்ப்பக் காலத்தில் ஏற்படக் கூடிய வெள்ளைப்படுதல், கர்ப்பவாய்ப்புண், மாதவிடாய் காலங்களில் ஏற்படக்கூடிய அதிக உதிரப்போக்கு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய தன்மையும் முள்ளங்கிக்கு உண்டு. மேலும் வாதப் பிணி, வயிற்று எரிச்சல், குடல் விருத்தி நோய், கல்லடைப்பு, இருமல், பல்வலி போன் றவற்றுக்கும் முள்ளங்கி சிறந்த ஓர் உணவு. தூக் கமின்மையாலும் உடல் மெலிந்து இருப்பவர் கள் தினமும் முள்ளங்கியை உண்டுவர, உடல் வலிமை பெறும். உடலில் உள்ள சத்துகள் வெளி யேறுவதைத் தடுக்கவும், சிறுநீரை சீராக்கும் தன் மையும் இந்த முள்ளங்கிக்கு உண்டு.

**முள்ளங்கி அல்வா**

முள்ளங்கியை சாப்பிட மறுக்கும் குழந்தைக ளுக்கு அல்வா செய்து கொடுக்கலாம்.

முள்ளங்கியை நன்றாகத் துருவி குக்கரில் வேகவைக்கவும்.

இதனுடன் சம அளவு நாட்டு வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்து உரலில் இடிக்கவும். நல்ல மிருதுவாகும். முந்திரிப்பருப்பு, திராட்சை சேர்த்துக்கிளறி இறக்கும்போது, சிறிது ஏலக்காய், நெய் சேர்க்கவும். முள்ளங்கி அல்வா ரெடி.



# எதிர்கால சிற்பிகள்

கரியுகமாம் கற்காலமதிலே
கணனிமயப்படுத்தப்பட்ட சிறார்களாய்
கைவினையாக்கங்கள் கைவிட்டு
கைப்பொம்மையாக சுற்றுகின்றோம்
எங்கே எம் எண்ணங்கள்
எங்கனமோ மறைந்துவிட்டன
சிந்தனைகளை சிதறவிட்டு
சிற்பிகள் நாமென்பதை மறந்தோமே
எழுவோம் வீறுகொண்டு
எதிர்காலச் சிற்பிகளாய்
எம்மையே நாம் மாற்றிடுவோம்
கணனி என்னும் மாயையை மறந்திடுவோம்
கற்பித்த ஆசிரியர்களை மறந்தோம்
கண்கண்ட தெய்வம் கணனியென்றோம்
கட்டி வைக்கப்பட்ட எம் சிந்தனையாற்றலை
கணிசமாய் எழுந்து கட்டவிழ்ப்போம்
விழிப்போம் வீரியமாய்
செதுக்கிடுவோம் எம் எதிர்காலமதை
வீரமான எதிர்காலத்தின் சிற்பிகள்
நாமென்பதை உணர்ந்திடுவோம்.

*-யே.மேரி டியூலினா, தரம் 10*

திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை.



# நிலா

என்னவனிடம் கேட்டேன்
என்னுடன் எத்தனையோ பெண்கள் இருந்தார்களே
என்னை மட்டும் ஏன் உனக்கு பிடித்தது என்று
அதற்கு அவன்
உன்னுடன் இருந்த பெண்கள் எல்லோரும் நட்சத்திரம்
ஆனால் நீயோ நிலவாக இருந்தாய் அந்தக் கூட்டத்தில்
அதனால் உன்னை காதலித்தேன் என்றான்
என் மனதுக்குள் பட்டாம் பூச்சி பட படவென பறந்தது
ஆனால் அப்போது எனக்கு தெரியவில்லை
இந்த நிலாப் பெண்ணின் வாழ்வில்
அமாவாசை தினம் தோறும் வரப்போவது பற்றி

*- பவானி தர்மராஜா (ஜேர்மனி) -*

# முதுமையிலும் இளமை



**செல்லராசா:**
மாமரத்து சோலைதனில்
மரகதம் மாமி ஊஞ்சல் கட்ட
மணிக்கணக்காய் அதில் ஆடி
மனம்விட்டு பேசும் காலம் போய்
மாயை உலகம் மருட்டலான வாழ்வில்
மணிகள் பல செல்கின்றதே.

**அன்னக்கிளி:**
இருட்டான உலகத்திலும்
இன்னல்கள் எனக்கில்லை
இயந்திரமான என் வாழ்க்கைக்குள்
இனிப்பான சுவை உண்டு
இயந்திரத்தை கண்டுபிடித்தான் என்பேரன்
இலக்கை அடைந்தானெல்லோ

**செல்லராசா:**
அரிசி இடித்து உணவாக்கி
அன்புடன் உணவூட்ட
துலாமிதித்து வயல் செய்து
துன்பமெல்லாம் பறந்தோட
மகிழ்வுடன் இருந்தகாலம் இனி வருமா
மகாராசி சொல் கிளியே

**அன்னக்கிளி:**
எட்டாக்கனியை எட்டிவிட்ட
என் பேரனின் கண்டுபிடிப்பு
எம் வாழ்வின் வெற்றியல்லோ
எல்லையில்லா மகிழ்வெனக்கு
வானமே என் கையில்
வசப்பட்டேன் உன்னிடமே

**செல்லராசா:**
புதுமை பல படைக்க
புதுப்பேரன் வருவான் பார்
அறுபதிலும் ஆசைவரும்
அழகான வாழ்வெனக்கு
அடுத்த ஜென்மத்திலும்
அன்னக்கிளி தந்துவிடு.

*-புதுவை மகள் -*

# காயம் பட்ட உள்ளங்கள் கைதொழுத தெய்வம்

## மருத்துவர் பத்மலோசினி




## 'உங்களுக்கு ஓர் முன்னோடி'

வரலாறுகள் நமக்கு விட்டுச்சென்ற படிப்பினைகள், தியாக மனநிலையுடைய சிலரின் சேவைகள் எமது வாழ்நாளில் மறந்துவிட முடியாது. ஒரு நாட்டிற்கு தேவைப்படுவதெல்லாம் மகா தியாகம், மகா சேவை, மகா தைரியம் போன்றவையே ஆகும். தியாகங்களுக்கு நிகராக எவற்றையும் ஒப்பிட்டுக் கூறி விடமுடியாது. ஒரு பெண்ணானவள் தனது கல்வியினால் மேன்மையடைந்து உயர் பதவிகளை பெற்று சுகபோகங்களை அனுபவிக்கக்கூடிய நிலையேற்பட்டும் அனைத்தையும் துறந்து தனது மக்களுக்காக வாழும் நிலை என்றும் போற்றப்படவேண்டியது. எமது நாட்டில் கொடூர யுத்தத்தில் மக்களுக்காக உயரிய சேவையை புரிந்த சில பெண்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சிலர் காணாமல் போயிருக்கிறார்கள். அந்தவகையில் யுத்தம் தந்த கொடூர வலிகளில் வைத்தியக்கலாநிதி பத்மலோசினி அவர்கள் காணாமல் போய் தீர்வுகள் எதுவும் பெறப்படாமல் இன்றுவரை உள்ளமை தமிழ்பெண்களிற்குரிய சாபக்கேடான ஒரு விடயமாகும்.

1959ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி சிவலிங்கம் - லக்குமி தம்பதிகளின் புதல்வியாக இடைக்காடு மண் பெற்றுக்கொண்ட வரமாக பத்மலோசினி பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை இடைக்காடு மகாவித்தியாலயத்தில் முடித்துக் கொண்ட அவர் தனது உயர்தரக்கல்வியை புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரியில் படித்து பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு தெரிவானார். பல்கலைக்கழக படிப்பை முடித்துக்கொண்ட அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிறிது காலங்கள் கடமையாற்றி பின்னர் வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் மக்களுக்கான உயிர்காக்கும் உன்னத பணியில் ஈடுபட்டார். அப்போது நம் மண்ணில் கொடுங்கோலர்கள் கோரத் தாண்டவம் ஆடிய வேளையில் பத்மலோசினி திடீரென காணாமல் போய்விட்டார். அவளது தாயார் அவளை எங்கும் தேடினார். இந்திய இராணுவத்தினர் கைதுசெய்து வைத்திருந்த தகவல் அவளது தாயாருக்கு கிடைக்கவே தனது மகளை சட்டவாளர் ஞானமூர்த்தி அவர்களின் உதவியுடன் விடுதலை செய்வதற்கான நடவடிக்கையில் அவளது தாயார் ஈடுபட்டார். கைதுசெய்து வைத்திருந்த இந்திய இராணுவத்தினர் 8 நாட்களின் பின்னர் அவளை விடுதலை செய்தனர். அவள் எதற்காக கைதுசெய்யப்பட்டாள்? சித்திரவதைப் படுத்தப்பட்டாள்? மக்களுக்கான மனிதாபிமானப்பணி செய்ததற்காகவா? எதுவுமே அவளுக்கு புரியவில்லை.

அதன்பின்னர் அவள் தனது குடும்ப வாழ்விலிருந்து விடுபட்டு தன்னை முழுமையாக மக்களுக்காக அர்ப்பணம் செய்துகொண்டாள். மக்களுக்கு மருத்துவப்பணிசெய்யும் டொக்டர் அன்ரியாக மக்களிடையே அறிமுகமானாள். இரவு - பகல் பாராத அயராத அவளது மருத்துவ சேவை மக்களிடத்தே அவள் மீது உயர்வான எண்ணத்தை வரவழைத்தது. அவளது கனிவான பேச்சு மக்களின் மனக்காயங்களையும் ஆற்றியது. மக்கள் அவளைத் தேடிவராமலே மக்களைத்தேடிச்சென்று மருத்துவ உதவிகளை வழங்கினாள். அதன்பின்னர் யாழ்மண்ணிலிருந்து இடப்பெயர்வு. வன்னி மண்ணில் மக்களுக்கான அவளின் பணி தொடர்ந்தது. காயப்பட்டு அவயவங்களை இழந்து நிற்கும் மக்களுக்கு மனக்காயத்தையும் உடல் காயத்தையும் ஆற்றும் மாபெரும் பணியை செய்தாள். கண்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கண்களை காக்கும் உன்னத சேவையையும் செய்துவந்தாள். பெண்களுக்கான எந்த நோய்களுக்கும் அன்புடனும் அரவணைப்புடனும் உளவியல் ரீதியாகவும் பல ஆலோசனைகளை வழங்கி சேவையாற்றி வந்தாள். பெண்கள் பிரசவ வலியால் துடிக்கும்போது அவளது கையைப்பற்றினால் அந்த வலி பறந்துவிடும் அளவுக்கு ஒரு தாயாக அவர்களுடன் கூடவே இருந்தாள். மக்களுக்காகவே வாழ்ந்து வந்த

அவள் தனது 40 ஆவது வயதிலேயே அவளது கொள்கைகளுடன் ஒருமித்த உணர்வுடைய கோபாலரத்தினம் என்பவரை திருமணம் செய் தாள். குழந்தைப்பாக்கியம் அவளுக்கு கிடைக் காவிடினும் பல குழந்தைகளுக்கு தாயானாள். குழந்தைகள் அனைத்தும் பத்மலோசினியை பத்து மாமி, சொக்கா மாமி, டொக்டர் மாமி என அன்பாக அழைத்திடுவார்கள். அந்த வகையில் தமிழ் குழந்தைகளுக்கெல்லாம் அவள் ஒரு தாய் தான். தமிழர்களுக்கான பண்டிகைகள் என்றால் குழந்தைகளுடன் அவள் வீட்டில் கொண்டாட் டம்தான். அனைவருடனும் உணவருந்தி மகிழ் வாள். அநாதைக்குழந்தைகள் மேல் அவளுக்கு அலாதிப்பிரியம். இவ்வளவு முதிர்ச்சியான அனு பவம் வாய்ந்த ஒருத்தியாக இருந்தும் அவளது கணவருக்கு அவள் ஒரு குழந்தைதான். அவர்கள் இருவரும் ஈருயிரும் ஒருடலுமாக வாழ்ந்து வந் தனர். சுனாமியின் கோரத்தாண்டவம் மறக்கமுடி யாதது. அந்த வேளையிலும் அவளது மருத்துவ சேவை தொடர்ந்தது. அதேசமயம் தமிழர்களின் விடுதலைக்கான கொள்கையளவிலான துடிப்பும் செயற்பாடும் அவளுடன் கூடப்பிறந்திருந்தது. அடிப்படை வசதிகளற்ற பிரதேசங்களில் தியாகி திலீபனின் நினைவான பல மருத்துவமனைகளை நிறுவி மக்களுக்கான சேவைகளை புரிவதிலும் நடமாடும் மருத்துவ சேவைகளினை ஏற்படுத் திக்கொடுப்பதிலும் நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ சேவைகளை செய்வதிலும் காயப் பட்டவர்களுக்கான சிறந்த மருத்துவ வசதிக ளையும் ஏற்படுத்திக்கொடுப்பதுடன் வறிய மக் களுக்கான இலவச மருத்துவ உதவிகளையும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கான மருத்துவ சேவைகளை வழங்குவதிலும் அவளது தம்பி மகேந்திரராஜ்(ரேகாவுடன்) இணைந்து அயராது பணியாற்றினாள்.

மருத்துவ பணியின் நிமிர்த்தம் சிறிது காலங்கள் மட்டக்களப்பில் இருந்தவள் மட்டக்களப்பில் ஏற்பட்ட அசம்பாவித சூழலை தொடர்ந்து தனது கொள்கைகளே பெரிது என்று எண்ணி தனது கண்ணெனப்போற்றிய கணவரை சந்தர்ப்ப சூழ்நிலையால் பிரிந்து இரவோடிரவாக தனித்த ஒரு பெண்ணாக மட்டக்களப்பிலிருந்து வன்னிமண்ணை நோக்கி விரைந் தார். மிகவும் இக்கட்டான பிரச்சினை கள் நிறைந்த அந்த கொடூர சூழலில் அவளது துணிவான தனிவழிப்பயணம் அவளது கணவரையும் சில நாட் களிலேயே அவள் பாதையில் வரவழைத்தது. மீண்டும் கொள்கை வழிப்பயணத்தில் மகிழ் வான தம்பதிகளாக இருந்தார்கள் இரவு பகல் பாராது எறிகணைவீச்சுக்களிலும் செல்தாக்குத லின் மத்தியிலும் தனது உயிரை பொருட்படுத் தாது மக்களுக்கான மருத்துவ சேவையாற்றிய வைத்தியர்களான சத்தியமூர்த்தி, சண்முகராஜா, சிவபாலன், சுஜந்தன்,சுதாகரன்,கதிர்ச்செல்வன், பாஸ்கரன், செழியன், மற்றும் மருத்துவர் தேவா அன்ரி, வசந்தமாலா, மேலும் பயிற்றுவிக்கப் பட்ட மருத்துவர்கள், தாதியர்கள் போன்றோ ருடன் இறுதிவரை அவளது மருத்துவப்பணி வன்னி மண்ணிலே தொடர்ந்தது.

போர் முடிவடைந்தது. மக்களுக்கு மனிதா பிமானப்பணியாற்றிய மருத்துவர் பத்மலோ சினி இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் போனவர்களில் ஒருத்தியாகிவிட்டாள்.

எத்தனையோ உயிர்களை காப்பாற்றி மக்க ளின் காயங்களை போக்கிய மருத்துவப்பெண் மணி உயிருடன் இருக்கிறாளா? உயிருடன் இல் லையா என்பது இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது.

6 வருடங்கள் கடந்தும் முடிவுகள் அற்ற நிலை யில் அவளுக்கான தேடல் தமிழர்களாகிய எம் மனங்களில் மறாதவடுவை ஏற்படுத்தியுள்ளது என்பதை எவராலும் மறுத்துவிடமுடியாது.


மக்களுக்கான உன்னதமான மனிதாபிமான சேவையில் பல தமிழ்ப்பெண்கள் வைத்தியர் களாகவும் மனிதாபிமானமுள்ளவர்களாகவும் சிறந்த சேவையாளர்களாகவும் எதிர்காலத் தில் உருவாகுவதன் மூலம் பத்மலோசினியின் இலட்சிய இலக்கை வெல்வோமாக...

**(இன்னொரு பெண் ஆளுமையுடன் தொடரும்)**



உயர்கல்வி வாய்ப்பு நேர்காணல் இரா.சிகாமணி

# பட்டதாரியாகும் கனவை நிறைவேற்றும் இரசாயனவியல் கல்லூரி



பதிவாளர்
என்.ஐ.என்.என். நடராசா

**தகுதியும் திறமையும் இருந்தும் கூட பல்கலைக்கழக பட்டப்படிப்பை தொடர முடியாத உயர்தர கணித விஞ்ஞானத்துறை மாணவர்களை பட்டதாரிகளாக்குகின்றது எங்கள் இரசாயனவியல் கல்லூரி என்று பெருமிதத்துடன் கூறுகின்றார் இரசாயனவியல் கல்லூரியின் பதிவாளர் என்.ஐ.என்.என். நடராசா.**

கொழும்பு இராஜகிரியவில் தலைநிமிர்ந்து நிற்கின்றது இந்த தேசிய இரசாயனவியல் கல்லூரி. இங்கு 500 மாணவர்கள் எட்டு விதமான கற்கை நெறிகளை மேற்கொண்டுவருகின்றனர். இதுவரை இக்கல்லூரி 1,075 பட்டதாரிகளை உருவாக்கி யுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்லூரியின் பதிவாளர் நடராசாவை அவரது அலுவலகத்தில் சந்திக்கும் வாய்ப்பு ஒன்று கிட்டியது. இவ்வேளையில் இக்கல்லூரியின் செயற்பாடுகள் - அதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாகக் கேட்டபோது அவர் இப்படிக் கூறுகின்றார்.

இந்த இரசாயனவியல் கல்லூரி பேராசிரியர் ஜே.என்.ஓ. பெர்னாண்டோ காரணகர்த்தா ஆவார். இன்று அரச அங்கீகாரம் பெற்ற கல்லூரியாக திகழ்கின்றது.

இக்கல்லூரியில் பட்டம்பெற்று வெளிநாடு சென்று முதுமானி மற்றும் கலாநிதி பட்டங்களைப் பெற்ற எமது மாணவர்கள் சிலர் இப்போது இதே கல்லூரியில் விரிவுரையாளர்களாக இருக்கின்றனர் என்றும் அறிமுகப்படுத்தினார். இதுவரை இங்கு பயின்ற மாணவர்கள் 100 பேர் முதுமானிப் பட்டத்தையும் 100 பேர் கலாநிதிப்பட்டங்களையும் பெற்றுள்ளமை பெருமைப்பட வேண்டிய ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகம் செல்லமுடியாத மாணவர்களையும் பட்டதாரிகளாக்குகின்றோம் என்கிறீர்கள். அது எப்படி சாத்தியப்படுகின்றது என்று பதிவாளரிடம் கேட்டேன்.

அதற்கு அவர், உங்களுடைய சந்தேகம் நியாயமானதுதான். திறமை இருந்தும் வெட்டுப்புள்ளி காரணமாக பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களையும் இன்று அரச அங்கீகாரம் பெற்ற கல்லூரியாக திகழ்கின்றது.

இலங்கை பாதைளுமன்றத்தில் 1979ஆம் ஆண்டு இல.15 சட்டத்தின் படி நிறுவப்பட்டது இக் கல்லூரி.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கணிதம்/ உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல், இரசாயனவியல் உட்படட 3 பாடங்களில் சித்தியடைந்தும் வெட்டுப்புள்ளி காரணமாக பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களையும் பட்டதாரிகளாக்கி சாதனை படைத்துள்ளோம்.

பதிவாளர் நடராசா இலங்கை அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்கள பிரதி பகுப்பாய்வாளர் இரசாயன பகுப்பாய்வுத் துறையில் 33 வருடங்களுக்கு மேல் அனுபவம் உடையவர். இலங்கை விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தில் விசேட பட்டம் பெற்ற இவர், சர்வதேச நாடுகள் பலவற்றில் பயிற்சிபெற்று பட்டங்களைப் பெற்றவர். சேவையில் இருக்கும் போது பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றியவர்.

நீங்கள் எவ்வாறு மாணவர்களைச் சேர்த்துக் கொள்கின்றீர்கள் என்று ஒரு கேள்வியையும் கேட்டேன்.

நாங்கள் நுழைவுத் தேர்வு பரீட்சையை நடத்துவதன்மூலமே மாணவர்களைத் தெரிவுசெய்கின்றோம். இந்த தேர்வுப் பரீட்சையில் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெறும் பத்து மாணவர்களுக்கு வருடா வருடம் புலமைப் பரிசில்களை வழங்குகின்றோம். இவர்களிடம் இரண்டு வருடங்களுக்கு கட்டணங்கள் எதுவும் அறவிடப்படாது. அதேவேளை வருடா வருடம் பரீட்சைகளை நடத்தி அதில் ஒவ்வொரு பாடங்களிலும் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பணப் பரிசில்களை வழங்குவதோடு வருட இறுதியில் முதன்மையாக வரும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களையும் வழங்குகின்றோம் என்றார்.

தமிழ் மாணவர்கள் குறைவாகக் காணப்படுவதற்கான காரணம் என்ன என்று மற்றும் ஒரு கேள்வி.

இப்பொழுது 20 வீதமான தமிழ் மாணவர்கள்தான் உள்வாங்கப்பட்டுள்ளனர். நாட்டில் இடம்பெற்ற யுத்தசூழல் மற்றும் போக்குவரத்து போன்ற காரணங்களால் வடபகுதி மாணவர்கள் வருவது குறைவு. அத்தோடு விடுதி வசதிகளும் இல்லாததும் ஒரு காரணம் என்பது அவரது பதில்.

கூடுதலாக தமிழ் மாணவர்களை உள்வாங்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் தொடர்பான தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். அதில் பல பிரபல பாடசாலைகளின் மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இரசாயனவியல் பல்கலைக்கழகத்தின் கிளை ஒன்றை ஆரம்பிக்கும்படி கேட்டார்கள். இவ்விடயம் தொடர்பாக பரிசீலனை செய்த பல்கலைக்கழகப் பணிப்பாளர்கள்சபை இரண்டு வருட ஆரம்பப்பயிற்சிகளை யாழ்ப்பாணத்திலும் இறுதி இரண்டு வருடப் பயிற்சிகளை கொழும்பிலும் பெறும் வகையில் அமைக்கலாம் என்ற வகையில் பரிசீலனை செய்து வருகின்றனர் என்றார். இந்தத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் எமது வடபகுதி தமிழ் மாணவர்களும் இரசாயனவியல் பட்டதாரிகளாகி நன்மையடைவர் என்ற நம்பிக்கையுடன் விடைபெற்றோம்.



# குட்டி பாப்பாவுக்கு எது நல்லது எது கெட்டது?

குழந்தை வளர்ப்பு, இன்றைய இளம் பெற்றோருக்கு ஒரு புதிர். அழும் குழந்தையைச் சமாதானப்படுத்த முடியாமல் பசிக்கு அழுகிறதா, தூக்கத்துக்கு அழுகிறதா என்று தெரியாமல் விழிபிதுங்கிப் போகின்றனர்.

அம்மா, பாட்டி, அத்தை போன்றோர் நிறைந்திருந்த கூட்டுக்குடும்பம் மறைந்துபோனதன் விளைவுதான் இதற்குக் காரணம். பாட்டி, அம்மாவிடமிருந்து குழந்தை வளர்ப்பு ரகசியங்கள் மகளுக்கு இயற்கையாகவே கடத்தப்பட்டன. ஆனால், இப்போது அப்படி இல்லை. நகர்ப்புறங்களில், கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் குடும்பத்தில் இரண்டு வயதுவரை குழந்தையை வளர்ப்பது என்பது மிகவும் கடினம். பொதுவாக, பச்சிளம் குழந்தை வளர்ப்பில் புதுப் பெற்றோர்கள் செய்யும் தவறுகள் பற்றி குழந்தைகள்நல மருத்துவர் ஒருவரிடம் கேட்டோம்.

## பால் புகட்டுதல்

குழந்தைக்கு இரண்டு முதல் மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை பால் புகட்டவேண்டும். இதனால், சில தாய்மார்கள் இரவிலும் குழந்தையை எழுப்பிப் பால் புகட்டுவார்கள். இது தேவையில்லை. பொதுவாக ஆறு வாரத்திலேயே குழந்தைக்கு பால் அருந்தும் நேரம், தூங்கும் நேரம் என 'ரிதம் செட்' ஆகிவிடும். எனவே, இரவில் பசிக்கு அழுதால் மட்டும் பால் புகட்டினால் போதும். குழந்தைகளுக்கு ஆறு மாதம் வரை தாய்ப்பாலே போதும். தனியாக தண்ணீர் தரவேண்டியது இல்லை. ஆறு மாதத்துக்குப் பிறகு பால் அருந்தியதும் சிறிது காய்ச்சி வடிகட்டிய தண்ணீர் குடிக்கச் செய்யலாம்.

அவ்வப்போது, குழந்தைநல மருத்துவரை அணுகி, குழந்தைக்கு அந்தந்த மாதத்துக்கான வளர்ச்சி இருக்கிறதா என்று பரிசோதித்துக்கொள்ளுங்கள். வளர்ச்சி குறைவாக இருந்தால் மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று அதன்படி செயற்படுவது நல்லது.

## வாய் பராமரிப்பு

பச்சிளம் குழந்தைதானே என்று பெற்றோர்கள் குழந்தையின் வாய் பராமரிப்பைப் புறக்கணிக்கிறார்கள். பல் முளைக்காதபோதும் வாய் ஆரோக்கியம் மிகவும் முக்கியம். குழந்தைக்குப் பால் புகட்டியதும் மென்மையான துணியை வெதுவெதுப்பான நீரில் நனைத்து குழந்தையின் ஈறுகளையும், வாயையும் துடைக்கவேண்டும். ஃப்புளோரைட் குழந்தைக்கு மிக அவசியமான தாது உப்பு. அது நீரில் போதுமான அளவு இருக்கிறது.

## தூக்கம்

இரவில் தூக்கம் கெட்டுவிடக்கூடாது என்பதற்காக குழந்தையின் தூக்கப் பழக்கத்தை மாற்றுகிறேன் என்று சில தாய்மார்கள், பகலில் நீண்டநேரம் குழந்தையை விழித்திருக்க முயற்சிப்பார்கள். குறைந்தது ஓராண்டு வரையில் இந்தப் பழக்கத்தை முயற்சிக்காதீர்கள். அதிகச் சோர்வும்கூட குழந்தையின் தூக்கத்தைக் கெடுத்துவிடக்கூடும். குழந்தை எப்போதெல்லாம் தூங்க விரும்புகிறதோ அப்போது தூங்க வைத்துவிடுங்கள்.

## பேச அனுமதியுங்கள்

குழந்தைகள் வார்த்தைகளைப் பேச ஆரம்பிப்பதற்கு முன்னரே மொழியைக் கண்டறியவும், கற்கவும் முயற்சிக்கின்றன. அதனால் பெற்றோர்கள் பொருளற்ற ஓசைகளை எழுப்புவதைக்காட்டிலும் குழந்தைகளிடம் பேசவேண்டும். ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்லச்சொல்ல அந்த வார்த்தைகளைப் பேச குழந்தை முயற்சிக்கும். நாம் பேசும்போது நம்முடைய வாய் அசைவு, முக அசைவுகளை குழந்தை உற்றுநோக்கும். இதன்மூலம் குழந்தையின் மொழிதிறன் மேம்படும். எனவே, குழந்தைக்குப் புரியவில்லை என்றாலும்கூட தொடர்ந்து பேசுங்கள். குழந்தையின் கண்ணைப் பார்த்துப் பேசுவதும், அதன் கவனத்தை ஈர்த்து பேசத் தொடங்கும்.

## உறவுகளுடன் உறவாட விடுங்கள்

வேற்று முகம் அறியாதது மழலை. யார் கூப்பிட்டாலும் சிரித்தபடியே ஓடிவரும். ஆனால், வளர, வளர பெற்றோரைத் தவிர, வேறு யாரிடமும் ஒட்டாது. குழந்தைக்கு, சமூகத்துடனான உறவாடல் இல்லாமல் இருப்பது நல்லதல்ல. இதனைத் தவிர்க்க அக்கம்பக்கத்தினரிடம் பழகவிடுங்கள். நிறையக் குழந்தைகளைப் பார்த்ததும் குழந்தை துள்ளிக் குதிப்பதைப் பார்க்க முடியும். பாட்டி, அத்தை, சித்தி என்று வாரம் அல்லது மாதம் ஒருமுறை உறவினர்களிடம் கொண்டு சென்று பழகவிடுங்கள். உறவுகளின் உன்னதத்தை உணர்ந்து குழந்தை பல நல்ல விடயங்களைக் கற்றுக் கொள்ளும்.

# ஆளுமை விருத்தியில் முன்
# கல்முனை அல் - அ


பாடசாலை அதிபர்
SMM ஜாபீர்

கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள கமு/ அல் - அஷ்றக் ம.ம.வி.(தேசிய பாடசாலை) தற்காலப்பகுதியில் மாவட்ட ரீதியில், மாகாண ரீதியில் மற்றும் தேசிய ரீதியிலும் பல்வேறு சாதனைகளை நிலை நாட்டி உள்ளது.

இதேபோல் இணைப்பாட விதான செயற்பாட்டு நிகழ்வுகளிலும் சுற்றாடல் சார் நிகழ்ச்சி, விளையாட்டுத்துறை, கலைத்துறை ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது பாடசாலை தேசிய ரீதியில் கால்பதித்துள்ளது.

பல்வேறு துறைகளில் பல்லாண்டு காலமாக கால்பதித்து வந்த எமது பாடசாலை.

இருப்பினும் முதன் முறையாக எமது பாடசாலையைச் சேர்ந்த 3 மாணவர்கள் கிழக்கு மாகாணத்திலேயே ஜனாதிபதி பதக்கத்தை பெற்றுள்ளனர்.

இதிலும் குறிப்பாக இன்பாசா ஹமீட் என்ற மாணவி சுற்றாடல் முன்னோடி, ஜனாதிபதி பதக்கத்தையும், அதி விசேட விருதையும் பெற்றுள்ளார்.

இதன் காரணமாக இவர் அகில இலங்கையில் தெரிவுசெய்யப்பட்டு 28.11.2015 இல் புதுடில்லி, இந்தியாவிற்கு வெளிநாட்டுப்பயணத்தினை மேற்கொண்டிருந்தார். இவர் பல்வேறுபட்ட சுற்றாடல் சார் தேசிய பாசறைகளிலும், மாவட்ட பாசறைகளிலும் கலந்துகொண்டு இத்துறை சார் அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக் கொண்டது மாத்திரமன்றி மேற்குறிப்பிட்ட வெளிநாட்டுப் பயணத்தின் ஊடாக சர்வ தேச ரீதியான சுற்றாடல்சார் அறிவையும் அனுபவத்தையும் பெற்றுள்ளார்.

இவர் இத்துறையில் மாத்திரமன்றி கலைத்துறையிலும் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளார். 2011ஆம்ஆண்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடாத்தப்பட்ட கலைப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தில் சிறந்த ஓவியருக்கான விருதையும் பெற்றுக்கொண்டார்.

இவர் எமது பாடசாலையில் உயர்தர பிரிவில் பௌதீக விஞ்ஞானத் துறையில் கல்விகற்று வருகிறார். விஞ்ஞான முன்னேற்ற அமைப்பினது 71ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட 2015ஆம் ஆண்டிற்கான இளம் கண்டுபிடிப்பாளர் போட்டியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் சக்தி வளம் மற்றும் சூழல் பகுதியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இவர் நவீன முறையில் அமைக்கப்பட்ட சூழலுக்கு நேயமிகு எரிபொருள் சிக்கன சிரட்டைக்கரி சுடும் சூளையைக் கண்டுபிடித்தமைக்காகவே தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.




பொறுப்பாசிரியர்
SHM. உம்மு ஜமன்

இன்பாசா கிழக்கு மாகாணத்திலேயே முதன்முறையாக ஜனாதிபதி பதக்கத்தை அதிலும் அதி விசேட விருதினைப் பெற்று தமிழ் மொழி மூல மாணவர்களுக்கு ஒரு சிறந்த முன் மாதிரியாகத் திகழ்கின்றார்.

இப்பாடசாலையில் சுற்றாடல் முன்னோடிகளுக்கு நான் பொறுப்பாசிரியையாகத் திகழ்கின்றேன். இந்த வகையில் இன்பாசா வின் திறமைகளையும், ஆற்றல்களையும் நன்கு அறிவேன். இவர் சுற்றாடல் முன்னோடிக் குழுவிற்குத் தலைவராகவும் திகழ்கின்றார்.



# ன்னணியில் திகழும் அஷ்றக் ம.ம.வி.



உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்கும் இவர் சுற்றாடல்சார் செயற்பாடுகளில் மட்டுமன்றி ஓவியம் வரைதல், கவிதை, சிறுகதை எழுதுதல் செதுக்கல் வேலைப்பாடுகள் போன்ற பல்வேறு பட்ட கலைத் திறனைக் கொண்டவராகவும் திகழ்கின்றார். கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதிலும் ஆர்வமுள்ளவராகவும் திகழ்கின்றார்.

விஞ்ஞான முன்னேற்ற அமைப்பினது 71ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால்





நடத்தப்பட்ட 2015ஆம் ஆண்டிற்கான இளம் கண்டுபிடிப்பாளர் போட்டியில் உயர்தர விஞ்ஞானத்துறையில் சக்திவளம் மற்றும் சூழல் பிரிவில் தங்க பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இவர் நவீன முறையில் அமைக்கப்பட்ட சூழலுக்கு நேயமிகு எரிபொருள் சிக்கன சிரட்டைக்கரி சுடும் சூளையைக் கண்டுபிடித்தமைக்காகவே தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இன்பாசாவின் இவ்வளர்ச்சிக்கு அவரின் அயராத முயற்சி மாத்திரமன்றி பெற்றோரின் ஆதரவும் ஒத்துழைப்பும் உறுதுணையாக இருந்துள்ளது.

தேசிய ரீதியில் தனது பெயரையும் பாடசாலையின் பெயரையும் பதியச் செய்து தனது பெற்றோருக்கும், பாடசாலைக்கும், ஊருக்கும் பெருமை தேடித்தந்த இவர் சர்வதேசரீதியிலும் தனது திறமையை நிலைநாட்ட வேண்டும் என்பதுதான் எனது அவாவாகும்.

## இன்பாசா ஹமீட் (சாதனை மாணவி) உரை

சிறு பராயத்தில் இருதே நான் இயற்கையோடு அதிக ஈடுபாட்டைக் கொண்டிருந்தேன்

அது மட்டுமன்றி புதிதாக ஒரு விடயத்தைக் கண்டறிவதிலும் கண்டுபிடிப்பதிலும் எனக்கு அதிக ஆர்வம் உண்டு. கவிதை எழுதுதல், ஓவியம் வரைதல், சிறு கதை எழுதுதல், சிற்றளவிலான செதுக்கல் வேலைப்பாடுகளைச் செய்தல், கைவினைப் பொருட்களைச் செய்தல், வாசித்தல் என்பவை எனக்கு பிடித்த பொழுது போக்குகளைக் கொண்டுள்ளேன்.

எனது வெற்றிக்கு எனது அயராத உழைப்பும் விடா முயற்சியையும் மட்டுமன்றி எனது ஒவ்வொரு முயற்சியிலும் எனது பெற்றோரும் (MIM. அப்துல் ஹமீட், SL. சபீனா ஹமீட்) பாரிய உறுதுணையாகவும், உதவியாகவும் இருந்ததினாலேயே என்னால் இன்று இந்நிலையை எட்டமுடிந்துள்ளது.

எனது இம்முயற்சிக்கு எனது பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும், ஏனைய உத்தியோகத்தர்களும் உதவியாக இருந்தனர். குறிப்பாக, சுற்றாடல் முன்னோடி பொறுப்பாசிரியையான SHM. உம்மு ஐமன், மாவட்ட சுற்றாடல் ஆணையாளரான MT. நௌபல் அலி, சுற்றாடல் உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபரான SMM. ஜாபீர் ஆகியோர் எனக்கு சிறந்த வழிகாட்டலையும், ஆலோசனைகளையும் வழங்கி உதவினார்கள்.

நான் பெற்றுக்கொண்ட அறிவையும், அனுபவத்தையும், எனது கண்டுபிடிப்புகளையும் இச்சமூக வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதே எனது ஆசையாகும்.

## இன்பாசாவின் பெற்றோர்.

எமது மகள் படைத்துள்ள இச்சிறிய அளவிலான சாதனை வளர வேண்டும். நாட்டிற்கும் மக்களுக்கும் அது சென்றடைய வேண்டும் என்பதே எமது அவா. அதாவது, நாம் செய்கின்ற எந்த செயற்பாடாக இருந்தாலும் அது மனித குலத்திற்குப் பிரயோசனம் அளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

அத்தோடு இச்சாதனைகளைப் புரிவதற்கு களம் அமைத்துக்கொடுத்த நிந்தவூர் அல் - அஷ்றக் தேசிய பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்திற்கும் பெற்றோராகிய நாங்கள் என்றென்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இம் மாணவியின் சாதனைகள் இன்னும் தொடரவும் பாடசாலை சமூகத்துக்கும் ஒளிஅரசி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

✍ நேர்காணல் - கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்




# அரை நூற்றாண்டாக முத்தமிழில் ஜொலிக்கும் கலைப் பொக்கிஷம்




**இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் முத்திரை பதித்தவர். வானொலி, தொலைக்காட்சி நாடகங்களில் குணச்சித்திர நடிகையாக தனக்கென தனி இடம் பிடித்தவர், தமிழ், சிங்கள திரைப்படங்களில் பின்னணி குரல் கொடுத்தவர். இலங்கையில் விரல் விட்டு எண்ணக் கூடிய நகைச்சுவை நடிகைகளில் ஒருவர். வடபகுதியில் யுத்தம் உச்சகட்டத்தை அடைந்த காலப்பகுதியில் கூட எவ்வித அச்சமுமின்றி சுமார் 12 வருட காலமாக யாழ் வானொலி சேவையில் கடமை புரிந்த அஞ்சா நெஞ்சம் கொண்ட ஒருவர். இவ்வாறு சுமார் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக அறிவிப்பாளர், நடிகை, பாடகி என கலைத்துறையில் பயணிக்கும் பல்துறை ஆளுமையுடன் ஜொலிக்கும் குணச்சித்திர நடிகையாகவும் வானொலிக் கலைஞராகவும் திகழும் திருமதி ஜெய் ரஹீம் சஹீத் தான் எமது ஒளி அரசி சஞ்சிகையின் நட்சத்திர இல்லத்தரசியாக ஜொலிக்கிறார்.**

கேள்வி :- எமது ஒளி அரசி வாசகர்களுக்காக உங்களைப்பற்றி சற்று கூறுங்களேன்?

பதில்:- சிங்கப்பூரைச் சேர்ந்த மலாய் இனத்தவரான துவான் சமியோன் துன்கு ஜம்மாத்- நோனா பல்கீஸ் தம்பதிகளின் இரண்டாவது மகளாக கொழும்பு முகத்துவாரத்தில் பிறந்த நான், தற்சமயம் இரத்மலானையை வசிப்பிடமாகக் கொண்டுள்ளேன். எனது கணவர் பபா பஹீர் சஹீத். இவர் ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஆவார். எமக்கு மூன்று மகன்மார். மூவருமே திருமணம் செய்து விட்டனர்.

கேள்வி:- உங்களின் கலையுலக பிரவேசம் எவ்வாறு நிகழ்ந்தது?

பதில்:- பம்பலப்பிட்டிய சென் மேரீஸ் கல்லூரியின் மாணவியான நான் கல்வி கற்கும் காலத்திலேயே படிப்பிலும் நடிப்பிலும் இசையிலும் அதிக ஈடுபாடு கொண்டேன். இந்த ஆர்வத்தின் பயனாக 1958ஆம் ஆண்டு இலங்கை வானொலியின்வளரும் பயிர் என்ற நிகழ்ச்சியில் முதன் முதலாக பங்குபற்றினேன். அன்று முதல்தான் எனது வானொலிப் பிரவேசமும் ஆரம்பமானது. 1965ஆம் ஆண்டு வானொலி தமிழ், முஸ்லிம் கலைஞர் தெரிவில் கலந்து கொண்டு சித்திபெற்றேன். அதனையடுத்து இலங்கை வானொலி தமிழ், முஸ்லிம் சேவை நாடகங்களில் குரல்கொடுத்தேன். மாதர் மஜ்லிஸ் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு பிரதியாக்கம் எழுதி குரல் கொடுத்துள்ளேன். அவ்வாறே வானொலி குரல் தேர்விலும் சித்தியடைந்த நான், இஸ்லாமிய கீதம் மற்றும் மெல்லிசை பாடல்களையும் பாடியுள்ளேன்.



கேள்வி :- உங்களுக்கு புகழைத் தேடித்தந்த வானொலி நாடகம் எது?

பதில்:- மரிக்கார் ராமதாஸின் கோமாளிகள், கே.ஏ.ஜவாஹரின் அபுநானா ஆகிய நாடகங்களில் நான் நடித்த ஆயிசா தாத்தா, ஆரிபா தாத்தா பாத்திரங்கள் நேயர்கள் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைத் தந்தன. அபுநானா ஹுசைன் பாருக்கின் தயாரிப்பில் சுயாதீன தொலைக்காட்சியில் தொடராக ஒளிபரப்பப்பட்டது. அவ்வாறே மேடை நாடகங்களிலும் நான் நடித்துள்ளேன். இந்த நாடகம் நாட்டின் பல பாகங்களிலும் மேடையேறின. என்னை மேடை நாடகங்களில் அறிமுகமாக்கியவர் டீ.பீ.ரொபர்ட் ஆவார். இலங்கையில் தயாரிக்கப்பட்ட யார் அவள், நாடு போற்ற வாழ்க உன்னைச் சுற்றி ஒரு உலகம், நெஞ்சுக்கு நீதி, அவள் ஒரு ஜீவ நதி, தெய்வம் தந்த வீடு சர்மிளாவின் இதய ராகம் ஆகிய திரைப்படங்களுக்கு பின்னணி குரல் கொடுத்துள்ளேன். தொலைக்காட்சியில் தமிழ் நாடகங்கள் மட்டுமன்றி சிங்கள நாடகங்களிலும் நடித்துள்ளேன். சிஹின வசந்தய மேபாரென் என்ன திலிய உட்பட மேலும் பல உள.

கேள்வி :-தற்சமயம் நீங்கள் நடிக்கும் தொலைக்காட்சி நாடகங்கள் பற்றி?

பதில்:- சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நீ நான் பேய் ஏற்கனவே ஒளிபரப்பாகிய பவித்ரா ஆகிய நாடகங்களிலும் எனது பங்களிப்புண்டு

கேள்வி:-இலங்கையில்இனக்கலவரம் உச்சக்கட்டத்தில் இருந்த ஒரு காலத்தில் திரும்பும் திசையெல்லாம் கண்ணிவெடிகளும் குண்டுத் தாக்குதல்களும் இடம் பெற்ற ஒரு யுகத்தில் யாழ்ப்பாணத்தில் கடமை புரிந்த அந்த அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொள்ளலாமே?

பதில்:- 1998ஆம் ஆண்டு எவருமே செல்ல மறுத்த பலாலி யாழ் எப்.எம் பிராந்திய வானொலிச் சேவையில் அறி

விப்பாளராக கடமை புரியுமாறு நிர்வாகம் என்னை பணித்தபோது அதற்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்காது என் உயிரையும் பணயம் வைத்தே நான் அன்று யாழ் சென்றேன். மீண்டும் திரும்பி வருவேனா? என்ற சந்தேகம் எல்லோரையும் ஆட்கொண்டது.

எனினும், வானொலியுடன் எனக்கிருந்து பிணைப்பு என்னை அங்கும் செல்வதற்கு வழிகோலியது. துணிவே துணையாக கொண்டு நான் யாழ் சென்றேன்.

அங்கே எனக்கேற்பட்ட பயங்கர அனுபவங்கள் ஏராளம். ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். அங்கு தினசரி நிகழ்ந்த பயங்கர குண்டுச் சத்தங்களினால் எனது செவிப்பறை பாதிக்கப்பட்டு காதிலிருந்து இரத்தம் வழியத் தொடங்கியது. இதற்காக பலாலி ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பெற்றதை என்னால் மறக்கவே முடியாது. இவ்வாறு நெருக்கடியான காலகட்டத்திலும் இலங்கை வானொலிக்காக நான் வழங்கிய சேவையை மதித்து இன்று என்னை தமிழ் சேவையில் Presentation Officer ஆக நியமித்திருப்பது குறித்து நான் அகமகிழ்கிறேன். அந்த ஏக இறைவனையும் புகழ்கிறேன்.

**கேள்வி : - சுமார் அரை நூற்றாண்டு காலமாக வானொலியோடும் கலை உலகத்தோடும் உறவாடும் உங்களுக்கு கிடைத்த கௌரவங்கள் பற்றி அறிய விரும்புகிறோம்..?**

பதில்:- இந்து கலாசார அமைச்சராக இருந்த செல்லையா இராசதுரை எனக்கு பொற்கிழி வழங்கினார். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கல்முனைக் கிளை விருது. முஸ்லிம் கலாசார அமைச்சராக இருந்த அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வரினால் கலைத் தாரகை, அனைத்துலக இன நல்லுறவு ஒன்றியத்தினால் கலா ராணி, ஸ்ரீ லங்கா கலைஞர் முன்னணியினால் முத்தமிழ் தாரகை, கிருஷ்ணா கலாலயத்தினால் நவரசத்திலகம், நகைச்சுவை நாயகி ஆகிய பட்டங்களுடன் கலாசார அமைச்சினால் கலாபூசண விருதும் எனக்கு கிடைத்துள்ளன.

**கேள்வி:- இந்த விருதுகள் பட்டங்கள் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்:- உண்மையிலேயே இந்த விருதுகள் பாராட்டுக்கள்தான் ஒரு கலைஞனை ஊக்குவிக்கும் ஊட்டச் சத்துக்களாகும். எமது திறமைகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள இவை ஒரு உந்து சக்தியாக உள்ளன. ஆனால், எடுத்ததற்கெல்லாம் பொன்னாடைகளும் பட்டங்களும் வழங்கப்படுவது தவிர்க்கப்பட்டு ஒவ்வொரு துறையிலும் பண்பட்டவர்களுக்கு மாத்திரம் இந்த கௌரவம் வழங்கப்பட்டால் சிறப்பாக இருக்கும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோளாகும். அத்தோடு வெறுமனே பொன்னாடைகளை மட்டும் போர்த்தாது கலைஞர்களுக்கு ஏதேனும் வாழ்வாதார உதவிகளைச் செய்தால் நல்லது.

**கேள்வி : - இத்துறையில் நீங்கள் சவால்களை எதிர் நோக்கியதுண்டா?**

பதில்:- நான் ஒரு பெண் என்ற வகையில் எதிர் நோக்கிய சவால்கள் எண்ணிலடங்கா. கலாசாரத்துக்கு ஒவ்வாத முறையில் நடிப்பதாக பலர் என்னை குற்றஞ் சாட்டியதுண்டு. ஆனால், நாம் இருப்பது கண்ணாடி மாளிகையில் என்பதும் எனக்கு தெரியும் எனவே, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நாம் நேர்மையாக நடந்துக்கொண்டால் இதில் பயப்படுவதற்கு எதுவுமில்லையே!

**கேள்வி : -உங்கள் கலை இலக்கியத்துறையில் கசப்பான அனுபவங்கள் ஏதுமுண்டா?**

பதில்:- ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முஸ்லிம் இளம் பெண் கலைஞர்களின் வானொலிப் பிரவேசம் மிகவும் குறைந்துக்கொண்டே போகின்றது. ஆனால் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்வதற்கு இருக்கும் தைரியம் ஏன் இதற்கு வருவதில்லை என்பது எனக்கொரு மனக்குறை.

அதனால் இன்று முஸ்லிம் நாடகங்களில் தமிழ்ப்பெண் சகோதரிகள் தான் பின்னணி குரல் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது ஒரு கசப்பான கவலைக்குரிய விடயமாகும். அத்தோடு இளம் கலைஞர் தேர்வும் பல ஆண்டுகளாக இடம்பெறவில்லை என்பதும் பெரும் குறைபாடாகும். எனவே ஏனைய துறைகளில் எல்லாம் சிறந்து விளங்குவதுபோல திறமையான குரல் வளம் மிக்க இளம் முஸ்லிம் பெண் கலைஞர்கள் இத்துறையிலும் பிரவேசிக்க வேண்டும் என்பதே எனது பேரவா.

**கேள்வி:- ஒளியரசி மூலம் நிறைவாக கூற விரும்புவதென்ன?**

பதில்:- கோழி ஒரு முட்டையை இட்டுவிட்டு ஊரெல்லாம் கேட்க கொக்கரிப்பது போலன்றி ஆயிரம் முட்டைகளை இட்ட போதும் அமைதி காக்கும் ஆமைகளைப்போல இன்றைய இளைய கலைஞர்கள் தலைக்கனமின்றி நடந்துகொள்ள வேண்டும். மூத்த கலைஞர்களை இளம் கலைஞர்கள் மதிக்கும்போது தான் உங்களுக்கும் மதிப்பும் கௌரவங்களும் தானாகவே வந்துசேரும்.

**(ஒளிஅரசியும் இவரது கலைப்பணிக்கு பாராட்டுக்களையும் ஆசிர்வாதங்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.)**

## போட்டிகளுக்கான கூப்பன்

முழுப்பெயர் : ..............................................

..............................................

முகவரி : ..............................................

..............................................

..............................................

தொலைபேசி இல.: ..............................................

ஒப்பம் : ..............................................

**போட்டியின் பெயர் :** ..............................................

..............................................



# இருட்டில் வைத்த குறி

16

திகில் மன்னன் ராஜேஷ்குமார் எழுதிய

மார்தாண்டத்தின் உடலோடு யோகேஷும் புவனேஷும் டைம்ஸ் எக்ஸ்பிரஸிற்கு வந்து சேர்ந்தனர்.

மணி ஒன்பது பத்து ஆன போது சிவப்புநிற டெலிபோன் கூப்பிட்டது. டைம்ஸ் எக்ஸ்பிரஸ் இளைஞன் ரிஸீவரை எடுத்துப் பேசிவிட்டு யோகேஷையும் புவனேஷையும் பார்த்தான்.

அதிகாரி கூப்பிடுகிறார். வாருங்கள் போகலாம். இருவரின் இதயங்களும் தாளம் தப்பித்துடித் தன.

லிப்டில் உயர்ந்து அந்த அதி காரிக்கு முன்னால் போய் நின் றார்கள்.

அவர் புன்னகையோடு பார்த் தார். உங்கள் தந்தையின் மரணம் இயற்கையானதுதான் என்று ரிப் போர்ட்டை பார்த்து உறுதிசெய்து உடலை விமானத்தில் ஏற்றுவ தற்கு அனுமதிக்கிறேன்.

புவனேஷும் யோகேஷும் மலர்ந்தார்கள்.

தங்யூ ஸார்

விமானத்தில் ஏறி இருவரும் உட்கார்ந்தார்கள்.

கடவுள் நம்ம பக்கம் என்று சொல்லி யோகேஷ் சிரித்தான்.

விமானம் ரீங்கரித்தது. சீட் பெல்ட்டுக்களை அணிந்து கொள்ளச் சொல்லியும் சிகரெட் பிடிக்க வேண்டாமென்று கேட் டுக்கொண்டும் அறிவிப்புக்கள் ஒளிர்ந்தன.

விமானம் நகர்ந்தது.

கொஞ்சம் கொஞ்சமாய் வேகம் பிடித்து ரன் வேயைத் தேய்த்து இருட்டான ஆகாயத்தில் எழும்பியது.

யோகேஷும் புவனேஷும் பரஸ் பரம் கைகுலுக்கிக் கொண்டார் கள். கண்களில் சந்தோஷ நீர் மின்ன ஹம்மாடி என்று சொல்லி சீட்களுக்குள் சாய்ந்து கொண்டார் கள். நெஞ்சை நீவிக்கொண்டார் கள்.

அந்த சந்தோஷம் இரண்டே நிமிடந்தான்.

விமானத்தின் உள்ளேஅந்த அறிவிப்பு ஒளிர்ந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் விமானம் மறுபடியும் விமான நிலையத்திற்கே திரும்புகிறது.

யோகேஷும் புவனேஷும் முகம் மாறினார்கள். அவர்கள் திகைத் துக்கொண்டிருக்கும் போதே விமானம் கீழே தாழப்பறந்து பழைய இடத்தை வந்து சேர்ந்தது.

அடுத்த சில விநாடிகளில்

கருநீல யூனிபோமோடு சிங்கப்பூர் போலீஸ் துணைகமிஷனர் இரண்டு சார்ஜெண்ட்களோடு உள்ளே வந்தார். யோகேஷையும் புவனேஷையும் நெருங்கினார்.

ஸாரி ஜெண்டில்மேன் எழுந்து வெளியே வருகிறீர்களா?

ஏன்?

வைரத்திருட்டு சம்பந்தமாய் உங்களை விசாரிக்க வேண்டியிருக் கிறது.

யோகேஷ் போலித்திகைப்போடு கத்தினான். வைரத்திருட்டா? என்ன உளறுகிறீர்கள்?

துணைக்கமிஷனர் புன்னகைத்தார். பிரணவ் எல்லா உண் மைகளையும் சொல்லிவிட்டபிறகு எதற்காக நீங்கள் நடிக்க வேண்டும்?

இருவரும் சட்டென்று நிமிர்ந்தார்கள்.

பொலீஸ் அதிகாரி தொடர்ந்தார். பிரணவ்வைப் பிடிக்காத யாரோ ஒருவன் அவரைச்சுட்டுவிட்டு ஓடிவிட்டான். அவரை ஹொஸ்பி டலில் கொண்டு போய்ச் சேர்த்தோம். அவரைக்காப்பாற்றிவிட லாம் என்று டாக்டர்கள் சொன்னார்கள். நாங்கள் எதேச்சையாக அவர் பொக்கற்றை சோதனையிட்டபோது ஒரு வைரக்கல் கிடைத் தது. அதுவும் அந்த வைரக்கல் திருட்டுப்போன வைரக்கற்களைச் சேர்ந்தது என்று முடிவானதும் அவர் இறந்துவிட்டதாக புரளியைக் கிளப்பி நாங்கள் சந்தேகப்பட்ட ஒவ்வொருவரையும் விசாரிக்க

ஆரம்பித்தோம். ஆனால் பயனில்லை. துப்பாக்கியால் சுடப்பட்ட பிரணவ்விற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்புதான் நினைவு திரும்பியது. வைரத்திருட்டை நடத்தியது நீங்கள் தானே என்று மிரட்டினோம். அவர் பயந்துபோய் உங்களைப்பற்றிய தகவல்களைச் சொன்னார். உங்கள் தந்தையின் வாயில் வைத்திருந்த வைரங்களையும் பற்றி சொன்னார். உடனடியாக விமான நிலையத்திற்கு தகவல் கொடுத்து ஏறக்குறையத் தப்பி விட்ட நிலைமையில் இருந்த உங்களை மறைத்து வானத்திலிருந்து கீழே கொண்டு வந்தோம்.

யோகேஷீம் புவனேஷீம் அயர்ந்து போய் பார்க்க அவர் தொடர்ந்தார். உங்களுக்கு இன்னொரு கசப்பான செய்தி சொல்லட்டுமா? செண்டோஸா மலைப்பாதையில் விபத்து நடந்த போது உங்களுக்கு சிக்கிய வைரங்கள் போலியானவை. கொள்ளையடிக்கப்பட்ட உண்மையான வைரங்கள் அந்தப்பெண்ணிடமிருந்து உடனே வேறு யாருக்கோ கைமாறிவிட்டது. போலீஸ் கையில் அவள் சிக்கிக் கொண்டாலும் போலி வைரங்கள் தானே அவர்களுக்கு கிடைக்கும். என்பது அவர்களுடைய திட்டம். ஆனால் அந்தக்கார் எதிர்பாரதவிதமாக விபத்துக்குள்ளாகவே அந்தப்போலி வைரங்களை நீங்கள் எடுத்துக்கொண்டு விட்டீர்கள்.

பிரணவிடமிருந்து அந்த ஒற்றை வைரக் கல்லை பரிசோதித்து பார்த்தபோது தான் இந்த உண்மை தெரிந்தது. உண்மையான வைரத்திருடர்களை பிடிக்கும்வரை நீங்கள் சிங்கப்பூரில் இருந்தாக வேண்டும். தயவுசெய்து வெளியே வருகிறீர்களா?

தளர்ந்துபோய் யோகேஷீம் புவுனேஷீம் எழுந்த அதே விநாடி கண்டெய்னரிலிருந்து மார்த்தாண்டமும் ஸ்ரெச்சர் மூலமாக வெளியேறிக்கொண்டிருந்தார். தொலைவில் சாங்கி எயார் போர்ட் பொலீஸ் அதிகாரிகளோடு காத்திருந்தது.

**(முற்றும்)**

# பொது அறிவுப் போட்டித் தொடர் - 12

01. ஹோலி பண்டிகையில் பயன்படுத்தும் இந்த வண்ணப் பொடி எந்த மரத்திலிருந்து எடுக்கப்படுகிறது?
02. முதன் முதலாக தொழில்புரட்சி நடைபெற்ற நாடு எது?
03. ஒரு மணி நேரத்தில் 74 கி.மீ வேகத்தில் ஓடும் பறவை எது?
04. நயாகரா நீர்வீழ்ச்சியை கண்டுபிடித்தவர் யார்?
05. ஆசியாவில் முதன் முதலாக தொழில்மயமான நாடு எது?
06. சூரிய குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம் எது?
07. சுறா மீனின் வாழ்நாள் காலம் எவ்வளவு?
08. பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எது?
09. உலகில் அதிக அளவில் கப்பல் போக்குவரத்து நடைபெறும் இடம் எது?
10. திரவத்தங்கம் என்றழைக்கப்படுவது எது?

இங்கு தரப்படுகின்ற பொது அறிவு சம்பந்தமான கேள்விகளுக்கு தபால் அட்டையில் சரியாக விடை எழுதி (20.01.2016)இக்கு முன்னர் 4ஆம் பக்க முகவரிக்கு அனுப்பும் வாசகர்களில் முதல் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு முறையே ரூபா 500, ரூபா 350 மற்றும் ரூபா 200 பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

**மேற்படி வினாக்களை தயாரித்து அனுப்பியவர்**
**அபர்ணா வெற்றிவேலு**

அனுசரணை
**SAIFI TRADING COMPANY**
**IMPORTERS OF PAPER & BOARD**
**No. 96, New Moor Street, Colombo - 12.**


**பொது அறிவுத் தொடர் - 11 இல் வெற்றியீட்டியவர்களும் அவற்றிற்கான விடைகளும்**

01 ஆம் பரிசு : பா. கிசோர் , கரடிப்போக்கு, கிளிநொச்சி.
02 ஆம் பரிசு : வெ. தவமணிதேவி, பருத்தித்துறை.
03 ஆம் பரிசு : மாலினி குமார், நாச்சிமார் கோயிலடி.யாழ்ப்பாணம்.

1.சீனாவின் பீஜிங் நகரில் 2. ஆபிரிக்க பெண்ணான வங்காரி மாத்தாய் 3. இயுஜின் போல்லி 4. ஈராக் 5. கொங்கோ 6. விஸ்டன் நூல் 7. நிக்வலண்டா 8. 30ஆவது 9. கியூரியோ சிட்டி 10.ராட்லன்

# குழந்தைகளுக்கான இணைய உலாவி

வயது வந்தோருக்கான எத்தனையோ மென்பொருட்கள் (software applications)




இணைய உலகில் தினமும் வந்துகொண்டே இருக்கின்றன. இனியும் வரும்.

சிறார்களுக்கான - சுட்டிக்குழந்தைகளுக்கான (kids) மென்பொருட்களும் இணையத்தில் நாள்தோறும் வெளியிடப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

இதற்கு ஒரு நல்ல உதாரணம் : குழந்தைகளுக்கான இணைய உலவி (browser) [ KIDO'Z Browser ]

குழந்தைகள் - சுட்டிச்சிறார்கள் இணையத்தில் உலவும்பொழுது அவர்களுக்கே உரிய பாதுகாக்கப்பட்ட (Secured) அணுகுமுறையுடன் உலாவவே அனுமதிக்கப்படவேண்டும். இந்த KIDO'Z உலவியானது பாதுகாப்பு உணர்வைப் பலப்படுத்துகிறது.

சிறந்த தளங்கள், காணொளிகள், விளையாட்டுகள் போன்றவற்றுடன் நேரடியான இணைப்பை இந்த உலவி வழங்குகிறது.

வயதுவந்தோர் மட்டும் காணத்தக்க தளங்களை இந்த உலவி வடிகட்டிவிடுகிறது. (Filter) அனுமதி அளிக்கப்படாத தளங்களைக் குழந்தைகள் காண இயலாது.

விளையாட்டுகளும், காணொளிகளும் குழந்தைகளுக்கு ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே இந்த உலவி பார்வையிட அனுமதிக்கும். இதை இயக்குவதற்கு அடோபியின் புதிய தொழில்நுட்பம் Adobe Air தேவைப்படும்.

உலவியைத் தரவிறக்கம் (download) செய்ய உதவும் சுட்டி (link) கீழே :


http://kidoz.net/beta/index.html

# கணனி வேகத்தை அதிகரிப்பது எப்படி?

அதாவது நீண்ட நேரம் கணனியை பயன்படுத்தினாலோ அல்லது Games பெரிய அளவிலான Software களை பாவிக்கும் போதும் கணனியின் வேகம் ஆனது குறைவடைந்து விடும்.

அந்த வேளையில் RAM மெமரியை clean செய்து எவ்வாறு கணனியின் வேகத்தை சற்று அதிகரிப்பது என்று கவனிப்போம்

01. ஒரு நோட்பாட்டை (Notepad) open செய்க.
02. அதில் கீழ் வருமாறு Type செய்க.
    FreeMem=Space(128000000)
03. பின் File இல் சென்று Save As இல் RAM-cleaner.vbs என்று கொடுத்து Save செய்க.
04. நீங்கள் Save செய்த RAMcleaner .vbs ஐ Open செய்க.
05. அவ்வளவுதான் RAM மெமரியை clean செய்துவிட்டோம். கணனியின் வேகம் அதிகரிக்கும்.





வடபகுதியிலிருந்து நடைபாதையாக அடர்ந்த அக்காட்டு வழியால் முல்லைத்தீவு சென்ற மக்கள் ஆனையிறவுக் கடனீரேரி கடந்த அப்பகுதியில் இருந்த பெரிய ஆலமரத்தின் கீழ் இளைப்பாறி சமைத்துச் சாப்பிட்டு விட்டு அதன் பின்னரே மீண்டும் பிரயாணத்தைத் தொடர்ந்தனர். சாப்பிடுவதற்காக பனை ஓலைகளில் தட்டுவம் கோலிப் பயன்படுத்திவிட்டு அத்தட்டுக்களை அங்கிருந்த பெரும் ஆலமரங்களில்

# காத்தான் கூத்தின் தோற்றுவாய் தட்டுவங் கொட்டி

கட்டித்தூக்கிவிட்டுச் சென்றனர். இதனைக் கண்ட வெள்ளையர் அவ்விடத்தை தட்டுவம் கட்டி என அழைத்தனர். காலப்போக்கில் அப்பெயர் மருவி தட்டுவங்கொட்டி என உருமாற்றம் அடைந்தது.

இக்கிராமமானது தனித்துவமான பல பண்புகளைக்கொண்டு விளங்குகின்றது. அதாவது, இவ் ஊர் மக்கள் தமது ஊருக்குள்ளேயே உறவுகளில்தான் திருமணம் செய்துகொள்வர். தமது கிராமத்தின் எந்தப் பிரச்சினைகளையும் ஊர்த்தலைவர் மூலம் தாமே தீர்த்துக்கொள்வார்களே தவிர வேறு யாரும் தலையிடுவதற்கு அனுமதிப்பதில்லை. இங்கு மது, போதை தரும் பொருட்கள் என்பவற்றின் விற்பனை, முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது. வெளித்தொடர்புகள் அதிகம் இல்லாததாலும் பெரியோர்களின் கட்டுக்கோப்பில் நகர்வதாலும் இக்கிராமம் ஒருவித தனித்துவத்துடன் விளங்குகின்றது. இவர்கள் கலைத்துறையில் அதீத ஆர்வம்கொண்டவர்களாக விளங்கிவந்தனர். கூத்துக்கள் தோற்றம் பெற்ற இடமாகவும் இன்றைய காலம் வரை அண்ணாவி என அழைக்கப்படுகின்ற கூத்துக் கற்பிப்பவர்கள் அதிகம் உள்ள இடமாகவும் தட்டுவன் கொட்டியே விளங்குகின்றது.



இவர்கள் காத்தான் கூத்து, அல்லி அர்ஜுனா, பவளக்கொடி போன்ற நாடகங்களை திருவிழாக்காலங்களில் நடாத்துவதில் அனுபவம் வாய்ந்தவர்கள். போக்குவரத்து சீரற்ற பண்டைய காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து வரும் உறவினர்கள் கோயில் பூசை முடிந்து செல்லமுடியாத வேளைகளில் கூத்து கட்டுதல் என்னும் அடிப்படையில் தமிழரின் பூர்வீக வரலாறுகள் நாடகங்களாக கூத்துக்களாக உருவாக்கம் பெற்றன. காத்தான் கூத்து என்பதன் உருவாக்கம் இவர்களுடையதாகவே உள்ளது.

இன்றுவரை தமது தனித்துவங்கள் எதனையும் கைவிடாத இவர்கள் இடப்பெயர்வின் அவலங்களுக்குப்பின் விசுவமடு கண்ணகிநகர் என்னும் இடத்தினையும் தமக்கான ஒரு குடியிருப்பாக மாற்றியுள்ளனர். தற்போது தமது ஊரின் கலாமன்றத்தின் மூலம் இளையோருக்கு இக்கலைகளைக் கற்பித்து நெறிப்படுத்தி வழங்கி வருகின்றனர்.

கூத்துக்கட்டும் துறையில் விருதுகள் பெற்ற அண்ணாவி ஆறுமுகம் பாலசுப்பிரமணியம் அவர்களிடம் இக்கூத்துப் பற்றி வினவியபோது:-

ஆம் ஆரம்ப காலத்தில் பொழுதுபோக்காக ஆரம்பிக்கப்பட்டதுதான் இக்கூத்து. ஆனால், காலப்போக்கில் இக்கலை எமது இரத்தத்தோடு எமது உணர்வோடு கலந்த ஒன்றாகமாறிவிட்டது.

இக்கூத்துக்கலை அழிந்துவிடக்கூடாது என்பதற்காக எமது இளையோர்களுக்கு இதனைக் கற்பித்து வளர்த்துள்ளோம். ஆரம்பத்தில் சாதாரண ஒரு கலைஞனாக இருந்த நான் அதன் மீது இருந்த மட்டற்ற ஈர்ப்பினாலேயே அண்ணாவி என்ற தர நிலைக்கு உயர்ந்துள்ளேன். வேவ்வேறு இடங்களில் அமைந்துள்ள கோயில் நிர்வாகத்தினர் கேட்பதற்கிணங்க இக்கூத்தினை மேடையேற்றுவதுண்டு. பல ஊர்களிலும் இதனைக் கற்பித்தும் வருகின்றேன்.

# வாசிப்பு விழிப்புணர்வு - முன்மாதிரியாக திகழும் நெல்லியடி பொது நூலகம்

வடமாராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை கரவெட்டி.


புதிய நூல்களின் கண்காட்சி செயலாளர் திரு. க.கனகதுரை நூற்கண்காட்சியை ஆரம்பித்துவைக்கிறார்.



யா/நெல்லியடி மிஷன் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிய சிறுவருக்கான வீடியோ படக்காட்சி (27.03.2015).


தேசிய வாசிப்புமாதத்தை முன்னிட்டு நெல்லியடி பொது நூலகத்தில் சிரமதானம் (ஐப்பசி மாதம் 10ஆவது நிகழ்வு)


27.05.2015இல் மரம் நடுகை. உல்லியனெல்லை அம்மன் ஆலயத்தில் மரம் நடுகை குழுவினர்.


சிறுவர்களுக்கான கதைகூறும் நேரம் 31.08.2015 வதிரி முன்பள்ளி மாணவர் கள் பங்குபற்றினார்.


25.06.2015இல் மரம் நடுகை பெரிய தம்பிரான் ஆலயத்தில் மரம் நடுகைக் குழுவினர் (ஓய்வு பெற்ற நூலகர் மரம் நடுகிறார்).


சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒரு கருத்தரங்கு சிறுவருக்கான பொதுச்சுகாதாரப் பழக்கவழக்கம். (01.10.2015)


நெல்லியடி பொது நூலகத்தில் இடம்பெற்ற ஆடிக்கூழ் காய்ச்சி வாசகர் களுக்கு வழங்கிய நிகழ்வு (17.06.2015)


ஏப்ரல் மாத உலகப்புத்தக தினத்தை முன்னிட்டு நெல்லியடி பொது நூலகத்தால் நடத்தப்பட்ட நூற்கண்காட்சி.


28.09.2015இல் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஒரு வாசிப்புப்போட் டியை நெல்லி யடி மெதடிஸ்த மிஷன் பாட சாலை மாணவர் கள் பங்குபற்றி னர்.


ஐப்பசி மாதம் 08.10.2015இல் நூலகத்தை பூஞ்சோ லையாக்குதல் எனும் திட்டத்தின்கீழ் நூலகத்தில் மரம் நடுகை.

30.09.2015 உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஓர் ஓவியப் போட்டி வதிரி முன்பள்ளி மாணவர்கள் பங்குபற்றினர்.



வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இக்காலகட்டத்தில் வாசிப்புத் தொடர்பான விழிப்புணர்வுக்காக பல நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தி நடாத்திய இவ் நூலக பொறுப்பாளர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ஒளிஅரசியின் பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

மகிந்தன்



# வெற்றிகரமான வாழ்விற்கு!

உங்களுக்கு ஒரு பரீட்சை!
(அடுத்த 24 மணி நேரத்திற்கு)
எதற்கும் கோபப்படாமல் செயல்படுவது
(என்னதான் எரிச்சல் வந்தாலும்)
எல்லோரிடமும் சிரித்துப்பேசுவது
(எதிரியாக இருந்தாலும் ஹலோ சொல்வது)

1. இயன்றவரை மற்றவர்களுக்கு உதவுதல்.
2. வேலைகளை சலிப்பில்லாமல் செய்தல்.
3. உடன்பணிபுரிவோரிடம் அன்பாக பேசுதல்.
4. முதலில் குடும்பத்தில் அனைவரிடமும் இணக்கமாக பேசுதல்.
5. புதியதாக சந்திப்பவரிடம் ஓரிரு நிமிடங்கள் இனிமையாகப் பேசுதல்.
6. வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் கலகலப்பாக சிரித்தல்.
7. அலைச்சலான செயல்கள் எதுவானாலும் விட்டுவிடுதல்.
8. மனதிற்குள் எந்த பாரத்தையும் வைக்காதிருத்தல்.
9. உங்களுக்கு பிரச்சினை தரும் எந்தச் செயல்களையும் தவிர்த்து அதிலிருந்து மீண்டுவிடல்.
10. சங்கடமான சம்பவங்கள் உங்களுக்கு நடந்தாலும் என்னதான் ஆகும் என்று எதிர்நீச்சல் போடுவது.
11. இனிமையும் மென்மையும் உங்களில் கலந்திருத்தல்.
12. நியாயத்தின் வழி செயற்பட்டு நேர்மையுடன் உழைத்தல்.

இவற்றை தொடர்ந்து பயிற்சி செய்யுங்கள். உலகில் உன்னதமானவர்களாக நீங்கள் மாற முடியும்.

### உங்களின் வெற்றி உங்கள் கையில்

உங்களால் முடியும் என நீங்கள் நினைத்தால் முடியுமென்று முழுமையாக நம்பினால் நிச்சயமாக உங்களால் முடியும்.

நேற்றைய நிலையைவிட இன்று ஒரு படி மேலே உயர்வது தான் வெற்றி விரும்புவதை அடைவதே வெற்றி. ஆனால், யாருடைய நியாயமான உரிமைகளிலும் தலையிடக்கூடாது.

உண்மை, அமைதி, கட்டுப்பாடு, தைரியம், உறுதி, உற்சாகம், பேராசையின்மை, சமநிலைமனம் போன்ற குணங்கள் உடையவர்தான் நிலையான வெற்றியை அடையமுடியும்.

ஒவ்வொருவருக்கும் தனித்திறமை உள்ளது. அதனைக்கண்டறிந்து வெளிப்படுத்துவதில் தான் வெற்றி அமையும்.

நேர்மையுடன் பெறப்பட்ட வெற்றியே நிலையானது. பிறருக்கு பயன்படுகின்ற வகையில் அடைகின்ற தனிமனித முன்னேற்றமே உன்னத வெற்றியாகும்.

பெரிய சாதனைகள் படைத்தால்தான் வெற்றி என எண்ணவேண்டியதில்லை. சிறுசிறு செயல்களே சாதனையாகின்றன.

குறுக்கு வழியில் வெற்றி பெறுவதைவிட கௌரவத்துடன் தோல்வியை ஏற்றுக்கொள்வது சிறப்பு. குறுக்கு வழியில் பெறுகின்ற வெற்றி மனத்திருப்தியை தராது.

மற்றவரின் தோல்வி நம் வெற்றியாகிவிடாது. மற்றவர்களைவிட திறமையாக செயல்படுவதே உண்மையான வெற்றி.

சில சமயங்களின் வெற்றிக்கான அங்கீகாரம் அல்லது பரிசு கிடைக்காமல் போகலாம். ஆனால் வெற்றிக்கான தகுதியை பெற்று இருப்பதே சிறப்பு.

நாம் எந்த ஒரு காரியத்தை செய்யும்போதும் பலருடைய ஒத்துழைப்பு இல்லாமல் செய்ய முடியாது. ஆகவே, அந்த வெற்றிக்கு பலரும் காரணமாகவே இருந்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

எண்ணற்ற தோல்விகளைச் சந்தித்தவர்கள்தான் இன்றைய வெற்றியாளர்கள். பொது அறிவு, செய்கின்ற துறையில் அறிவு, அனுபவத்திலிருந்து முடிவெடுத்தல், எதிர்காலத்தை அனுமானித்தல் போன்ற திறன்கள் வெற்றிக்கு வழிகாட்டும். தன்னம்பிக்கையே வெற்றியின் அடிக்கல். முடியும் என்று நம்பினால் அதனை அடைவதற்கான வழிகள் பிறக்கும். முடியாது என்று நினைத்தால் அதற்கான காரணங்கள் தெரியும். தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்கள் வெற்றியடைவது சிரமம். திட்டமிட்டு செயற்பட்டால்தான் வெற்றியை அடையமுடியும்.

தைப்பொங்கல் சிறப்பு நேர்காணல் ✍ புத்திரசிகாமணி

படப்பிடிப்பு - ஜெயம் ஸ்டூடியோ




# பிரமுகராக வந்தவரே வாழ்க்கைத் துணையானார்

என் கணவர் தொடர்பாக எத்தனை கிசுகிசு வந்தாலும் நான் அலட்டிக் கொள்ளப்போவதில்லை. அவர் என் உயிர். ஈருடல் ஓர் உயிராக வாழ்கின் றோம் என்கின்றாள் தொலைக்காட்சி அறி விப்பாளரும், தொகுப்பாளியும், நடிகர் கோணேஸின் மனைவியுமான பிரணீத்தா.

தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு வந்த பிரமுக ரைப் பேட்டி கண்டேன். இன்று அவரே என் வாழ்க்கைத்துணைவ ராக ஒட்டிக் கொண் டார். இது தான் பிராப்தம் என்றும் கூறுகின்றார் அவர். இவர்களுடைய திருமணம் Love + Arrange என்கின்றனர் இந்த நட்சத்திர தம்பதிகள்.

அண்மையில் இந்த நட்சத் திர தம்பதிகளை அவர்கள் வீட் டில் சந்தித்தபோது அவர்கள் மனம் விட்டுப் பேசினர்.

பிரணீத்தா வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் ஓர் இணைப்பு சங்கிலியாக உரு வானவர். தாய் யாழ்ப்பாணம். அப்பா மட்டக்களப்பு. கணவர் திருகோணமலை.

மட்டக்களப்பில் தனது கல் வியை முடித்த பிரணீத்தா பாட சாலை காலத்திலேயே தான் ஒரு அறிவிப்பாளராக வரவேண்டும் என்ற குறிக்கோளுடன் இருந்ததாகக் குறிப் பிடுகின்றார். அவரு டைய பாட சாலை நிகழ்வுகள் ஓர் உந்துசக்தியா கவும் இருந்தனவாம். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரிடம் கேட்ட சில கேள்விகளுக்கு அவர் இப் படிப் பதில் அளிக்கின்றார்.

★ உங்களுடைய ஊடக வாழ்க்கை எப்படி, எப் போது ஆரம்பமானது?

2006ஆம் ஆண்டு வெளியான விளம்பரம் ஒன்றைப் பார்த்து நேத்திரா தொலைக்காட்சி அறி விப்பாளர் பதவிக்கு விண்ணப்பித்தேன். போட்டிப் பரீட்சை, நேர்முகத் தேர்வுகளின் பின் என்னைத் தெரிவுசெய்ததாக அறிவித்தனர். என்னாலேயே நம்பமுடியவில்லை. பெரிய சந்தோஷம். அன்றுமுதல் இன்றுவரை நேத்திராவில் பணியாற்று கின்றேன்.

★ அறிவிப்பாளராக உங்களுடைய ஆரம்பம் எப்படி இருந்தது?

எனக்கு ஆறுமாத காலங்கள் ஒலி, ஒளிபரப்புத் துறை தொடர்பாக தீவிர பயிற்சியளித்தனர். அதன்பின்னரே எனக்கு நிகழ்ச்சிகளில் முகம்காட்டும் வாய்ப்பு வழங்கப்பட் டது.

★ நீங்கள் முதன்முதலாக நேரடியாகக் கலந்துகொண்டு வழங்கிய நிகழ்ச்சி எது?

குறிப்பாக, பிரமுகர்களுடனான நேர்காணல்களை அனுபவமுள்ள வர்கள்தான் செய்வார்கள். ஆனால், அன்று பணிப்பாள ராக இருந்த விஸ்வநாதன் சேர், ''உன்னால் முடியும். தைரியமாகச் செய்'' என்று உற்சாகப்படுத்தி பிரபல கண் டாக்டர் கண்ணுத்துரையை பேட்டி காணும்படி கூறினார். இந்த நேரடி நிகழ்ச்சி நன்றாக அமைந்ததாகப் பலரும் பாராட் டினர்.

★ உங்களுடைய கண்வெட்டைப் பார்த்து அந்த டாக்டர் உங்கள் மீது கண் வைக்கவில்லையா?

இந்தவகையில் நான் தப் பித்துக்கொண்டேன். அவர் ஒரு பெண் டாக்டர்.

★ தொலைக்காட்சி அறிவிப்பாள ராகவும், தொகுப்பாளினியா கவும் உங்களுடைய சாதனைகள்?

பத்து வரு டங்கள் எவ்விதமான Remarks இல்லாமல் நிலைத்து நிற்கின்றேன். பல பிரபலங்களைப் பேட்டி கண்டுள்ளேன். பல மேடை நிகழ்ச்சி களை தொகுத்து வழங் கியுள்ளேன். இப்போது தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பு நிகழ்ச்சி களிலும் அறிவிப்பாளராக செயற்பட்டுவருகின் றேன்.

★ பிரமுகர்கள் சந்திப்பின்போது உங்களால் மறக்க முடியாத சம்பவம்?

ஒருநாள் வளர்ந்துவரும் ஓர் இளம் டைரக்டர் வருகின்றார். அவரைப் பேட்டி காணவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. வருபவரை முன்பின் கண்டதில்லை. அவரைப்பற்றி எதுவும் தெரி யாது. எப்படி பேட்டி காண்பது என்ற தயக்கம்.

இதனால் ஏனையவர்களிடம் சில தகவல்களை சேகரித்துக்கொண்டேன். அந்த டைரக்டர் வந்தார். அழகு, இளமை, திறமை எல்லாம் இருந்தது. கேட்ட கேள்விகளுக்கு ''டக் டக்'' என்று பதிலளித்து விட்டுப்போய்விட்டார். சில வருடங்களின்பின் அவரே எனக்கு வாழ்க்கைத்துணையாகிவிட்டார் என்பது வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவம் என்று கூறி முகம் சிவக்கின்றார் பிரணீத்தா.

**★ அப்படியானால் கண்டதும் காதலா?**

அப்படி இல்லை. சில வருடங்களின்பின் அவர் நான் கடமையாற்றும் நேத்ரா தொலைக்காட்சியில் பணிக்கு இணைந்துகொண்டார். இருவரும் சாதாரண சக ஊழியர்களாகவே பழகினோம்.

**★ நீங்கள்தான் உங்கள் காதலை முதலில் வெளிப்படுத்தினீர்களா?**

இல்லவே இல்லை. கோணேஸ்தான் எங்கள் அம்மாவை சந்தித்து என்னை விரும்புவதாகவும், திருமணம் முடித்துக்கொள்ள விரும்புவதாகவும் கூறினார்.

**★ அதற்கு நீங்களும் பச்சைகொடி காட்டினீர்களா?**

சிறிதுநேர மௌனம். இவர் என்னிடம் கூறாமல் என் அம்மாவிடம் கேட்ட பண்பு எல்லோருக்கும் பிடித்துவிட்டது. பின்னர் இருபக்கம் பேச்சு ஜாதகப் பரிமாற்றம். இறுதியாக 'டும்டும்'தான் என்று சிரிக்கின்றனர் இந்த இளம் தம்பதிகள்.

**★ கோணேஷின் அம்மா வீட்டார் உங்களை எப்போது பார்த்தனர்?**

நான் பங்குகொள்ளும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலேயே இவர் என்னை அவரது குடும்பத்தினருக்கு அடையாளம் காட்டியுள்ளார் என்பது பின்னர்தான் தெரியவந்தது.

**★ உங்களுடைய திருமண வாழ்க்கை?**

திருமணமாகி 2 1/2 வருடங்களாகிவிட்டன. இதில் ஒரு விசேடம் என்னவென்றால் திருமணத்தின்பின் ஆறு மாதங்களின் பின்னர்தான் தேனிலவுக்கு சிங்கப்பூர் சென்றோம் என்று ஏக்கத்துடன் கூறினார்.

**★ நீங்கள் ஒரு தொலைக்காட்சி அறிவிப்பாளராகவும் தொகுப்பாளினியாகவும் இரவு பகலாக கடமையாற்றுகின்றீர்கள். உங்கள் கணவர் ஒரு நடிகர், டைரக்டர் எனப் பலருடனும் ஊர் சுற்றுகின்றார். அவரைப் பற்றி ஏதாவது கிசு கிசு வந்ததுண்டா?**

இதுவரை அப்படி ஏதும் கிசு கிசு வரவில்லை. இனி வந்தாலும் நான் அலட்டிக்கொள்ளமாட்டேன். எனக்கு அவரையும், அவருக்கு என்னையும் பற்றி நல்ல அபிப்பிராயமும் புரிந்துணர்வும் உள்ளன. இதனால் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

**★ ஒலி, ஒளிபரப்புத்துறையில் உங்களுடைய ரோல் மொடலாகக் கொண்டது யாரை?**

என்னை வழிகாட்டி வாழவைத்த சிரேஷ்ட அதிகாரிகள், சக ஊழியர்கள், நண்பர்கள் - குறிப்பாக, என்னை முறையாக வழிநடத்திய அப்பா உட்பட அனைவரின் ஆசீர்வாதத்துடன் நான் நானாக பிரகாசிக்க விரும்புகின்றேன். யாரையும் தழுவாமல் ஒரிஜினல் 'பிரணீத்தா'வாகவே எனது திறமைகளை வெளிப்படுத்தவேண்டும் என்பதே என் இலட்சியம் என்று உறுதியுடன் கூறுகின்றார் பிரணீத்தா.

**இத் தம்பதிகளினது கலைப் பயணம் உச்சம் தொட ஒளிஅரசி தனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றது.**

## சீனக்கதை

திருமதி ஜெ.குகநேசன்

புதிய ஊருக்குப் போக வழியிலிருந்த படகுக் காரர் ஒருவரிடம் ஓர் இளந்துறவியும், முதிய துறவியும் வழி கேட்டனர்.

வழியைச் சொன்ன அவர், ''நீங்கள் மெதுவாகப் போனால் சீக்கிரம் போய்விடலாம். வேகமாகப் போனால் தாமதமாகும்'' என்றார். இளம் துறவி அவர் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொண்டு நடை பயின்றார். மூத்தவரோ இவன் தலைகீழாய் சொல்கின்றான். மெதுவாக போனால் எவ்வாறு சீக்கிரம் போகமுடியும் என நினைத்து விரைவாக நடந்தார்.

சாய்வுகள் கொண்ட அந்தப் பாதையில் விரைந்து சென்று அவர் பலமுறை வழுக்கி விழுந்தார். காயமும் ஏற்பட்டது. அவர் சுமந்து சென்ற சுவடுகளும் சிதறி விழுந்தன. அவர் அவற்றைப் பொறுக்க நேர்ந்தது.

அவர் ஊரை அடைய இருளானது. மடாலயத்திலும் தங்க அனுமதி இல்லை.

ஆனால், இளம் துறவி மெதுவாகச் சென்று சுவடிகள் விழாமல் அடிபடாமல் தக்க நேரத்தில் மடாலயம் அடைந்து நிஷ்டையிலும் கலந்தார்.

## அம்மு அழகு என்றால் என்ன?

அடுத்தவர் கண்ணை உறுத்தாத அடுத்தவர் மனதை சலனப்படுத்தாத பார்வைக்கு இனிமை யான அனைத்தும் அழகு தான்.

**கிரிஜா யாழ்ப்பாணம்.**

## அம்மு, வாழ்க்கையில் தொடர்ந்து தோல்விகளே வருகிறதே, என்ன செய்யலாம்?

தன் மீது விழும் உளியின் வரிகள் தான் தன்னை சிற்பமாக மாற்றப்போகிறது என்பதை எந்தக் கல்லும் அறிவதில்லை. அது போலத்தான் தோல்விகள் தான் வெற்றியை நிர்ணயிக்கப்போகும் வலிமையான சக்தி என்பதை மனிதர்களாகிய நாம் உணரத்தவறிவிடுகிறோம்.

**தர்ஸி, நெல்லியடி.**

## இன்றைய உலகில் நவீனத்துவம் நன்மை தருகிறது என நினைக்கின்றீர்களா அம்மு?


நவீனத்துவம் நன்மை தீமை இரண்டும் கலந்தது தான். அதனை நாம் பயன்படுத்தும் முறையிலேயே அதன் விளைவுகளும் உள்ளன. தீமையை விடுத்து நன்மையை மட்டும் எடுத்துக் கொண்டால் துன்பம் ஏதுமில்லை.

**நுஸீரா, புத்தளம்.**

## சமீபத்தில் வந்த திரைப்படங்களில் அம்முவிற்குப் பிடித்த திரைப்படம் என்ன?

தங்க மகன், அலட்டல் இல்லாத தனுசின் நடிப்பு பிரமாதம்.

**சசி, கிரான்.**




# அம்முவின் கேள்வி பதில்

## சென்னையைக் கலக்கிய வெள்ளம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் அம்மு?

மனிதத்தையும் மனிதாபிமானத்தையும் நிரூபித்துச் சென்றிருக்கிறது சென்னையின் வெள்ளம்.

**செந்தில், திருவையாறு.**

## உறக்கம் தொலைதூரமாகிவிட்டது. என்ன செய்யலாம் அம்மு?

துக்கம், கலக்கம், சலனம், கழிப்பு இவை தான் தூக்கத்தைப் பறிக்கும் காரணிகள். இவை எல்லாவற்றையும் மட்டுப்படுத்திவிட்டால் தூக்கம் தானாக வந்துவிடும். அது சரி கயலின் தூக்கம் பறிபோன காரணம் எதுவோ?

**கயல்விழி, கரவெட்டி.**

### சிறந்த பதில்களுக்கு ரூபா 100 றீலோட். உங்கள் பதில்களை எழுதுங்கள்

**01. எதற்கெடுத்தாலும் நச்சரித்துக் கொண்டிருக்கும் மனைவியிடம் இருந்து தப்பிக் கொள்ள சிறந்த வழி என்ன?**

இன்றைய காலத்தில் பெரும்பாலும் கணவன், தனது மனைவிக்காக நேரம் ஒதுக்குவது மிகமிக அரிதாகி விட்டது. அதுவே குடும்ப பிளவுக்கான அடிப்படைக்காரணம் என்பதை யாரும் உணர்வதில்லை. காலத்தின் கட்டாய தேவை அதுவே. கணவன் தனது மனைவிக்காக முழு அன்போடு ஒரு சிறிய பொருளை வாங்கிக் கொடுத்தாலும் அது விலைமதிப்பில்லாதது தான்.

ஆனாலும் இன்று அனைவரோடும் எந்நேரமும் உறவாடும் இன்னொரு அங்கமாக கைத்தொலை பேசியே உள்ளது. அதனால் கணவன் தனது அன்பை எந்நேரமும் வெளிப்படுத்தும சாதனமாக இதனையே வழங்கலாம்.

**கிரிஜா, யாழ்ப்பாணம்.**

நிமிடக்கதை - வை. தியாகராஜா -

# பாசமா! குடும்பமா!



''நான் சொல்வதை கவனமாகக் கேளு. இன்றைக்கு எனக்கு ரெண்டுல ஒன்னு தெரிஞ்சே ஆகணும். உனக்கு நான் முக்கியமா அல்லது குடும்பம் முக்கியமா. நீயே யோசித்து முடிவு பண்ணிக்கோ. மற்றவங்களைப் பற்றி கவலை வேண்டாம். இவ்வளவு நாள் போனதே போதும். நீ பிடிவாதமாக இருப்பதிலே அர்த்தமே இல்லை. உனக்கு அவகாசம் தாரேன். நல்லா யோசி; உனக்கு நான்தான் முக்கியம் தெரிஞ்சுக்கோ.

நீ என் மேல வைத்திருக்கிற நம்பிக்கை உண்மையாக இருந்தால் என்னோடு புறப்பட்டு வா. என்னிடம் தேவையான பணம் இருக்கு. இல்ல உனக்கு குடும்பம்தான் முக்கியம் என நினைத்தால் நீ வரவேண்டாம். நான் மட்டும் போய்க்கொண்டே இருப்பேன். என்னைப் பற்றி கவலை வேண்டாம். பின்னால் நீ இதை நினைத்து வருத்தப்படுவே'' எனக் கூறிவிட்டு புறப்பட்டார் துரை.

இதைக் கேட்ட ராதா மிகக் குழப்பமடைந்தாள். மனதில் மிகப் பெரிய போராட்டம் நடந்தது. பாசமா, குடும்பமா என்ற போராட்டம். இறுதியாக பாசம் வென்றது. துரை வருகையை எதிர்பார்த்து காத்திருந்தாள்.

சில மணிநேரம் கழித்து துரை என்கின்ற துரைசாமி வந்தார். வந்தவர் தனது பையை மட்டும் எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அச்சமயம் அவருடைய பேத்தி ரமா ஓடி வந்து ''தாத்தா, பாட்டியும் புறப்பட்டு விட்டாங்க'' என்று பாட்டியின் பையை தாத்தா கையில் திணித்துவிட்டு மகிழ்ச்சியாக, 'போய் வாருங்கள்'' என வழியனுப்பி வைத்தாள்.

## அழகுத் துளிகள்



**முடி:-**

முடி செழித்து வளர வாரம் ஒருமுறை வெண்ணெயை தலைக்குத் தடவி ஒரு மணி நேரம் கழித்து அலசி வந்தால் முடி நன்றாக வளரும்.



**கண்:-**

கண்ணைச் சுற்றியுள்ள கரு வளையம் நீங்க வெள்ளரிக்காய் சாற்றை பஞ்சில் நனைத்து கண்கள் மீது தினமும் போட்டுவரவும்.

## ஒளி அரசி நடாத்தும் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி : 09

**மாணவர்கள் மத்தியில் ஓவியம் வரைதலை ஊக்கப்படுத்துவதற்காக ஒளி அரசியின் தேசிய மட்ட சான்றிதழுக்காக இப் போட்டி அனைத்து வகுப்பு மாணவர்களும் பங்குபற்றக்கூடியவாறு நடத்தப்படுகின்றது. இதன்படி குறிப்பிட்ட தலைப்புக்கான ஓவியத்தை மாணவர்கள் சுயமாக வரைந்து அதனை 'ஓவியப் போட்டி' எனக் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் எழுதி எமது தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்புதல் வேண்டும்.**

| | |
|---|---|
| முதலாம் பரிசு | - 750/= |
| இரண்டாம் பரிசு | - 500/= |
| மூன்றாம் பரிசு | - 250/= |

**போட்டிக்கான நிபந்தனைகள்**

* **மாணவர்கள் ஓவியத்தை A4 அளவிலான வெள்ளைத்தாளில் வரைந்து வர்ணமிட்டு ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.**
* **பரிசுக்குரிய சான்றிதழ்கள் வகுப்பு ரீதியாக முதல் மூவருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.**
* **37ஆம் பத்தத்தில் உள்ள கூப்பனைப் பயன்படுத்துக.**

### டிசம்பர் மாத ஓவியப் போட்டிக்கான தலைப்பு


முன்பள்ளி தொடக்கம் தரம் ௨ வரை- **அழகான பொங்கல் பானை**
தரம் ௩ தொடக்கம் தரம் 8 வரை - **அப்பா பொங்கல் பானை வைக்கும் காட்சி**
தரம் 9 தொடக்கம் உயர்தரம் வரை - **ஆலயம் ஒன்றின் பொங்கல் திருவிழா**

மேலதிக தொடர்புகளுக்கு : 071 8628369



இந்தியாவில் பத்திரிகை ஒன்றில் சுவாமி சுகபோதானந்தா அவர்களால் அருளப்பட்டு மனசே ரிலாக்ஸ் என்ற தொடர் தொடர்ச்சியாக வெளிவந்தபொழுது பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விற்பனையாகியிருந்தன. அந்தளவுக்கு வாசகர்கள் மனங்களில் தன்னம்பிக்கையை ஊட்டக் கூடிய சுவாரஸ்யமான தொடராக இப்பகுதி அமைந்திருந்தது. இப் பாரிய தொடரில் இருந்து எமது நாட்டுக்கு பொருத்தமான முக்கியமான சில பகுதிகள் ஒளியரசி வாசகர்களுக்காக இப்பகுதியில் தொடர்ச்சி யாக பிரசுரமாகவுள்ளது.

# துன்பம் பறந்தோட...



தினப்படி வாழ்க்கையில் நாம் அதிகமாகப் பயன்படுத்தும் நெகடிவ் சொற்களில் ஒன்று அலுவலகத்தில் பிரச்சினை, வீட்டில பிரச்சினை! என்னடா வாழ்க்கை இது?

இப்படி அலுத்துக்கொள்ளாதவர்களின் எண்ணிக்கை ரொம்பவும் குறைவு.

**எதுதான் பிரச்சினை?**

நீண்ட நாட்களாக வேலை தேடித் தேடி சோர்ந்துபோன ஒரு இளம்பட்டதாரியான அவன், பல வருடங்களுக்கு பின்னர் பத்திரிகை அலுவலகத்தில் அவனுக்கு நிருபராய் வேலை கிடைத்தது. பயபக்தியோடு முதல் நாள் வேலைக்கு சென்றான்.

பத்திரிகை ஆசிரியர் அவனை அழைத்து ''இன்று சுதந்திரதினம் நமது துறைமுகத்தில் கப்பற் படையைச் சேர்ந்த போர்க்கப்பல் ஒன்று வந்திருக்கிறது. அதில் சுதந்திரதினம் கொண்டாடுகிறார்கள். அங்கு போய் செய்தி சேகரித்து வா '' என்று இவனை அனுப்பிவைக்கிறார்.

**முதல் நாள் முதல் அஸைமெண்ட்!**

அதனால் ஆசிரியர் சொன்ன அடுத்த நிமிடமே துறைமுகம் நோக்கி ஓடுகிறான்.

அன்று மாலை சுதந்திரதினச் செய்தி சேகரிக்க கலெக்டர் அலுவலகம் கட்சி அலுவலகம் என்று நாலா திசைகளுக்கும் போன நிருபர்கள் அவரவர்கள் சேகரித்த செய்திகளை வேக வேகமாக எழுதுகிறார்கள். ஆனால் நம்முடைய இளைஞன் ஒருவன் மட்டும் செய்தி எதுவும் எழுதாமல் சோகமாக உட்கார்ந்திருக்கிறான். இதனைப்பார்த்த சக நிருபர் ஒருவர் ''நீ ஏன் எதுவும் எழுதவில்லை'' என்று பரிவோடு கேட்கிறார்.

அதற்கு இளைஞனோ என் கெட்ட காலம் நான் மாவு விற்கப்போனால் காற்றடிக்கிறது. உப்பு விற்கப்போனால் மழை பெய்கிறது. என்

முதல் நாள் அஸைமெண்ட் பெரிய பிரச்சினைக் குள்ளாகிவிட்டது. கப்பற்படையில் நடக்கும் சுதந்திர நிகழ்ச்சிகளை கவர் செய்யச்சொல்லித் தான் ஆசிரியர் என்னை அனுப்பினார். என் கஷ்ட காலம். கப்பலில் எந்தக் கொண்டாட்டமும் நடக் கவில்லை. செய்தி இல்லை என்று ஆசிரியரிடம் எப்படிச் சொல்வது என்று பயமாக இருக்கிறது என்று புலம்ப ஆரம்பித்தான்.

அப்படியா! கப்பலில் ஏன் சுதந்திரதினக் கொண்டாட்டம் நடக்கவில்லை என சக நிருபர் சளைக்காமல் கேட்டார்.

கப்பலில் ஓட்டை இருந்திருக்கிறது. சுதந்திர தின ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்ததால் இதனை யாரும் கவனிக்கவில்லையாம். திடீ ரென்று ஓட்டை பெரிதாகி கடல் தண்ணீர் குபுகுபு என்று புகுந்து கப்பலே மூழ்கும்படி ஆகிவிட்டது. அதனைத்தடுப்பதற்கு பெரிய படையே பாடு பட்டது. இப்படியிருக்க சுதந்திரதினக் கொண் டாட்டம் எப்படி நடக்கும்.

சக நிருபர் அதிர்ந்துபோய் எழுந்து நின்றார்.

அடப்பாவி இதுதானே முதல்பக்கச் செய் தியாக வந்திருக்கவேண்டும். என்று சொல்லிக் கொண்டே முழு விபரங்களையும் திரட்ட அந்த நிருபர் ஓடினார். ஆக பிரச்சினை என்று நினைத்து இளைஞன் சோர்ந்து உட்கார்ந்திருந்தானே; அது அவன் தன் திறமையை நிரூபிக்க கிடைத்த தங்க மான வாய்ப்பு. அதனைத்தான் கோட்டை விட்டி ருக்கிறான்.

வாழ்க்கை என்பது நிகழ்ச்சி நிரல்படி பட்டி யலிட்ட சம்பவங்களின் ஊர்வலம் இல்லை. அது எதிர்பாராமல் வருகின்ற வாய்ப்புக்களின் ஊர்வலம். ஒவ்வொரு பிரச்சினையும் நமக்கு கிடைக்கின்ற ஒரு வாய்ப்புதான்.

யோகி ஒருவர் காட்டின் வழியாகப்போய்க் கொண்டிருந்தார். தூரத்தில் விறகு வெட்டிக் கொண்டிருந்த சிலர் யோகி காட்டுக்குள் போவ தைப் பார்த்து ''நில்லுங்கள் நில்லுங்கள்'' என்று கத்தியபடி தலைதெறிக்கப் பின்னால் ஓடிவந்த னர்.

அந்தக்காட்டில் ஒரு இராட்சஷி இருக்கிறாள். மனித மாமிசம் சாப்பிடும் பூதகி அவள். எத்தனை மனிதர்களைப்பார்த்தாலும் அவர்களைச் சாப் பிட்டுவிட்டு சாப்பிட்டவர்களின் வலது கட்டை விரலை மட்டும் பத்திரமாக எடுத்து வைத்துக் கொள்வாள். இப்படி இதுவரை 999 கட்டை விரல்களை சேகரித்து வைத்திருக்கிறாள். ஆயிர மாவது கட்டை விரல் கிடைத்துவிட்டால் அத்த னையையும் சேர்த்து கழுத்தில் மாலையாக மாட் டிக்கொள்வது தான் அவள் திட்டம். அதனால் காட்டுக்கு போகாதீர்கள்.

போனால் பிரச்சினைதான் என்று ஊர்மக் கள் எச்சரித்தார்கள். உங்களுக்கு நன்மை செய்ய இதனைவிட நல்ல வாய்ப்பு எங்கே கிடைக்கும் என்று சொல்லிவிட்டு யோகி காட்டுக்குள் சென் றார். எதிர்பார்த்த மாதிரியே ஆங்காரக் கூச்சலுடன் அங்கிருந்த ஆலமரத்தின் ஒரு பெரிய கிளையை உடைத்துக்கொண்டு புழுதி கிளப்பியபடி யோகி யின் எதிரில் வந்து நின்றாள் இராட்சசி. ஆனால் மற்றவர்களைப்போல் இராட்சஷியைப்பார்த்து யோகி பயந்து ஓடவில்லை.

என்னைக் கொல்வதன் மூலம் உனக்கு சந்தோசம் கிடைக்கும் என்றால் என்னைத்தா ராளமாக கொல்லலாம்.' நீ பலசாலி என்பதை ஏற்கிறேன். ஆனால், ஒரு விடயம் ஆலமரத்தின் கிளையை உடைக்க உனக்கு ஒரு சக்தி இருக்கிற றதே தவிர நீ என்னதான் முயன்றாலும் உன்னால் அந்தக்கிளையை மீண்டும் மரத்தில் ஒட்ட வைக்க முடியாது. அழிப்பது சுலபம். ஆக்குவது கடினம் என்று தொடங்கி நேருக்கு நேர் பேசத் தொடங்கி னார். அவர் சொன்ன வார்த்தைகளைவிட அவரது குரலில் இருந்த உண்மையும் கரிசனையும் இராட் சஷியைச் சரணடையச் செய்தது.

அதுமட்டுமல்ல பிறகு அந்த யோகியின் சீடராகவே மாறினாள். நாம் இதிலிருந்து கற் றுக்கொள்ள வேண்டியது. காட்டுக்குள் நுழைய விரும்பிய அந்த யோகிக்கு ராட்சஸி ஒரு பிரச்ச னையாக இருக்கவில்லை. ஊர்மக்கள் ஒரு வாய்ப் பாக இருந்தார்கள்.

ஆனால் சிலவேளைகளில் இவற்றையெல் லாம் சமாளிக்க முடியாதபடி உண்மையான பிரச்சினைகளும் உருவாகும். சரி அப்படி சமா ளிக்க முடியாத பிரச்சினைகளை வீழ்த்துவது எப் படி? பிரச்சினைகளை சுலபமாக எதிர்கொள்வது டேட்டிங் வைத்துக்கொள்வது மாதிரி என நினை யுங்கள். ஐயையோ இது கெட்ட வார்த்தை என்று பதறாதீர்கள்.

அதாவது, ஓர் இளம்பெண் அல்லது ஆணின் ரசனை, விருப்பு, வெறுப்பு என்று சகலத்தையும் தெரிந்துகொள்ள ஓர் ஆண் அல்லது பெண் செய்யும் முயற்சிதான் டேட்டிங். பிரச்சினையை ஓர் இளம் பெண்ணாக நினைத்து அதனோடு டேட்டிங் செய் யுங்கள். அப்போதுதான் பிரச்சினையின் முழுப்ப ரிமாணமும் அதனை சமாளிக்கக் கூடிய வழிமு றைகளும் உங்களுக்கு விளங்கும். பிரச்சினையை நீங்கள் ஒரு தண்டனையாக நினைக்காதீர்கள் கஷ் டப்படுவீர்கள்.

சவாலாக நினைத்து எதிர்கொள்ளுங்கள். உற் சாகம் அடைவீர்கள்.

இம்மாதம் உங்களுக்கு எப்படி ?

✍ சோதிட வித்யா ரத்னா ஏ.சி. சேயராசா, யாழ்.

**மேடம்** சுபகாரியம் ஒன்று எதிர்பாராது ஏற்படல், எந்தக் காரியத்திலும் சிந்தித்து செயற்படுதல் நல்லது, உடன் பணிபுரியும் சக ஊழியர்களை அனுசரித்து நடந்து கொள்க.

**மிதுனம்** வழக்கு சாதகமாக முடிதல்,மக்களினால் பெருமையும் மதிப்பும் ஏற்படல், கொடுக்கல் வாங்கல் மன நிம்மதியை அளித்தல்

**சிம்மம்** நிலுவையில் ஒரு பகுதியாவது வந்தடைதல்,தம்பதியரின் பிணக்கு நீங்குதல், எடுத்த கருமங்களை நிறைவேற்ற எதிர்நீச்சல் போடல்

**துலாம்** பேச்சுக்களில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதினால் முரண்பாடு விலகிவிடல், ஆதரவைப்பெற கொடுத்த வாக்குறுதியைத் தண்டித்தல், சொத்துப் பிரச்சினை மேலும் இழுபட்டுச்செல்லுதல்

**தனு** பரீட்சையில் சித்தியினால் வசந்தகாலம் பிறத்தல், வெளியூர் பயணம் சிலவேளைகளில் இடைத் தங்கல் நாட்டில் சேர்த்துவிடல்

**கும்பம்** தேவையற்ற பொழுதுபோக்கு நட்பினை தவிர்த்துவிடல், உடல் ஆரோக்கியம் வேலைப் பழு காரணமாக பாதிக்கப்படுதல், விவாகப் பேச்சு ஸ்தமித்தல்,

**இடபம்** தடைப்பட்டிருந்த ஊதிய உயர்வு கிட்டிவிடுதல், அனுமதிக்காக அலைச்சல்,விற்பனை யுக்தி

**கடகம்** அசையும் சொத்துக்களில் வீண்விரயம் ஏற்படல், பிரயாணவேளையில் ஆவணங்களில் விழிப்பாக இருத்தல், பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களை எண்ணி விழிப்பாக இருத்தல்

**கன்னி** தொடுத்த முயற்சிகள் தடை தாமதத்திற்கு பின்னரே சித்தியாதல், மேலும் கடன் படும் நிலை, பெற்றோரின் நலன் கருதி அடிக்கடி விடுப்பில் நிற்றல்,

**விருச்சிகம்** பணவரவுகளில் சற்று நெருக்கடிகள் நிலவக்கூடும், ஆடம்பரச் செலவுகளினால் கடன்பட்டுத் திண்டாட்டம் அடைதல், தொழிலில் போட்டி

**மகரம்** நோய் குணமடைய தெய்வ தலங்களுக்கு சென்று வரல், புதியன கொள்வனில் நம்பகத் தன்மையை கைவிடாதிருத்தல், மீள்நியமனம் பெற முயற்சி

**மீனம்** வெளியூர் பயணம் பற்றிய இனிய செய்தி வந்தடைதல், ஆவணக் குறைபாட்டினால் தண்டம் பெறும் நிலை ஏற்படல், பிதா தேகநலம்

# பச்சிமோத்தாசனம்

## செய்முறை:

1. விரிப்பில் இருகால்களையும் நீட்டி உட்கார வேண்டும்.
2. விரிப்பில் மல்லாந்து படுத்தநிலையில் இரு கால்களையும் ஒன்றாக சேர்த்துப் படுத்தநிலையில் வைத்துக்கொள்ளவும்.
3. பின் இரு கைகளை தலைக்கு மேல் நேராக நீட்டி காதுகளுடன் ஒட்டியவாறு சுவாசத்தை உள்ளிழுத்து ஒரே முயற்சியில் இடுப்பு வரை நிமிர்ந்த நிலைக்கு வரவும். கைகளை மேலே கொண்டு வரவும் உள்ளங்கைகள் முன்புறமாகப் பார்த்திருக்கட்டும். மூச்சினை உள்ளிழுக்க வேண்டும்.
3. மூச்சினை வெளியில் விட்டவாறு உடலை தரைக்கு இணையாகக் கொண்டுவர வேண்டும். கைகள் நீட்டியவாறு இருக்கட்டும்.
4. அப்படியே இரு கைகளாலும் பாதங்களைப் பிடிக்கவேண்டும்.
5. பாதங்களைப் பிடித்தபடியே தலையை இரு கைகளினூடே செல்ல வைத்து பின் இரு கைகளின் விரல்களால் கால் பெருவிரல் அல்லது பாதத்தை பிடித்துக் கொள்ளவும். வயிற்றை மூச்சை வெளிவிட்ட நிலையில்

6.சாதாரண சுவாத்தில் ஒரு நிமிடம் இந்த நிலையில் இருக்க வேண்டும்.

பிறகு 432 வழியாக ஆரம்ப நிலைக்கு வர வேண்டும்.



இரண்டு முதல் நான்கு முறை செய்யலாம் ஒவ்வொரு முறைக்கும் சற்று இளைப்பாறி பின் செய்யவும்.

பயன்கள்: தொப்பை குறைய நல்ல வழி. இதனை செய்வதனால் இடுப்பு பகுதியில் இருக்கும் தசைகள் குறையும்.

தைப்பொங்கல் சிறப்பு சமுதாய விவாதக்களம்

விவாத மேடை 12

# மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்விற்கு சீதனம் அவசியமானதா? அவசியமற்றதா?

## அவசியமற்றது

**நெல்லியூர்த்தோழி**

குடும்பவாழ்வு என்பது ஆத்மார்த்தமான புனிதமான ஒன்றாகும். இத்தகைய குடும்ப வாழ்வுக்கு சீதனம் அவசியமற்றது. மகிழ்ச்சியான குடும்ப வாழ்விற்கு புரிந்துணர்வு, அன்பு, பகிர்ந்துண்ணல், விட்டுக்கொடுத்தல், நற்குண செயல்கள், ஆளுமை என்பன அத்தியவசியமானவை ஆகும். இதனையே திருவள்ளுவரும் அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் உள என்று கூறியுள்ளார். சீதனம் இன்று குடும்ப வாழ்க்கையை அழிக்கும் ஓர் ஆயுதமாகவே காணப்படுகிறது.

**நெய்ஸரீனா அம்ஜடீன்.**

மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கைக்கு சீதனம் அவசியமில்லை. மனைவி தனது கணவனுக்கு எல்லா விடயங்களிலும் உதவி செய்து அவருக்கு இன்பம் கொடுத்து பணிவிடை செய்து, அவரது வாரிசை பத்து மாதம் சுமந்து வலியை அனுபவித்து குழந்தையை பெற்றெடுத்து வளர்க்கிறாள். குடும்பத்திற்காகவே உழைப்பவனிடம் ஊழியம் பெற முடியுமா? ஊழியம் பெற்றா மகிழ்வை பெற வேண்டும். திருமணத்திற்கு பின்னும் பொறுப்புள்ள ஆண்மகனாக இருக்கும்போது சீதனம் அவசியமல்ல.. தனது மனைவியையும் தனது குடும்பத்தையும் ஒரு ஆண்மகனாக பொறுப்புள்ள வகையில் ஒருவன் கவனித்தால் குடும்பம் மகிழ்வாக இருக்கும்.

**அப்துர்ரஹீம்**

ஆண் பெண் இருவருமே நல்லொழுக்கத்தை பேணுவதே குடும்ப மகிழ்ச்சிக்கு காரணம். அநேகமாக கல்வியறிவுடைய சமூகத்தில் இன்று சீதனம் வாங்குவது அருகிவருகிறது. சீதனத்தை எதிர்பார்க்காத குடும்பத்தில் தான் மகிழ்ச்சி தொடர்ந்து நிலைக்கும்.

**கு.ரிலோஜினி**

குடும்பத்தில் பிரச்சினைக்கும் நிம்மதியற்ற வாழ்வுக்கும் காரணம் சீதனமாகும். மகிழ்ச்சிகரமான குடும்பம் அமையவேண்டும் என்றால் நிச்சயமாக இரு மனங்களின் ஒற்றுமை, நம்பிக்கையான வாழ்க்கை முறை, முயற்சிகள் என்பனவே அவசியமாகும்.

**யோ.சிவாஜினி**

மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு இடையூறும் தடையுமாக இருப்பது சீதனம். இன்று கௌரவத்துக்காக சீதனம் வாங்குபவர்களும் சந்தையில் பேரம் பேசுவதுபோல் தொழிலுக்கு ஏற்றவகையில் சீதனம் வாங்குகிறார்கள். பெண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் மனம் வருந்திக் கொடுக்கும் சீதனத்தில் ஒருபோதும் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கமுடியாது.

**கு. தயாமினி**

மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்விற்கு அன்பு, புரிந்துணர்வு விட்டுக்கொடுப்பு, போதும் என்ற மனநிறைவு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, முதியோரை மதித்தல், இளையோருக்கு அறிவுரை கூறி நல் வழிகாட்டல், என்பனவே தேவையாகும். குறிப்பாக இளையோர், முதியோர்களின் அபிலாசைகளை கூடியவரை நிறைவு செய்தல் வரவுக்கேற்ற செலவு செய்தல், சமய உணர்வுடன் வாழ்தல் போன்றனவே அவசியமாகும். நவீன தேடல் மிக்க இவ்வுலகில் சீதனம் அவசியமற்றது. குடும்ப ஒற்றுமையும் அமைதியும் மகிழ்வை கொடுக்கும். ஒரு பெண் குடும்பத்தில் மகிழ்ச்சியாக இருக்க கொண்டு செல்ல வேண்டிய சீதனம் நல்லொழுக்கமேயாகும். மகிழ்ச்சி இருந்தால் அனைத்தையும் நாமாக உழைத்து தேடிக்கொள்ளலாம். இதற்கு எனது குடும்பமே எடுத்துக்காட்டாகும். நல்லதொருகுடும்பம் தான் பல்கலைக்கழகத்துக்கு உதாரணமாகும் - சீதனம் வாங்கி பணமுள்ள குடும்பம் பல்கலைக்கழகம் ஆகிவிடமுடியாது.

## அவசியமானது

**ம.லோஜி**

இந்தக்காலத்தில் பணம் என்றால் பிணமும் வாயைத்திறக்கும். பணம் இருந்தால்தான் வாழ்க்கை. பணம் இல்லாவிடின் எவரும் மதிப்பதில்லை.

பணமிருந்தால்தான் எமது குடும்ப தேவைகளை நிறைவுசெய்து மகிழ்வுடன் இருக்கலாம். எனவே சீதனம் இருந்தால்தான் கஷ்டப்படாமல் மகிழ்ச்சியாக வாழலாம்.

பி.தட்சா

மகிழ்ச்சியாக வாழ சீதனம் மிக அவசியமானது. ஒரு ஆண் படித்து முடித்து உத்தியோகம் பார்க்கும் வயது வரும்போது திருமண வயதை அடைகின்றான். அவன் சகோதரிகளுடன் பிறந்துவிட்டால் அவர்களுக்கு சீதனம் கொடுக்க வேண்டும். அவர்களின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும். கஷ்டப்பட்டு வளர்த்த பெற்றோரின் தேவையை பூர்த்திசெய்ய வேண்டும். அவன் சீதனம் வாங்காமல் திருமணம் முடித்தால் இவை எப்படி சாத்தியமாகும். அவனது சம்பளத்தில் ஒரு குடும்பம் மட்டுமே வாழ போதுமானதாகும். அதுமட்டுமா தெருவிலா நிற்க முடியும். வீடு வாங்க பணத்திற்கு எங்கே போவது என்று ஆயிரம் தலையிடி அவனுக்கு வந்துவிடும். உழைத்து எதை வாங்கமுடியும். எதை செய்யமுடியும். வீட்டில் தினமும் அழுகைதான் உருவாகும். மனைவிக்கு விருப்பமானதை வாங்கிக்கொடுக்க முடியவில்லை குழந்தைகள் கேட்கும் பொருளை வாங்கிக் கொடுக்க முடியவில்லை என ஒரே ஏக்கமும் கவலையும்தான். அன்றாட பிரச்சினைகளை தீர்க்கவே வீட்டில் அல்லோலகல்லோலமாகத் தான் இருக்கும். சீதனமிருக்காவிடின் பரம்பரை சொத்தாவது இருக்கவேண்டும். எதுவுமற்றவர்கள் சீதனம் வாங்கினாலே குடும்பத்தில் பிரச்சினைகளின்றி நிம்மதியாகவும் மகிழ்வாகவும் வாழமுடியும்.

## விவாத மேடை 12 இற்கான தலைப்பு

**பெண்களுக்கான நவீன ஆடைகள் வரவேற்கத்தக்கதா? வரவேற்கமுடியாததா?**



உங்கள் விவாதங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 20.01.2016

## போட்டி -10- வெற்றிபெற்றோர்

மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்விற்கு சீதனம் அவசியமற்றது - என்ற வாதத்தை முன்வைத்த **இணுவிலைச்சேர்ந்த குபேரமூர்த்தி தயாமினியும்** சீதனம் அவசியமானது என்ற வாதத்தை முன்வைத்த **வெள்ளவத்தையைச் சேர்ந்த பி.தட்சாவும்** வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்படுகிறார்கள்.

## இளைய தலைமுறையே நீங்களும் எழுத்தாளராகுங்கள்

ஒளிஅரசியின் 2ஆம்ஆண்டு நிறைவை முன்னிட்டு

பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகளை ஒழித்து மது அருந்துதல், போதைப்பொருள் பாவனை, புகைத்தல் என்பவற்றுக்கு எம் இளைய தலைமுறை அடிமையாகாமல் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இளம் எழுத்தாளர்களை உருவாக்க ஒளிஅரசி அரும்பாடுபட்டு வருகின்றது. அந்தவகையில் ஒளிஅரசி சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் கட்டுரை, சிறுகதை, கவிதைப்போட்டிகளை மாணவர்களிடையே நடத்துகிறது. பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் அவர்கள் இறுதிச்சுற்றுக்கு தெரிவுசெய்யப்படுவார்கள். இறுதிச் சுற்றில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குத் பெறுமதியான பணப்பரிசில்கள் காத்திருக்கின்றன. கீழுள்ள விண்ணப்பப் படிவத்தை நிரப்பி 04 ஆம் பக்கத்திலுள்ள எமது முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முதலாம் இடம் : 7,500/= | இரண்டாம் இடம் : 5,000/= | மூன்றாம் இடம் : 2,500/=

## கட்டுரை, கவிதை, சிறுகதைப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவம்

மாணவர் பெயர் : ..........................................

பாடசாலையின் பெயர் : ..........................................

படிக்கும் தரம் : .................... பிரிவு : ....................

தெரிவுசெய்யும் போட்டி : ..........................................

.................................... ....................................

மாணவர் கையொப்பம் அதிபர் கையொப்பம்

மேலதிகத் தொடர்புகளுக்கு : 071 8628369

# நலம் தரும் வேகநடை





## இதய நோய்கள்

30 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்தால் இதய நோய்க்கான வாய்ப்பை 50 சதவிகிதம் அளவுக்குக் குறைக்கலாம். மேலும், ஆறு புள்ளிகள் வரை இரத்த அழுத்தமும், கொழுப்பும் குறைய உதவுகிறது.

## உடல் பருமன்

தினசரி 20 நிமிடங்கள் நடைப் பயிற்சி செய்தால், ஒரு வருடத்தில் மூன்றரை கிலோ கொழுப்பைக் கரைக்கலாம்.





## சர்க்கரை நோய்

ஓரளவுக்கு உணவுக் கட்டுபாட்டுடன், வாரத்தில் நான்கு - ஐந்து நாட்கள், தினசரி 30 நிமிடங்கள் என்ற அளவுக்கு நடைப்பயிற்சி செய்தால் சர்க்கரை நோய்க்கான வாய்ப்பை 60 சதவிகிதம் அளவுக்குக் குறைக்கலாம்.

## மன அழுத்தம்

நடைப்பயிற்சி செய்வது என் டோர்ஃபின் சுரப்பதைத் தூண்டும். இதனால் ரிலாக்சேஷன் ஏற்படுகிறது. மேலும், மனப்பதற்றம் மற்றும் மன அழுத்தத்துக்கான வாய்ப்பும் இதனால் குறையும்.

## புற்றுநோய்

மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்கள் வாரத்துக்கு மூன்று முதல் ஐந்து மணி நேரமும், ப்ராஸ்டேட் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண்கள் வாரத்துக்கு ஒன்றரை மணி நேரமும் நடைப்பயிற்சி செய்வதன் மூலம் உயிர்வாழ்வதற்கான வாய்ப்பை 50 சதவிகிதமாக அதிகரிக்கலாம்.

ஏ.எச்.ஏ. ஹஸைன் (ஏறாவூர்)



# சவால்களுக்கே சவால்விட்ட சாதனை அரசி




## செல்வி ராகுலநாயகி

இளமையில் வறுமை, ஆயுத வன்முறைகளால் குடும்பத்தில் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் துயரம் மற்றும் எதிர்ப்படக்கூடிய எல்லா சவால்களையும் முறியடிப்பதென்பது ஒரு இலேசுப்பட்ட காரியமல்ல. அதுவும் ஆணாதிக்கமுள்ள பாரம்பரியங்களினூடே பயணித்து சாதனை நிலைநாட்டுவதென்பது ஒரு அசாதாரண விடயம்தான்.

அப்படிப்பட்ட ஒருவரை இந்த இதழில் அறிமுகப் படுத்துவது வாசகர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும் என நம்புகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பகுதி என்பது கடந்தகால ஆயுத முரண்பாடுகளால் சின்னா பின்னப்பட்ட ஒரு பிரதேசம்.

யுத்தத்தின் முன்னரும் யுத்தத்தின் போதும் தற்சமயம் யுத்தத்திற்குப் பின்னரும் கடமையாற்றினார் என்பதால் மட்டும் நாம் அவரை ஒரு சாதனையாளர் என்று கருதவில்லை.

இவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கும் இடம் மட்டக்களப்பு பதுளை வீதியிலுள்ள செங்கலடி. இங்கும் யுத்த அரக்கன் தனது கொடூரத்தைக் காட்டத் தவறவில்லை. செல்வி ராகுலநாயகி வறுமையின் பிடியில் வாழ்ந்தாலும் தனது அன்புக் குடும்பத்திலுள்ள அம்மா, அப்பா, நான்கு அக்காமார்கள், ஒரு அண்ணா ஆகியோருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தவர்.

ஆயினும், யுத்தம் எனும் இந்தக் கொடிய அரக்கனுக்கு எவரும் அன்பாகவும் அமைதியாகவும் ஐக்கியமாகவும் வாழ்வதுபிடிக்காது.

அதனால் ராகுலநாயகியின் குடும்பத்திலும் ஈடு செய்யமுடியாத உயிரிழப்புக்கள். ஆசைக்கோர் ஆண் பிள்ளையாக இருந்த அண்ணா, அன்பைச் சொரிந்து வளர்த்த அம்மா, அமைதியினதும் எளிமையினதும் பிறப்பிடமான அக்கா ஆகிய மூவரையும் தனது பிஞ்சுக் காலத்தில் பறிகொடுத்தார் ராகுலநாயகி.

அதன் பின்னர் அந்தத் துயரத்திலிருந்து ஒருவாறு மீண்டு படிப்பைத் தொடர்ந்தார்.

குடும்ப உறுப்பினர்களைப் பறிகொடுத்த இரண்டாவது ஆண்டில் அதாவது, 1992 இல் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதி சித்தியடைந்து 1995 இல் உயர்தர பரீட்சை எழுதி அதிலும் சித்தியடைந்து 96/97 ஆம் கல்வியாண்டு கலைப்பிரிவில் கிழக்கு பல்கலைக்கழகம் நுழைந்தார். 2000 ஆண்டு பொதுக் கலைமானிப் பட்டம் கிடைத்தது. 2006 இல் பொது



நிருவாகம் முது கலைமானிப் பட்டம். 2009 இல் சமூகவியல் முது கலைமானிப் பட்டம். அதே ஆண்டில் முகாமைத்துவ டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

அதேவேளை 31.03.2003 30.8.2003 வரைக்கும் மட்டக்களப்பு - காயான்குடா கண்ணகி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

பல்கலைக்கழகத்தில் படித்து பட்டதாரியாக வெளியேறியதும் போட்டிப் பரீட்சைகளுக்கு முகம் கொடுத்தால்தான், அதனூடாக உத்தியோகம் ஒன்றினைப் பெறமுடியும் என்ற சிந்தனை அவரிடம் இருந்தது. அதற்கமையவே 2001ஆம் ஆண்டில் இலங்கை நிருவாக சேவைப் பரீட்சை எழுதி அதில் சித்தியடைந்து, 02.09.2003 ஆம் திகதி இலங்கை நிருவாக சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டார்.

தொடர்ந்து ஒரு வருடகாலம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் பயிற்சி பெற்று, இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக நியமனத்தைப் பெற்றுக்கொண்டார்.

01.09.2004 - 06.04.2009 வரை வாகரை உதவிப் பிரதேச செயலாளராகக் கடமைபுரிந்து 07.04.2009 இல் இருந்து இன்றுவரை பிரதேச செயலாளராகப் பதவிவகித்து வருகின்றார்.

21.05.2006 இல் உள்நாட்டு யுத்தம் கிழக்கு மாகாணம் மாவிலாறு பகுதியில் ஆரம்பித்து 19.01.2007 இல் கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதோடு முடிவுக்கு வந்தது.

யுத்தம் இடம்பெற்றபோது திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர், கட்டைப்பறிச்சான், மூதூர், ஈச்சிலம்பற்று பகுதிகளிலிருந்து ஒட்டுமொத்தமான தமிழ் மக்களும் இடம்பெயர்ந்து அருகிலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இதன்போது சுமார் 30,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாகரையில் அகதிகளாக தஞ்சம் தேடினார்கள். அதேவேளை, வாகரைப் பிரதேச மக்களும் வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தது.

எனவே, இக்காலப் பகுதியில் அயலிலுள்ள திருகோணமலை மாவட்டத்திலிருந்து வந்து வாகரையில் அடைக்கலம் புகுந்த மக்களுக்கும் தொடர்பு அறுந்து போயிருந்த வாகரைப் பிரதேச மக்களுக்கும் நிவாரண உதவிகளில் ஈடுபட்டு அவர்களைத் தேற்றவேண்டியதாயிருந்தது.இந்த இடைப்பட்ட காலத்தில்தான் சுனாமி அனர்த்தம் நிகழ்ந்தது.

யுத்தம் - இடப்பெயர்வு, மீள் குடியேற்றம் புனரமைப்பு, மீள் கட்டுமானம், இவ்வாறு தொடரான பணிகளில் உடல் சோர்ந்த வேளையிலும் கூட மனம் சலிக்காது 26.12.2004 அன்றிலிருந்து இன்றுவரை வாகரையின் வளர்ச்சிக்காக பாடுபட்டு வருகின்றார். இதற்கிடையே இவரது தன்னலம் கருதாத சேவைகளுக்காக சிறந்த நிருவாக சேவை அதிகாரி என அடையாளம் கண்டு இவருக்கு பாராட்டும் கௌரவமும் கிடைத்துள்ளது.

யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றியமைக்காக - இலங்கை றோட்டறிக் கழக 50 ஆவது ஆண்டு நிகழ்வில் 10.04.2010 அன்று மட்டக்களப்பு கிளையினால் இவர் பாராட்டப்பட்டார்.

பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2009/2010ஆம் ஆண்டுக்காக நாடாத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில், மாவட்ட மட்டத்தில் வாகரைப் பிரதேச செயலகத்தினை 2ஆம் இடத்திற்கு தரம் உயர்த்தி சான்றுபெற்றார்.

மட்டக்களப்பு - அம்பாறை அரச சார்பற்ற நிறுவனங்களால் 2013 ஆம் ஆண்டு மக்களுக்கு சேவை வழங்கும் அரசதுறையில் சேவையாற்றும் பெண் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

உற்பத்தித்திறன் செயலகத்தால் நடாத்தப்படும் தேசிய உற்பத்தி திறன் விருது நிகழ்வில் பங்கேற்று 2012/2013ஆம் ஆண்டுக்கான திறமை பாராட்டைப் (Special Commendation) பெற்றார்.

கலை நிகழ்வு தொடர்பாக-மட்டக்களப்பு மறைமாவட்ட இவ் ஆண்டுக்கான மனித உரிமைகள் தொனிப்பொருள் நிகழ்வில் - சமூகத் தொடர்பு நிலையத்தால் நடாத்தப்பட்ட குறும்பட போட்டி நிகழ்வில் 1ஆம். 3ஆம் இடங்களைப் பெற்ற படங்களை இயக்கியமைக்கான பாராட்டும் கௌரவிப்பும் இவருக்குக் கிடைத்தது.

நீதி அரசியலமைப்பு, இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சும் தேசிய ஒருமைப்பாட்டு செயற்திட்டப் பணியகமும் இணைந்து நடாத்திய வானொலி நாடகப் பிரதி போட்டியில் நட்பின் பெருமை என்ற நாடகத்துக்காக 1998 இல் இவர் பரிசுபெற்றார்.

இத்தகைய ஆற்றல்களை இவர் அடைந்துகொள்வதற்காக ராகுலநாயகி பெற்றுக்கொண்ட வெளிநாட்டுப் பயிற்சிகளும் இவருக்குக் கைகொடுத்திருக்கின்றன.

1. இந்தியா Federal Governance in Plural Societies" Hamdard University, New Delhi. India வில் 09.04.2007 - 28.04.2007 வரை இடம்பெற்ற பயிற்சிநெறியில் கலந்துகொண்டார்.
2. தாய்லாந்து Coastal Zone Restoration and Sustainable Management என்ற தலைப்பில் 30.03.2012 -06.04.2012 வரை தாய்லாந்தில் இடம்பெற்ற பயிற்சியில் கலந்து கொண்டார்.

வாகரைப் பிரதேசம் முற்றாக பின்தங்கிய பிரதேசம் என்பதால் இங்கு அடக்கு முறை, சுரண்டல்கள், அடிமைத்தனம், வர்க்கமுறை என்று எல்லாமே கோலோச்சியிருந்தது.

எனினும், தற்போது இந்த மக்கள் மத்தியில் மாற்றம் உள்வாங்கப்பட்டுள்ளது. கல்வியினூடாக ஏற்படுகின்ற புரட்சி, மறுமலர்ச்சி என்பவற்றால்தான் தற்போதுள்ள வாகரையை வாழவைக்க முடியும் இதற்கு அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு உதவும் என்று பிரதேச செயலாளர் செல்வி ராகுலநாயகி நம்புகின்றார்.

இவரை இம்மாத மங்கையாக தெரிவு செய்ததில் ஒளிஅரசி பெருமையும் மகிழ்வும் கொள்கின்றது.

✍ திருமதி. ஜெ.குகநேசன் (சிரேஷ்ட ஆசிரியர், கொழும்பு விவேகானந்தா கல்லூரி)

# இலங்கைப் பொருளாதாரத்தில் சனத்தொகையும் வேலையின்மையும்

## அண்மைக்கால பொருளாதார தரவுகளுடன் ஓர் பார்வை

**க.பொ.த. உயர்தர பொருளியல், பல்கலை வணிக, பொருளியல் மாணவர்களுக்கும் பொருளாதார ஆர்வலர்களுக்கும் பயன்மிக்கது.**

ஒரு நாட்டின் சனத்தொகையானது, ஊழிய நிரம்பல் ஊழியத்திற்கான கேள்வியை விட அதிகமாகக் காணப்படும்போது பிரச்சினைக்குரியதாக மாறும். இங்கு ஊழிய நிரம்பல், சனத்தொகை வளர்ச்சியுடன் தொடர்புபட்டதாகவும் ஊழிய கேள்வி நாட்டின் பொருளாதாரத்துடன் தொடர்புபட்டதாகவும் காணப்படுகிறது. சனத்தொகை வளர்ச்சிக்கேற்ப பொருளாதாரம் வளர்ச்சி அடையாதபோது வேலையின்மை, கீழுழைப்பு, வாழ்க்கைத்தரக் குறைவு, தொடர்ச்சியான வறுமை என்பவற்றுக்கு நாடு உள்ளாகும் நிலை ஏற்படும்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை வளர்ச்சியானது நுகர்வை அதிகரிப்பதன்மூலம் சேமிப்பையும் முதலீட்டையும் குறைவடையச் செய்து பொருளாதார அபிவிருத்தியை தாமதப்படுத்துகின்றது. சனத்தொகை வளர்ச்சியும் அதன் கட்டமைப்பு மாற்றங்களும் இலங்கையில் ஏற்பட்ட பல கட்டமைப்பு மற்றும் நிறுவன ரீதியான மாற்றங்களுக்குக் காரணமாக இருந்துள்ளன.

இலங்கையின் சனத்தொகையானது 1948இல் 6.7 மில்லியன், 2014இல் 20.675 மில்லியனாக அதிகரித்துள்ளது. இவ் வளர்ச்சி 7 தசாப்தகாலத்தில் மொத்த சனத்தொகையில் மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது. ஆனால், வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் 2014இல் 0.9 வீழ்ச்சியே என்றாலும் எமது நாட்டில் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார விரிவாக்கம், வேலைவாய்ப்பு உருவாக்கம் போதாமையால் சனத்தொகை வளர்ச்சி நாட்டின் முக்கிய பிரச்சினையாகவே உள்ளது.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை சனத்தொகை அதிகரிப்புக்கு இயற்கை அதிகரிப்பும், குடிவரவில் ஏற்பட்ட அதிகரிப்பும் காரணமாகும். 1950 - 1970களில்நீடித்தஉயர்இயற்கைஅதிகரிப்புஏற்பட்டமைக்குக் காரணம், இறப்பு வீதத்தில் ஏற்பட்ட கடும் வீழ்ச்சியாகும். இவ் வீழ்ச்சிக்கு மலேரியாவுக்கு எதிராக டி.டி.ரி. விசிறல், மேம்பட்ட பொதுச்சுகாதாரம், உணவு மானியம் என்பன அதற்கான காரணமாகும். 1960இன் பின்பு பிறப்பு வீதத்திலும் வீழ்ச்சி கண்டது. அதற்குப் பிரதான காரணம், பெண் திருமண வயது பின்தள்ளியமை, பெண்களின் உயர்கல்வி வாய்ப்பு, நவீன துறையில் பெண் வேலைவாய்ப்பு பெற்றமையாகும். அதன் பின்பு 19ஆம் நூற்றாண்டு, 20ஆம் நூற்றாண்டுகளில் குடிவரவு ஏற்பட்டது. 1948இல் குடிவரவு, குடியகல்வு சட்டம் மூலம் குடிவரவின் வீதம் குறைந்தது. இது 1950 குடியகல்விற்கு வழி வகுத்தது. 1964இல் இலங்கை - இந்திய சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கை. பெருந்தோட்ட இந்திய வம்சாவளி மக்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். 1975இல் இலங்கையர் மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு தேடி இடம்பெயர்ந்தமையும் ஆகும். 1983இல் 1,01,411 பேர் புலம்பெயர்ந்தனர் என அறிக்கை கூறுகின்றது. அதன் பின்பு 1983இன் பின்னர் வடக்கு, கிழக்கு யுத்த நிலைமையால் மேற்கு நாடுகளை நோக்கிய புலம்பெயர்வு தொடர்ந்து அதிகரித்தது அதன் பின்பு 2009இல் யுத்த முடிவு பெற்றாலும் புலம்பெயர்வில் பெருமாற்றம் இல்லை.

அடுத்து, இலங்கையின் பால்நிலை வீதம் என்பதை நோக்கின் 1946இல் 100 பெண்களுக்கான ஆண்களின் எண்ணிக்கை 113. அது படிப்படியாகக் குறைவுபெற்று 2011இல் 100 பெண்களுக்கான ஆண் எண்ணிக்கை 100 எனவும் எதிர்வு கூறலில் 2021இல் 100 பெண்களுக்கு ஆண் 99 எனவும் கணிக்கப்பட்டுள்ளது. பெண் மாறாது இருக்கும். ஆண்கள் குறைவு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் ஆண்களைவிட பெண்கள் சதவீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. 1953 - 2012 வரை நோக்கின் ஆண் வீதாசாரம் 51.7% இருந்து 48.5% வீழ்ச்சி. பெண் வீதாசாரம் 48.3% இருந்து 51.5% அதிகரித்துள்ளது. இவ்வாறு பெண் வீதாசாரம் அதிகரிக்கக் காரணமாக பெண் ஆயுட்காலம் அதிகரித்துச் செல்வதாகும். 2007இல் ஆண் ஆயுட்காலம் 70.3 பெண் ஆயுட்காலம் 77.9. 2014இல் ஆண் 10.033 மில்லியன் பெண் 10.642 மில்லியன் ஆகும்.

சனத்தொகையில் வயது கட்டமைப்பை நோக்கின் இளம்பராயத்தினர் வீதம் வீழ்ச்சியடைந்து செல்வதையும் முதியவர் அதிகரிப்பதையும் அறிய முடிகிறது.1963 - 1912 சிறுவர்களின் வீதம் மிகக் கடுமையான வீழ்ச்சிகண்டுள்ளது. 55 வயதுக்கு மேற்பட்டோர் வீதம் அதிகரித்துள்ளது.

தங்கியிருக்கும் வீதத்தை நோக்கின் தொழில்

செய்வோர் 15 - 64 வயதிற்கு இடைப்பட்டோரா கக் காணப்பட்ட தங்கியிருப்போர் எண்ணிக்கை 15இற்கு கீழும் 65 வயதுக்கு மேலும் உள்ளனர். தங்கியிருப்போர் வீதத்தை நோக்கும்போது 1946 இல் 68.6%. தங்கியிருப்போர் காணப்பட 2011இல் 46.4% வீழ்ச்சியும், 2014இல் 49.5% அதிகரிக்கும் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. தங்கியிருப்போர் அதிகரிக்க பொருளாதாரச் செலவுகளையும் சமூக செலவுகளையும் அதிகரிக்கவேண்டிய கட்டாய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படும். இதனால் சேமிப்பு, முதலீடு, பொருளாதார வளர்ச்சி பின்தள்ளப்படும்.

இலங்கையின் வேலைவாய்ப்பு வளர்ச்சியில் தொடர்ந்து பதவிக்கு வந்த அரசாங்கம் அமுல்படுத்தும் பொருளாதாரக் கொள்கைகள் உபாயங்கள் மூலமே ஆராயவேண்டியுள்ளது. 1959 - 1968களில் பாரிய கைத்தொழில், சிறுகைத்தொழில் விரிவாக்கம், விவசாய அபிவிருத்தி ஊடாக வேலை வாய்ப்புகளை உருவாக்க கவனம் செலுத்தப்பட்டாலும் அரச செலவின் அதிகரிப்பு, தனியார்துறையின் தேக்கநிலை, வெளிநாட்டு ஒதுக்கு வீழ்ச்சி காரணமாக வெற்றியளிக்கவில்லை. அதன்பின்பு 1972 - 76இல் 5 ஆண்டுத் திட்டத்தில் விவசாயம், கைத்தொழில் நிர்மாணம் மற்றும் சேவைத்துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்க கவனம் செலுத்தினாலும் வெளிநாட்டுக் காரணிகளால் தோல்வியைத் தழுவின. 1973இல் 24% வரை வேலைவாய்ப்பு இன்மை காணப்பட்டது. அதில் 50% மேற்பட்டோர் விவசாயம், வேட்டையாடல், காட்டுத்தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டனர். 1977 இன் பின்பு கைத்தொழில் துறையின் பங்களிப்பு அதிகரித்தது. தயாரிப்பு, நிர்மாணத்துறை, சேவைத்துறை அதிகரிக்க விவசாயத்துறை படிப்படியாகக் குறைவடைந்தது. 2011இன் தரவுப்படி சேவைத்துறையானது முதலாம் இடத்தையும், விவசாயம் 2ஆம் இடத்தையும், கைத்தொழில் துறை 3ஆம் இடத்தையும் வகித்தது.

2011இல் தயாரிப்புத்துறை வீழ்ச்சிகண்டது. இதற்குக் காரணம், பல்நார் உடன்படிக்கை, ஜி.எஸ்.பி. வரிச்சலுகை என்பனவற்றின் இழப்பாகும். எனினும், சேவைத்துறை ஓர் ஆரோக்கிய போக்கைக் காட்டியது.

ஊழியப்படையில் ஆண் பங்கு 1960களில் அதிகமாகவும், 1977இன் பின் சேவைத்துறை விரிவாக்கம், தயாரிப்புத்துறை பங்களிப்பு, திடீர் வளர்ச்சி ஏற்பட்டது. பெண் பங்குபற்றும் வீதத்தை அதிகரித்தது. 2011இல் ஆண் ஆதிக்கமே கூடிய பங்கு காணப்படுகிறது. இலங்கையின் தொழிலாளர் வளத்தை உரிய முறையில் பயன்படுத்தினால் பொருளாதார வளர்ச்சி, அதன் மூலம் வறுமை ஒழிப்பு, சமூக முரண்பாடுகளையும் நீக்கலாம்.

ஆரம்பத்தில் இங்கு இரட்டை இலக்க கொள்கை (Double digit) வேலையின்மையை அனுபவித்தது. 1977இல் திறந்த பொருளாதாரக் கொள்கை வேலையின்மையில் தொடர்ச்சியான வீழ்ச்சியையே காட்டுகின்றது. இதனை நீக்க அரசு ஏற்றுமதியை நோக்கியதாகவும், உலக நாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டதாகவும் காணப்பட்டது. இதனால் பாரிய அதிகரிப்புக்கு வழிவகுத்தது. அந்நிய செலாவணி, சேவை அசைவுக் கட்டுப்பாடு நீக்கம், சுற்றுலாத்துறையின் விரிவாக்கம், நாணய மதிப்பிறக்கம், வடக்கு யுத்தம் என்பதனால் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றனர்.

இத்துடன், 1983இன் பின் இராணுவ விரிவாக்கம் தென் பகுதியினருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்தது. இதனால் வேலையின்மை வீழ்ச்சிகண்டது. அடுத்து ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம், மகாவலி அபிவிருத்தித் திட்டம், வீடமைப்புத் திட்டம், 200 ஆடைத்தொழிற்சாலைகள் வேலையின்மை வீழ்ச்சிக்கு காரணமாகின.

விவசாயம் குறிப்பிட்ட தொழிலாளரையே உள்வாங்கக் கூடியது. ஆனால், கைத்தொழில், சேவைத்துறை ஆண், பெண், உயர்கல்வியுடையோர், இல்லாதோர், நுட்பத்திறன் உடையோர், இல்லாதோர் என அதிகளவு உள்ளீர்ப்பு செய்யக்கூடியது. இதனால் வேலையின்மை வீழ்ச்சி கண்டது..எனினும், 14-25 வயதுக்கு இடைப்பட்டோர் வேலையின்மை இன்று நிலவுவதும் உண்மை பொருளாதாரத்தில் பேரிழப்பையே சந்திக்க நேரிடும்.

இலங்கையில் இவ்வாறு வேலையின்மை காணப்பட அரசாங்க கல்விக் கொள்கையே காரணம் எனவும், தொழில் தேடுவோரின் விருப்பத்துக்கும் கிடைக்கக்கூடிய தொழில்களுக்கும் இடையே உள்ள பொருத்தம் இன்மையே காரணமாகும். பதுமாகும். தொழிற்சந்தை தேவைகளைக் கருத்திற்கொள்ளாத இலவசக் கல்வியே காரணம் என Dickens and Lank சுட்டிக்காட்டியது. தொழில் சார் திகைமையுடைய நுட்பத்திறன் வாய்ந்த நபர்களை உருவாக்கவில்லை.

கல்வித் தகமையுடைய எண்ணிக்கை அரச வேலைவாய்ப்பு இயல்அளவை விட அதிகம். கல்வித்தகமையுடையோர்விவசாய வேலைவாய்ப்பில் விருப்பமின்மை. இதனால் ஏற்றுக்கொள்ளப்படும். தொழில் கிடைக்கும் வரை வேலையற்றவர்களாகவே இருக்கின்றனர்.

இதுவே இன்றைய பொருளாதாரப் பிரச்சினைக்கு வழிவகுத்துள்ளது.

# கோவில் சிற்பங்களும் அதன் வளர்ச்சிகளும்

விக்கிரம் என்பதனை வி+கிரகம் எனப் பிரிக்கலாம். வி - விசேஷமான கிரகம் - இடம். அதாவது, இறைவன் விசேடமாக இருக்கும் இடம் எனப் பொருள்படும். அண்டம் முழுவதிலும் இறைவன் பொதுவாகவும், ஆலய விக்கிரகங்களில் அவன் சிறப்பாகவும் விளங்குபவன் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

கோவில் சிற்பங்களை 'தெய்வத் திருமேனிகள்' என்று அழைப்பார்கள். அவ்வாறான சிற்பங்களின் வளர்ச்சிப் போக்கினை இனி நாம் ஆராய்வோம்.

## 1. மண் சிற்பங்கள்

இதனை 'மண்ணீடு' என்று அழைத்தனர். மண் சிற்பங்கள் செய்பவர்கள் 'மண்ணீட்டாளர்கள்' என்று அழைக்கப்பட்டனர். மண் சிற் பங்கள் பற்றிய அகழ்வு ஆய்வுகளில் இந்தியாவில் காவிரிப்பூம்பட்டினம், உறையூர் கொற்கை... போன்ற இடங்களின் அகழ்வாய்வுகளில் பண்டைய சுடுமண் பாவைகள் கிடைக் கப்பெற்றுள்ளன. இச்சுடு மண் சிற் பங்கள் பழைய காலம் தொடக்கம் இன்றுவரை காணப்படுகின்றன என்பதை இந்த ஆய்வுகள் நிருபித்துள்ளன. இன்றும் நவராத்திரி விழாக்களில் சுடு மண் பாவைகள் கொலுவில் இடம்பிடிக்கின்றன.

## 2. சுதையிலான உருவங்கள்

சுண்ணாம்பை நன்கு அரைத்து கரும்புச்சாறு, நெற்கனிச்சாறு, வெல்லச் சாறு முதலியன ஊற்றி அரைத்து வஜ்ஜிரம் போல் செய்து அவற்றைக் கொண்டு சுதை உருவம் செய்வது பண்டைய மரபு. பல்லவன் காலத்தில் செங்கல் கோவிலில் சுதை உருவங்கள் ஏராளமாகச் செதுக்கிவைக்கப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகின்றது.

## 3. கற்சிற்பங்கள்

பல்லவர் காலத்தில் சிற்பங்கள் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளன. அகழ்வின்போது பல்லவர் கால சிற்பங்கள் ஏராளமாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. கட்டடங்களை அழகு செய்யவும் அக்காலத்தில் கற்சிற்பங்கள் செதுக்கப்பட்டன. அவற்றை இன்றும் மாமல்லபுரம், நாராபுரப் பகுதிகளில் காணலாம். பல்லவர் போல பாண்டி மன்னர்களும் குகைக் கோவில் சிற் பங்களைச் செய்துள்ளனர் என ஆய்வுகள் கூறுகின்றன.

## 4. செப்புத் திருமேனிகள்

செப்புத் திருமேனிகள் அலங்கரிக்கப்பட்டு வீதி உலா வர எடுத்துச் செல்லும் வழக்கம் முன்னைய காலத்திலும் காணப்பட்டது. இதற்கு உதாரணமாக ஆதிச்ச நல்லூர் என்ற இடத்தின் அகழ்வாய்வில் 'அன்னை தெய்வம்' மிகவும் தொன்மையான செப்புத் திருமேனியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அடுத் ததாக காவிரிப்பூம்பட்டினத்தில் 'மைத்ரேயா' உருவம் செப்புத் திருமேனியாகக் காணப்பட்டது. அவ்வுருவம் இன்று சென்னை மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்லவர் காலத்திலும் செப்புத் திருமேனிகள் காணப்பட்டன. சோழர் காலத்தில் கண்டராதித்த சோழர் சிறந்த சிவபக்தர். அவரது தேவியின் பெயர் செம்பியன் மாதேவியார். இவர் பல கோவில்களுக்குப் பொன், வெள்ளி, செப்புத் திருமேனிகள் செய்து கொடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

## 5. தேன்மெழுகு முறை

உருவை தேன் மெழுகினால் செய்வர். மெழுகினாலான உருவில் மேல் புற்றுமண் பூசி நிழலில் உலரவைப்பர். இதன் பின்புறத்தே தலையிலும், இடையிலும், அடியிலும் துளைகள் இருக்கும்.

இது நன்கு உலர்ந்த பின்னர் தீயில் இடுவர். அப்பொழுது மெழுகு உருகி வெளியேறும். மண்ணின் உள்ளே மெழுகிருந்த பகுதி அச்சாக நிற்கும். பெரும் பகுதி செப்பும் மிகச் சிறு பகுதியளவில் பித்தளை, வெள்ளி, வெண்கலம், தங்கம் கலந்து உருக்கி அச்சின் நடுவில் உள்ள துளையூடாக ஊற்றுவர். தலை அடியிலுள்ள துளைகளின வழியாக உலோகக் குழம்பு சென்று அச்சு முழுவதும் உலோகம் பரவும்.

அதன்பின் அதனை குளிர வைப்பர். ஊற்றிய உலோகம் கெட்டியாகும். பின் அச்சை உடைத்து வார்ப்பை வெளியில் எடுப்பார்கள். அதனை சிற்றுளியால் அழகிய உருவத்தைச் செதுக்குவார்கள். இது தேன் மெழுகு ஆகும்.

இது 5 உலோகக் கலவை கொண்டதனால் பஞ்சலோகம் எனவும் கூறுவர். இதன்பின் அதனை உரிய இடத்தில் அமைக்கும்போது இரத்தினக்கற்கள் பீடத்தில் இட்டு பொருத்துவர். இதனை இரத்தின தியாசம் செய்தல் என்பர். அதன் பின்பு கண் திறப்பு இடம்பெறும்.

## 6. கல் விக்கிரகம்

கோயில்களில் மூலஸ்தான இறைவனை கல்லினாலேயே செய்வர். ஏனெனில், முதன்முதலில் இறைவனின் படைப்பில் உருவானது கல்தான். கல் பின்பு மண் ஆனது. கல்லில் ஒலி, ஒளி, ஈரம், காற்று, பூமி ஆகிய பஞ்சபூதங்களும் அடங்குகின்றன. எனவே, தெய்வத் திருமேனிகள் கல்லால் செய்யப்படும். இறைவன் ஜோதி வடிவானவன். கல்லில் நெருப்பு உண்டு. கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் நெருப்பு வரும். இக்கல்லில் விக்கிரகம் அமைத்து மந்திர சக்தியோடு நட்டபின் அதன் அடியில் இடப்படும் மூலக் கருப்பொருட்களின் அணுக்கள், சக்திகளை ஈர்த்துச் செல்லப்படும். மந்திரங்களைத் தாங்கித் தாங்கி ஒலிதாங்கியாக மாறி பேசுபவை எதிரொலித்து நட்டக் கல் பேசும் சக்தி, அருள் வழங்கும் சக்தியைப் பெறுகிறது.

ஓடும் மனதை ஒடுக்க விக்கிரக ஆராதனை துணை புரிகின்றது. விக்கிரகங்களின் தோற்றம், ஆயுதம், வாகனம் இவற்றின் மூலமாக இறைவனின் அருட்குணங்களை இறைபக்தர்கள் அறிய துணை புரிகின்றது.

## 7. மூர்த்திக்கு சானிதயம் கொடுத்தல்

ஒரு மோட்டார் வண்டியை எடுத்துக் கொண்டால் அதில் உடல், யந்திரம் என இரு பகுதிகள் உள்ளன. இதில் யந்திரமின்றி உடல் தனியே இயங்காது. உடல் இன்றி யந்திரம் இயங்கினாலும் இரண்டும் ஒன்றுசேர்ந்தால்தான் நகரும். யந்திரமே நகர உதவும் சாதனம். அதேபோல பிம்பங்களுக்கும் யந்திரங்களுக்கும் இணைப்பு உள்ளது.ஆலயத்தில் யந்திரம் அமைத்து அதன் மீதே திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்படும். ஆலயத்தின் யந்திரங்கள் அருட்கருவிகளாகும். யந்திரம் இல்லாத உருவம் வெறும் சிலைகளே. யந்திரம் உயிர்நாடி. இது பூஜைக்கு மிக இன்றியமையாதது. யந்திரம் உலோகத் தகட்டில் வரையும்போது அது சாதாரண சடங்குப்பொருளாகும். பின்பு மந்திரம், முத்திரைப் பாவனை, கிரியைகள் மூலம் சிறிது சிறிதாக அருட்கருவியாவதற்கான பக்குவத்தைப் பெற்றுவிடும்.

இதனை 'சித்பிரகாச ஆவாகனம்' என்பர். முடிவில் அங்கு பூரண உருவேறி யந்திர ஸ்தாபனமும், பிராணப் பிரதிஷ்டையும் செய்யப்படும் போது அது முழுவதும் இறைவனுக்குரிய அருட்கருவியாக மாறி கோடி சூரிய பிரகாசம் பொருந்திய அனுக்கிரக சக் தியை நாற்புறமும் இரவும் பகலும் இடைவிடாது பரப்பிவரும்.(தொடர்ந்து வழிபாடு இல்லாத இயந்திரம் சக்தியை இழந்துவிடும்).

விக்கிர பிரதிஷ்டையின் முன்பு மந்திரத் தகடு, பொன், வெள்ளி, வைரம் இடப்பட்டு மூடப்படுகின்றன. பின்பு விக்கிரகத்தை அமைத்து மூலிகை மருந்துகளை கெட்டித்து மந்திரம் கூறி பிரதிஷ்டை செய்யப்படும். இதனால் உலோகசக்தி, மனோ சக்தி, யந்திர சக்தி, ஆன்ம சக்தி ஆகிய பல சக்திகளால் கல் விக்கிரகம் தெய்வமாகும். இதனால் அந்த விக்கிரகம் ஈர்ப்புச் சக்தி, உயிர்ப்புச் சக்தி, கவர்ச்சி சக்தி பெறும். சர்வ வியாபியான பரப்பிரம்மத்தை கோயிலாகிய பசுவின் கர்ப்பக்கிரகமான மடியில் இருந்து விக்கிரமாகிய காம்பின் மூலமாக பாலாகிய தெய்வீக சக்தியை நாம் பெறமுடியும் - என மகரிஷிகள் கூறுவர்.

## கடந்த மாத வினாத்தாள் - 1இல் 60 புள்ளிக்ளுக்கு மேல் பெற்று பாராட்டுப் பெறும் தரம்-5 மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஆ.சகானா | கொழும்பு - 13 | 88 |
| 02. ச.ஜஸ்மிதன் | சோலியக்கட்டை, மல்லாகம், யாழ்ப்பாணம். | 83 |
| 03. அ.அபிநாத் | வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் | 78 |
| 04. ந.மர்வாத் | காத்தான்குடி | 75 |
| 05. வி.லிஷானி | வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் | 70 |
| 06. சு.யாதவன் | கொழும்பு - 15 | 70 |
| 07. பா.வித்தகன் | வ/வவுனியா தமிழ் மத்திய மாகாவித்தியாலயம் | 68 |
| 08. செ.டிமான் | வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் | 65 |
| 09. ந.நிஷேவிதா | கொழும்பு - 13 | 65 |
| 10. அ.தரணிகன் | வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் | 63 |
| 11. வி.அட்சயன் | வ/வவுனியா தமிழ் மத்திய மாகாவித்தியாலயம் | 63 |
| 12. பா.சபிஷன் | வ/வவுனியா தமிழ் மத்திய மாகாவித்தியாலயம் | 63 |
| 13. ஆ.து.கு.நிஸ்மா | ஹத்தாவலை,வெலிமடை | 63 |
| 14. நஹார்.முஹம்மது முப்தி | பட்டாணிச்சூர்,வவுனியா | 63 |
| 15. ஜெ.ஸ்ருதி | யாழ்ப்பாணம். | 63 |
| 16. நி.யரோமி | வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் | 60 |
| 17. வி.மனோஜ்காந் | தெமோதர. | 60 |

**திருத்தப்பட்ட வினாத்தாள் தொடர்பான சந்தேகங்களை தெழிவுபடுத்துவதற்கு 0716850005இற்கு தொடர்பு கொள்ளவும்.**

**மாதம் ஒரு முறை தேசிய ரீதியான திருத்தற் சேவையுடன் உங்கள் பிள்ளைகளின் (2016 ஒகஸ்ட்) பரீட்சைப் பெறுபேற்று அடைவினை அறிந்துகொள்வதற்கு ஒளியரசி வழங்கும் தனித்துவச் செயற்றிட்டம்**

**இதன் நன்மைகள்**

01. ஆர்வமுடைய பெற்றோர்கள் இவ் வினாத்தாளை (வெட்டி எடுத்து) நேரம் கணித்து மாணவர்களைச் சுயமாக எழுதச் செய்து எமது மூன்றாம் பக்கத்தில் உள்ள கொழும்பு முகவரிக்கு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ் வினாத்தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உரியவர்களின் முகவரிக்கு (புள்ளியிடல் திட்டத்துடன்) தபால் இடப்படும்.
02. ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தால் தேசிய ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களின் பெயர் விபரங்கள் ஒளியரசி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டு பாராட்டி வாழ்த்தப்படும்.
03. இவ் வினாத்தாள் வடமாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம், மேல்மாகாணம் ஆகிய பிரதேசங்களின் முன்னணி இளம் ஆசிரியர்களினால் புதிதாக ஒளியரசிக்காக தயாரிக்கப்பட்டதாகும். அத்துடன் உரிய ஆசிரியர்களுடன் தொலைபேசியூடாக தொடர்புகொண்டு சந்தேகங்களைத் தெளிவுபடுத்தும் வசதி **(37ஆம் பக்கத்தில் உள்ள போட்டிக்கான கூப்பனை பயன்படுத்துவது அவசியமாகும். அக் கூப்பனில் போட்டிக்கான தலைப்பு எனும் வெற்றிடத்தில் தரம் 5 பரீட்சைத் தொடர் என எழுதவும்.)**

குறிப்பு: இவ்வினாத்தாள் ஒளிஅரசிக்கென பிரத்தியேகமாக தயாரித்து பெறப்பட்டது. இதனை பிரதி எடுத்தலோ மறு பதிப்பு செய்தலோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

பெயர்: - .............................................. பாடசாலை: - ..............................................

# தரம் 5 விசேட மாதிரி வினாத்தாள் 2016

**வினாத்தாள் II** **நேரம் : 1.15 நிமிடம்**

**01. பின்வரும் பாடலை வாசித்து (1) - (6) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

01

கடலின் மீது செல்லும் கப்பல்
பார், தம்பி, பார் — அதைக்
காணப் பலர் வருவதையே
பார், தம்பி, பார்.
'தடத' டென்று அலைகள் வந்து
பார், தம்பி, பார் — காலைத்
தழுவி விட்டுப் போவதையே
பார், தம்பி, பார்.

02

சங்கும் நல்ல கிளிஞ்சல்களும்
பார், தம்பி, பார் — இங்கே
சரள மாகக் கிடைக்குதடா
பார், தம்பி, பார்.
பொங்கு கின்ற பாலினைப்போல்
பார், தம்பி, பார் — இங்கு
தங்கி நிற்கும் நுரையுமுண்டு
பார், தம்பி, பார்.

1. இப்பாட்டில் சரளமாகக் கிடைப்பவை எவை என கூறப்பட்டுள்ளது?
   ..............................................................................................
2. மடக்கேறு உள்ள சொல்லைத் தெரிந்து எழுதுக? ..............................................
3. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமானத்தை எழுதுக? ..............................................
4. கடல் என்பதன் ஒத்த கருத்துச் சொல் ஒன்று எழுதுக? ..............................................
5. இப்பாடலில் வந்துள்ள இரட்டைக்கிளவிச் சொல் ஒன்று எழுதுக? ..............................................
6. இப்பாடலில் வந்துள்ள எதிர்க்கருத்துச் சோடிச் சொற்களை எழுதுக? ..............................................

02. (அ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

1. தொழிலாளர்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள .............................................. அருந்தினர்
   (இளனீர், இளநீர்)
2. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ..............................................வியாபாரம் களைகட்டியது.
   (புடைவை, புடவை)
3. வீதியின் இரு மருங்கிலும் வானுயர்ந்த .............................................. காட்சியளித்தன.
   (கட்டிடங்கள், கட்டடங்கள்)

(ஆ) பின்வரும் தொடருக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1. கோட்டையைச் சுற்றி வெட்டப்படும் ஆழமான பகுதி ..............................

2. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா ..............................

(03) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.

1. Happy New Year .............................. 2. I am reading a book ..............................

(04) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

நாங்கள் பாடசாலைக்குச் செல்வோம். ..............................

(05) பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அவ் எழுத்தை வெற்றிடத்தில் எழுதுக.

1. Tab ........ e 2. Prin ......... ipal

(06) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1. உங்கள் நலம் எப்படி? ..............................

(07) பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக

1. ஓயாகே பாசலே நம மொக்கத? ..............................

(08) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்புக்களிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

1. தமிழ் மொழியில் உள்ள உயிர் மெய் எழுத்துக்கள் .............................. ஆகும் (12/18/216)

2. கணினியின் தந்தை .............................. (தோமஸ் அல்வா எடிசன்/ சார்லஸ் பபேஜ்/ ரைட்சகோதரர்கள்) ஆவார்.

**09 - 11 வரையுள்ள வினாக்களில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக**

(09) கல்லைச் சிற்பி கண்டனன்

கண்ணைக் கவரும் ..............................

இக் கவிதையின் அடுத்த சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.

(10) நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்

.............................. காணுமே - அல்லாத

இக்கவிதையின் இடைவெளியில் வரவேண்டியதைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

(11) அம்மா இங்கே வாருங்கள் என்ற வாக்கியத்தை சரியாக நிறுத்தற் குறிகளை இட்டு மீண்டும் எழுதுக.

..............................

(12) பின்வரும் சொற்களை கருத்துள்ள வகையில் ஒழுங்குபடுத்துக.

ஓயாது / கொண்டிருந்தன / அலைகள் / இரைந்து / கடல்

..............................

**13 - 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான சொல்லை தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.**

(13) நானும் அவனும் மைதானத்திற்குச் .............................. (சென்றேன் / சென்றோம்)

(14) நீரில் மீன்கள் இலாவகமாகச் சுற்றித் .............................. (திரிந்தன / திரிந்தது)

(15) அவர்கள் போட்டியில் பங்குபறறச் .............................. (சென்றார்கள் / சென்றனர்)

(16) **'நாம் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம்'** என்னும் தலைப்பில் 3வாக்கியம் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறவேண்டும் எழுவாய் - பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.

01 ..............................

.............................................................................................................................................

02 .........................................................................................................................................

.............................................................................................................................................

03. .........................................................................................................................................

.............................................................................................................................................


(17) 34150 என்னும் எண்ணை எழுத்துக்களில் எழுதுக?

.............................................................................................................................................

(18) இவ் செய்கையில் வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டிய பெறுமானங்களை இடுக.

$$\begin{array}{r} 4\ \square\ 3 \\ -\ \square\ 2\ \square \\ \hline 1\ \ 5\ \ 8 \end{array}$$

(19) இவ் உருவில் நிழற்றப்படாத பகுதியை பின்னத்தில் எழுதுக? .............................................



(20) நிசாம் காலை 6.50க்கு வழமையாக பாடசாலைக்கு வருகை தருவான். ஒரு நாள் அவன் 15 நிமிடங்கள் பின்னரே வருகை தந்திருந்தான் எனின், அவன் பாடசாலைக்கு வருகை தந்த நேரம் யாது?

.............................................................................................................................................

(21) பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.


| இலக்கம் | பொருள் | அளவு | ஒன்றின் விலை | மொத்தப் பணம் |
|---|---|---|---|---|
| 01 | அரிசி | 2kg | 65.00 | |
| 02 | மா | 1/2kg | 97.00 | |
| 03 | லக்ஸ் | 4 | 32.00 | |
| செலுத்த வேண்டிய மொத்தப் பணம் | | | | |

(22) 4m நீளமான அளவு நாடவில் இருந்து வெட்டி எடுக்கக்கூடிய 25cm அளவான சிறிய துண்டுகள் எத்தனை? .............................................

(23) 618 கதைப்புத்தகங்களை 3 வகுப்புக்களுக்கிடையில் பங்கிட்டால் இரு வகுப்புக்களுக்குக் கிடைக்கும் கதைப்புத்தகங்கள் எத்தனை? .............................................

(24) ஒருவர் ரூபா 500.00 ஐக் கொடுத்து ரூபா 62.00 பெறுமதியான 4 பொம்மைகளை வாங்கினார் எனின் அவர் மீதியாகப் பெறும் பணம் எவ்வளவு? .............................................

(25) இவ் திண்ம உருவில் உள்ள



1. முகங்களின் எண்ணிக்கை யாது? ..............................
2. ஓரங்களின் எண்ணிக்கை யாது? ..............................

(26) ஒரு பாத்திரத்தில் 4 l 750 ml பாலும் மற்றைய பாத்திரத்தில் 7 l 500 ml பாலும் இருந்தது. இரு பாத்திரங்களிலும் உள்ள பாலின் அளவு சமனாவதற்கு கூடிய பால் உள்ள பாத்திரத்தில் இருந்து குறைந்தளவு பால் உள்ள பாத்திரத்திற்கு ஊற்றப்பட வேண்டிய பாலின் அளவு யாது?


..............................

(27) தாயின் நிறை 52 Kg 300 g மகனின் நிறை தாயின் நிறையின் 1/2 மடங்கு எனின், இருவரதும் மொத்த நிறை யாது?
..............................

(28) குறித்த ஒரு இடத்தில் மோட்டார் கார் ஒன்றின் மானி வாசிப்பு | 0 | 4 | 9 | 9 | 5 | km என்றவாறு காணப்பட்டது. இவ்வண்டி மேலும் 25 km நகர்ந்தால் மானிவாசிப்பு மாற்றமடையும் விதம் யாது?

| | | | | | km

(29) 14 என்னும் இந்து அராபிய எண்ணை உரோம எண்ணாக மாற்றினால் அதனை ஆக்குவதற்கு தேவையான நேரான சம அளவுடைய ஈர்க்குகள் எத்தனை?
..............................

(30) 

இவ் உருவின் சுற்றளவு யாது? ..............................

(31) தமிழ், சிங்கள புது வருடதினத்தையொட்டி பூக்கும் தாவரம் எது?
1. மா 2. வேம்பு 3. இறப்பர் 4. றம்புட்டான்

(32) பின்வரும் தானியங்களில் பருமனில் சிறிய அளவுடையது எது?
1. எள்ளு 2. சோளம் 3. கடுகு 4. நெல்

(33) வித்து முளைப்பதற்கு அவசியமில்லாத காரணி எது?
1. சூரியஒளி 2. நீர் 3. வெப்பம் 4. வளி

(34) பிளேக் என்னும் கொள்ளை நோயைப்பரப்பும் உயிரினம் எது?
1. நுளம்பு 2. எலி 3. ஈ 4. குரங்கு

(35) நிலத்தில் புதையுண்ட எப்பொருள் மிக விரைவாக உக்கலடைந்து செல்லும்?
1. துணி 2. கடதாசி 3. பொலித்தீன் 4. ரயர்


(36) புத்தகங்களை அரித்து சேதப்படுத்தும் பிராணி அல்லாதது எது?
1. எலி 2. இராமபாணம் 3. நத்தை 4. கறையான்

(37) பின்வரும் வித்துக்களில் பிராணிகள் மூலம் பரம்பலடையும் வித்து எது?
1. புலிநகம் 2. தேங்காய் 3. எருக்கலை 4. வெடிபலவன்

(38) 
இவ் உருவில் உள்ள கால் அமைப்பு எப் பறவைக்குரியது?
1. கொக்கு 2. சேவல் 3. மரங்கொத்தி 4. காகம்

(39) எமது உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவாக அமைவது எது?
1. வல்லாரை 2. பருப்பு 3. சோறு 4. மாம்பழம்

(40) நீரில் இடப்பட்ட பனிக்கட்டி ஒன்றின் சரியான நிலை யாது?



1. 2. 3. 4.

(41) புகையிரதப் பாதை ஒன்றை தேசப்படத்தில் குறித்துக் காட்ட பயன்படுத்தும் நிறம் யாது?
1. பச்சை 2. நீலம் 3. கபிலம் 4. கறுப்பு

(42) இலங்கையில் படகமுவ வனம் அமைந்துள்ள மாவட்டம் எது?
1. புத்தளம் 2. இரத்தினபுரி 3. குருநாகல் 4. அம்பாறை

(43) இலங்கையின் நீளமான நதியானது கடலுடன் சங்கமமாகும் இடம் எது?
1. திருகோணமலை 2. மட்டக்களப்பு 3. களுத்துறை 4. கொழும்பு

(44) இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள வாளேந்திய சிங்கம் எந் நிறத்தில் அமைந்துள்ளது?

1. செந்நிறம் 2. மஞ்சள் 3. பச்சை 4. செம்மஞ்சள்

(45) இலங்கை அரச இலட்ச்சினையில் நெற்கதிர்கள் எதனைக் குறித்து நிற்கின்றது?

1. சௌபாக்கியம் 2. தன்னிறைவு 3. உலகநிலைப்பாடு 4. தூய்மை

(46) இலங்கையின் தேசிய அம்சங்களுள் அடங்காதது எது?

1. நாகமரம் 2. மர அணில் 3. கரப்பந்து 4. நீலோற்பலம்

(47) பின்வரும் இசைக்கருவிகளில் கஞ்சற்கருவி எது?

1. புல்லாங்குழல் 2. கைத்தாளம் 3. நாதஸ்வரம் 4. மிருதங்கம்

(48) **RDA** இவ் ஆங்கில சுருக்கக் குறியீட்டிற்குரிய நிலையம் எது?

1. இலங்கை அஞ்சல் திணைக்களம் 2. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
3. வீதி அபிவிருத்தி அதிகார சபை 4. போக்குவரத்து அதிகார சபை

(49)  இவ் வீதி சமிக்சை குறிப்பது எதனை?

1. முன்னால் இடப்பக்க வளைவு 2. முன்னால் வலப்பக்க வளைவு
3. முன்நோக்கிச் செல்க 4. வாகனம் செல்க

(50) வெல்லக்கட்டி மிக விரைவாகக் கரையக் கூடிய பதார்த்தம் எது?

1. வெந்நீர் 2. தண்ணீர் 3. மென்பானம் 4. குளிர்நீர்

(51) பின்வரும் சாதனங்களில் சூழல்நேயப் போக்குவரத்துச் சாதனம் எது?

1. மோட்டார் வண்டி 2. புகையிரதம் 3. துவிச்சக்கரவண்டி 4. ஆகாய விமானம்

(52) மொழி உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்காக அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்?

1. 1929 2. 1919 3. 1948 4. 1956

(53) பின்வரும் உலோகங்களுள் காந்தத்தால் கவரப்படாத உலோகம் எது?

1. அலுமினியம் 2. நிக்கல் 3. இரும்பு 4. குரோமியம்

(54) ‘நண்டு நறுக்கிப் பொன்னி ஆணமும் காச்சி....’ எனும் பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் எது?

1. தோணி ஓட்டுதல் 2. மீன்பிடிப் பாடல் 3. அருவி வெட்டுதல் 4. சேனை காத்தல்

(55) பின்வரும் விளையாட்டுக்களில் கிராமிய விளையாட்டாக அமைவது எது?

1. கிறிக்கெற் 2. கரப்பந்து 3. வலைப்பந்து 4. கிளித்தட்டு

(56) பின்வருவனவற்றுள் கட்புல, செவிப்புல சாதனமாக அமைவது எது?

1. தொலைக்காட்சி 2. வானொலி 3. தொலைபேசி 4. பத்திரிகை

(57) இலங்கையில் சாதாரண தபால் ஒன்றிற்கான கட்டணம் யாது?

1. ரூபா 5.00 2. ரூபா 10.00 3. ரூபா 4.50 4. ரூபா 60.00

(58) வலைப்பந்து விளையாட்டின்போது ஒரு குழுவில் பங்குபெறும் வீரர்களின் எண்ணிக்கை யாது?

1. 05 2. 06 3. 07 4. 11

(59) இலங்கை குடியரசான ஆண்டு யாது?

1. 1948 2. 1956 3. 1972 4. 1802

(60) பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு மிகவும் உகந்த மண் எது?


1. செம்மண் 2. மணல்மண் 3. களிமண் 4. சுண்ணாம்புமண்

சரியான வினாக்களின் எண்ணிக்கை. [ ] மொத்தப்புள்ளிகள். [ ]

விருதுகள்

# ஒளியரசியின் பாராட்டைப் பெறும் 2015 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது பெற்ற சிரேஷ்ட படைப்பாளிகள்


சின்னத்துரை சண்முகநாதன்


எம்.அப்துல் ரபீக்


நாகலிங்கம் பத்தமசீலன்


சொ.ஜேசுதாசன் ஜெயக்குமார்


வண.டன்ஸரன் செல்வராஜ்


கா.சந்திரசேகரன்


சு.ராஜா கணேசன்


கு.இரத்தினலிங்கம்


ஏ.எல்.ஜமால்டீன்


செல்லத்தம்பி மகேசு


நாகேந்திரர் இலட்சுமணராசா


நா.ஆனந்தராஜ்


மல்லிகா கீர்த்தி


பத்மாவதி சோமகாந்தன்


பரீதா அப்துல் றாசீக்


ஏ.ஏ.பாத்திமா நஸிரா


மலர் சின்னையா


ஆ.ரகுபதி பாலஸ்ரீதரன்


பா.யசோதாதேவி


ஞா.போல் அன்டனி

 ✍ நிப்னா மஷர்



# ஹிஜாப் எவ்வாறு பாதுகாப்புக்கு உதவுகிறது

ஹிஜாபின் முக்கியத்துவமும் அதன் வரைவிலக்கணமும். ஹிஜாப் என்ற சொல் 'ஹஜப'' மறைத்தல் என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்ததாகும். ஒரு இஸ்லாமியப் பெண் தனது முழு உடலையும், அதிலிருந்து வெளிப்படும் அலங்காரங்களையும் அண்ணிய ஆண்களிடமிருந்து மறைப்பதற்காகவும் இன்னும் முக்கியமாக தனது கற்பை பாதுகாப்பதற்காகவும் காலா காலமாக அணிந்துவரும் ஓர் ஆடை அமைப்பாகும். இன்றைய நவீன உலகில் ஹிஜாப் என்ற இந்த ஆடை அமைப்பானது பலராலும்; பலவகையான கண்ணோட்டத்கதில் நோக்கப்படுகிறது. அதாவது நபி முஹம்மத் (ஸல்) அவர்களால் கொண்டுவரப்பட்ட இஸ்லாம் மார்கமானது பெண்களை ஹிஜாப் எனும் பெயரில் அடிமைப் படுத்துகிறது, இஸ்லாத்தில் ஆணாதிக்கம் மேலோங்கிக் காணப்படுகிறது, பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றது என்பது போன்ற குற்றச்சாட்டுக்களை வைப்பதன் மூலம் மேற்கத்தேய நாடுகள் இஸ்லாத்தின் மகிமையை இழிவுபடுத்த முனைப்போடு செயற்பட்டு வருகிறது.

பெண் என்பவள் தனது உடலமைப்பில் ஆண்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டவளாக காணப்படுகின்றாள்;. பெண்ணின் உடலமைப்பானது அழகானதும் இன்னும் பிறரைக் கவரக்கூடிய கவர்ச்சியான தோற்றத்தையும் கொண்டதாக காணப்படுகிறது. இதனை உலகத்தார் அனைவரும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டிய சூழ்நிலைக் கைதிகளாகின்றனர்.

பெண்கள் தங்களது ஆடைகளை இறுக்கமானதாகவும், மெல்லியதாகவும், குட்டையாகவும் ,அலங்காரம் நிறைந்ததாகவும் அணிந்து வெளியே செல்லும் போது பலவகையான மனநிலையிலுள்ள ஆண்களும் அவர்களைப் பார்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அதாவது திருமணமுடித்த, முடிக்காத ஆண்கள், தன் மனைவியுடன் சண்டைபோட்டு வெளியேறிய ஆண்கள், குடிகாரர்கள், கள்வர்கள், காம வெறியர்கள், இன்னும் நல்ல கற்பொழுக்கமுடைய ஆண்கள் என பலரும் அவர்களைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் அமைகின்றன. இதன் விளைவாகவே பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருகின்றன. இதனை நாம் நாளாந்தம் செய்தித்தாள்களிலும், வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும், பார்த்தும் கேட்டும் அறிந்து கொள்கின்றோம்.

(ஒட்டகத்தை அவிழ்த்துவிட்டு இறைவனிடம் பாதுகாப்புத் தேடுவதை விட கட்டி வைத்து விட்டு பாதுகாப்பு தேடுவதே சிறந்ததாகும்)

இஸ்லாமிய பெண்களின் ஆடையான ஹிஜாபிற்கு எதிரான கோஷங்கள் எழுகின்ற அதே வேளை எத்தனையோ மேற்கத்தேய பெண்கள் மற்றும் சினிமா நடிகைகள் என பலர் இந்த ஹிஜாபினால் கவரப்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு வருவது நாம் அனைவரும் அறிந்த உண்மையே. இன்னும் சிலர் இஸ்லாத்தை ஏற்காவிட்டாலும் ஹிஜாபை மட்டுமாவது நடைமுறைப் படுத்தி வருகின்றனர். அண்மைக்காலமாக எமது நாட்டிலும் அயல் நாடுகளிலும் அதிகரித்துவரும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு முக்கிய காரணம் இஸ்லாமியர்கள் அணியும் ஹிஜாபை ஏனைய மதத்தவர்கள் பேணாமை தான் என சில மாற்றுமதகுருமார்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். இன்னும் சில மேற்கத்தேய அறிஞர்களும் இதனை ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதனடிப்படையில் ஹிஜாபின் வரைவிலக்கணத்தை நோக்குவோம்

இஸ்லாமியப் பெண்கள் அவர்களுடைய வீட்டை விட்டு வெளியே செல்வதாக இருந்தால் அவர்களுடைய அழகு, கவர்ச்சி, அலங்காரம் என்பனவற்றை மூடி திரையிட்டு (ஹிஜாபை) பேணிக்கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் அல்குர்ஆனிலே கட்டளையிட்டுள்ளான். ஒரு பெண் ஹிஜாபை அணிகின்ற போது ஹிஜாபிற்கான நிபந்தனைகளும் அதன் ஒழுங்கு முறைகளும் பேணப்பட வேண்டும். அந்த வகையில்:-

01. முழு உடலையும் மறைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.
    ஒரு முஸ்லிமான பெண்மணி ஹிஜாபை அணிகின்ற போது அந்த ஹிஜாபானது முழு உடலையும் மறைக்கக் கூடியதாகவும் அவளது அங்கங்கள் வெளியில் தெரியாத வண்ணம் அமைந்திருக்க வேண்டும். அதாவது முகம், மணிக்கட்டு என்பவை தவிர ஏனைய அனைத்து உறுப்புக்களும் மறைக்கப்பட வேண்டும்.
02. இறுக்கமானதாக இருத்தல் கூடாது.
    ஹிஜாப் என்பது பெண்ணின் உடலோடு ஒட்டிய வண்ணம் இருப்பது கூடாது. உடலோடு ஒட்டும் இறுக்கமான ஆடைகளை அணியும் போது உடலில் உறுப்புக்கள் அனைத்தும் வெளியில் தெரியும் வண்ணம் காணப்படுகின்றது. எனவே இது ஹிஜாபாக கருதப்பட மாட்டாது.
03. மெல்லியதாக இருத்தல் கூடாது.
    ஒரு முஸ்லிம் பெண்ணானவள் அவளது ஆடைகளை மெல்லியதானதாகவன்றி அடர்ப்பமானதாக அணிந்து கொள்ள வேண்டும் அவ்வாறு மெல்லிய ஆடைகளை அணிந்து கொள்வதன் மூலம் அன்னிய ஆண்கள் கவரப்பட்டு அவர்கள் பாவத்தில் வீழ்ந்து விட்டால் ஏதோ ஒரு வகையில் அந்தப் பாவத்திற்கு அந்தப் பெண் காரணமாக அமைந்து விடுவாள்.
    அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப் படுகின்ற பெண் வெட்கமும் நாணமும் உடைய பெண்ணாக இருந்தால் பிறர் தனது உடல் அங்கங்களை காணுகின்ற வகையில் அவளது ஹிஜாபை அமைத்துக் கொள்ள மாட்டாள்.
04. அலங்காரம் நிறைந்ததாக இருத்தல் கூடாது.
05. அன்னிய மதத்தவர்களின் ஆடைகளுடன் ஒத்ததாக இருத்தல் கூடாது.
06. புகழுக்காக அணியப்படக் கூடாது.
07. வாசனைத் திரவியங்கள் பூசப்பட்டதாக இருத்தல் கூடாது.எனவே ஹிஜாபின் வரையறைகளைப் பேணி இஸ்லாமிய கடமையை நிறைவேற்றுவதன் மூலம் எமது கற்பை பாதுகாத்துக்கொள்ள எல்லாம் வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கும் அருள் புரிவானாக.

ஜனவரி 2016
OLIARAZI
மகளிர் மாத சஞ்சிகை

# ஒளி அரசி

இல்லத்தரசிகளின் தோழி
நல்லதொரு குடும்பம்
இதழ் 02
ஒளி 03
பக்கங்கள் : 68 + VIII
ரூபா 75

அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வெற்றி + பொழுதுபோக்கு

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

காயம் பட்ட உள்ளங்கள் கைதொழுத தெய்வம்

அவனின்றி அணுவும் அசையாது

சேற்றில் கை


நமக்கு நாமே பொலிஸ்

பிரமுகராக வந்தவரே வாழ்க்கைத் துணையானால்...

எதற்காக இந்தத் தண்டனை







ஹிஜாப்பின் முக்கியத்துவம்

வாசிப்பை நேசிப்பாய்

சாதனை மாணவி நிந்தவூர் இன்பாசா



2016 வண்ணக் கலண்டர் உள்ளே...

திருத்தற் சேவையுடன் தரம் 5 வினாத்தாள்

முத்தமிழில் ஜொலிக்கும் கலைப் பொக்கிஷம்

# European Language Training Centre

## நத்தார் புதுவருட வாழ்த்துகள்

புதுவருடத்தை முன்னிட்டு எமது நிறுவனத்தில் பயிற்சி பெறும் மாணவ மாணவியர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

**வவுனியா**
சிவன் கோவிலடி,
கோயில்புதுக்குளம்,
வவுனியா.

- **French** - (பிரான்ஸ், கனடா, சுவிஸ் செல்வோருக்கான பரீட்சை) (DELF) A1 அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
- **German** - ஜேர்மனி, சுவிஸ் செல்வோருக்கான (Goethe - zertifikat A1)
- **English** - (Speaking, A1, IELTS)
- **Sinhala** - (அரச உத்தியோகத்தர்களுக்காக)

வகுப்புகள் ஆரம்பித்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
அனுமதிக்கு முந்துங்கள்.

072-6134725 / 075-5202317
024-5616556




**கிளிநொச்சி**
T.P 076-8304043
இல :- 07, பழைய கச்சேரி அருகாமை,
கிளிநொச்சி.

Email : europeanlanguage2015@gmail.com